Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை; சிறு மழைக்கான சாத்தியம் உண்டு
34°C 28°C



**உலகம்**



பக். 05

தலிபான்களுடன் பேசுவதே தீவிரவாதத்தை குறைக்க வழி

**செய்திகள்**



பக். 08

பயங்கரவாதச் சட்டம் நீக்கிய பின் காணாமற் போயினர் 300 தமிழர்

**விளையாட்டு**



பக். 23

வில்லியம்ஸின் துடுப்பாட்டம் வீழ்த்தியது பங்களாதேஷை

# செப்ரெம்பர் 7 வடக்கு தேர்தல்

கொழும்பு, மே 7

வடமாகாணத் தேர்தலை செப்ரெம்பர் ஏழாம் திகதி நடத்த அரசு தீர்மானித்துள்ளது. இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படவுள்ளது.

வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களுக்கான தேர்தலையும் அன்றைய தினமே நடத்துவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது என்று 'உதயன்' பத்திரிகைக்கு நம்பகரமாக அறிய வந்தது.


தேர்தல் அறிவிப்புக்கு முன்னர் வடக்கில் மாகாண சபையை உத்தியோகபூர்வமாக நிறுவுவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும் என்று அரசின் மூத்த அமைச்சர் ஒருவர் நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் வடக்கு மாகாண சபையை நிறுவுவதற்கான ஆணையை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கு விரைவில் வழங்குவார். அதைத் தொடர்ந்து பணிகள் விரைவுபடுத்தப்படும்.

மூன்று மாகாணங்களிலும் முதலமைச்சர் வேட்பாளர்களாக யாரை அறிவிப்பது என்பது பற்றி இப்போது அரச உயர்மட்டத்திலும், சுதந்திரக் கட்சி வட்டாரங்களிலும் ஆராயப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் வேட்பாளர் தெரிவில் சர்ச்சை ஏற்பட்டால் முதன்மை வேட்பாளர்கள் இன்றியே தேர்தலை சந்திப்பது பற்றியும் அரசு ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆளும் தரப்பிலுள்ள பங்காளிக் கட்சிகள் பல, மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த மாகாணங்களில் தனித்து போட்டியிடும் என்று கூறப்படுகிறது. (உ-சி)



"தேர்தல் அறிவிப்புக்கு முன்னர் வடக்கில் மாகாண சபையை உத்தியோகபூர்வமாக நிறுவுவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும்.

## போராளிகள் 375 பேர் இன்னும் தடுப்பில்

யாழ்ப்பாணம், மே 7

தமிழீழ விடுதலைப் புலிகள இயக்க முன்னாள் போராளிகள் 375 பேர் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் மூத்த ஆலோசகர் எஸ்.சதீஸ்குமார் தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு இறுதிக் கட்டப் போரின்போது விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறி 12 ஆயிரம் பேர் சரணடைந்திருந்தனர். இவர்கள் கட்டம் கட்டமாக புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்களில் 375 பேர் வரையில் எஞ்சியிருக்கின்றனர் என்றும் அவர்களும் நீதிமன்ற உத்தரவுக்கு அமையப் படிப்படியாக விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் சதீஸ்குமார் மேலும் தெரிவித்தார். (உ-5)



## இந்திய மீனவர்கள் 20 பேர் கைது

சென்னை, மே 7

தனுஷ்கோடியை சேர்ந்த 20 மீனவர்களை நேற்று அதிகாலை இலங்கை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர் என்று தமிழகச் செய்திகள் கூறுகின்றன.

2 நாட்டுப் படகுகளில் கடலில் மீன்பிடிக்கச் சென்ற சமயமே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அந்தச் செய்திகள் மேலும் கூறுகின்றன.

அவர்கள் எல்லை தாண்டி வந்தனர் என்று இலங்கைக் கடற்படையினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதே குற்றச்சாட்டுக்காக ஏற்கனவே கைது செய்யப்பட்ட மீனவர்கள் 56 பேருக்கும் எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்க மறியல் நீடிக்கப்பட்டது. அவர்களில் 30 பேர் மன்னாரிலும் 26 பேர் யாழ்ப்பாணத்திலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (உ-01-04-12)

## பிரபாகரன் நடத்தியது கீதாசார 'தர்மப்போர்'

### சிங்களப் பேராசிரியர் தெரிவிப்பு



கொழும்பு, மே 7

இலங்கை வரலாற்றில் எந்தவொரு போரும் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெறவில்லையென ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக வரலாறு மற்றும் தொல்லியல்துறை பீட பேராசிரியர் ரி.ஜீ.குலதுங்க தெரிவித்துள்ளார்.

காலியில் நடைபெற்ற தொல்பொருளியல் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய பேராசிரியர் குலதுங்க, "பிரபாகரன் போரில் ஈடுபட்டது பகவத் கீதையை அடிப்படையாகக் கொண்டுதான்" என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரலாற்றை எடுத்துக் கொண்டால், நடந்த போர் நிச்சயமாக இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருந்திருக்காது.

தொடர்ச்சி: பக்கம் 24

## 600 கிலோ மீன்கள் கொட்டடியில் மாட்டின

### டைனமற் வைத்துப் பிடிக்கப்பட்டவை

யாழ்ப்பாணம், மே 7

டைனமற் வெடியைப் பயன்படுத்திப் பிடிக்கப்பட்ட சுமார் 600 கிலோகிராம் மீன்களைத் தாம் கைப்பற்றி உள்ளனர் என்று கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் கூறுகின்றனர்.

கைப்பற்றப்பட்ட மீன்கள் அனைத்தையும் அழிக்குமாறு உத்தரவிட்ட யாழ்.



நீதிமன்று சந்தேகநபரை ரூபா 2 இலட்சம் சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தது.

தொடர்ச்சி: பக்கம் 24

## 66 தமிழர்கள் கைது

### படகில் ஆஸி. செல்ல முயன்றவர்கள்

கொழும்பு, மே 7

ஆஸ்திரேலியாவுக்கு படகில் செல்ல முயன்ற 66 தமிழர்களை நேற்று அதிகாலை தாம் கைது செய்துள்ளனர் என்று கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

ஹிக்கடுவை கடலில் கைது செய்யப்பட்ட இவர்கள் அனைவரும் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் கடற்படையினர் கூறுகின்றனர்.



கைது செய்யப்பட்டவர்கள் காலி கடற்படை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்ட பின்னர் மேலதிக நடவடிக்கைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைதானவர்களில் 19 சிறுவர்கள் மற்றும் 12 பெண்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (உ-01)

## ஊடகங்களின் கழுத்தை நெரிக்க முடியும் – டக்ளஸ்

யாழ்ப்பாணம், மே 7

"என்னால் ஊடகங்களின் கழுத்தை நெரிக்கவும் முடியும்; ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் முடியும்" என்று தெரிவித்தார் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா.

யாழ். நகரில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றின் பின்னர் பத்திரிகையாளர்களைத் தனியே அழைத்து அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடகடல் நிறுவனத்தின் புதிய இயந்திரங்களின் பணிகளைத் தொடக்கி வைக்கும் நிகழ்வு நேற்று நடந்தது. அதன் பின்னர் பத்திரிகையாளர்களைத் தனியே அழைத்துப் பேசினார் அமைச்சர்.

வடமாகாண தேர்தல் மற்றும் வலி.வடக்கு மீள்குடிமர்வு என்பன குறித்துத் தனது வழமையான கருத்துக்களைத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ், தனது பேச்சை ஒலிப்பதிவு செய்வதை நிறுத்துமாறு ஊடகவியலாளர்களிடம் தெரிவித்த பின்னர் மிரட்டல் பாணியில் கருத்துத் தெரிவித்தார்.

"என்னுடன் கதைத்து விட்டு வேறு ஏதாவது எழுதினால் என்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்க இயலும்; கழுத்தையும் நெரிக்க இயலும்" என்றார் அமைச்சர்.

அங்கு கூடியிருந்த பத்திரிகையாளர்களிடம் அமைச்சரின் கருத்து கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பொது இடத்தில் வைத்து பகிரங்கமாகத் தாம் மிரட்டப்பட்டமை ஊடக சுதந்திரத்திற்கு அமைச்சரால் விடுக்கப்படும் அச்சுறுத்தல் என்று அவர்கள் கூறினர். (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# முள்ளியவளை காணிப் பிரச்சினை சுமூகத் தீர்வுகாண நடவடிக்கை

## நீதியமைச்சர் ஹக்கீம் உறுதி

கொழும்பு, மே 07

எந்தவொரு சமூகத்தினருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் முள்ளியவளைக் காணிப் பிரச்சினைக்கு இணக்கமான தீர்வொன்றைக் காண நடவடிக்கை எடுக்கப்படும். எனினும் இதற்கு சிறிது கால அவகாசம் வேண்டும். உடனடியாக இந்தப் பிரச்சினையை தீர்த்துவிட முடியாது- இவ்வாறு தெரிவித்துள்ளார் நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் .

முல்லைத்தீவுக்கு நேற்று நடாளுமன்ற உறுப்பினர் முத்தலிப் பாவா பாரூக் சகிதம் நீதியமைச்சர் ஹக்கீம் சென்றிருந்தார். இதன் போது அவர் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், முல்லைத்தீவு பிரதேச செயலர் பி. குகநாதன் உள்ளிட்ட அதிகாரிகளையும் மக்களையும் சந்தித்து கலந்துரையாடினார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்ததாவது.



முள்ளியவளைக் காணிப் பிரச்சினை தமிழ்- முஸ்லிம் சமூகங்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் நோக்குடன் பூதாகரமாக்கப்பட்ட ஒன்றாகும். இந்த விடயத்தை மிகவும் பக்குவமாக அணுக வேண்டும். தற்போது எழுந்துள்ள காணிப் பிரச்சினைக்கு அவசரமான தீர்வினைக் காணமுடியாது உள்ளது ஏனெனில் பிரச்சினைகள் பல்வேறு வடிவங்களில் எழுந்துள்ளன.

புதிய காணிகள் மற்றும் காணிகளுக்கான ஆவணங்கள் என்பவற்றை நடமாடும் சேவைகளின் மூலம் உரிய அதிகாரிகளே வழங்க முடியும். தமிழ், முஸ்லிம் மக்களுக்கு உரிய முறையில் காணிகள் வழங்கப்பட்டு உதவிகள் சரிவரக் கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும். அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் இந்தப் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாட வேண்டும். இந்தக் காணிப் பிரச்சினையில் அரசியல் தலையீடும் காரணியாக இருப்பதால் உரிய தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடி எந்தவொரு சமூகத்துக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், ''தற்போது புதிய பிரச்சினை ஒன்றும் எழுந்துள்ளது. குறித்த காணி தமக்குச் சொந்தமானது எனவும் இதனை மக்களுக்குப் பகிர்ந்தளிக்க அனுமதிக்க முடியாது எனவும் வன வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது. காணியற்றவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. புதிய சுற்றறிக்கைகளின்படி அவர்களுக்குரிய காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். காணியற்றவர்களுக்கு புதிய காணிகளை வழங்கவும், காணி தொடர்பான பிணக்குகளை தீர்க்கவும் ஒரு குழுவினை அமைத்து அதன் மூலமே தீர்வுகாண வேண்டும். கடந்த 30 வருடங்களாக எந்தவொரு காணிக் கச்சேரி நடத்தப்படாமையும் இந்த நிலைக்கு ஒரு காரணம்'' என்றார்.

(ங-6-ரி)

# வவுனியா டிப்போ சாரதிகள் நேற்று சில மணி நேரம் பணிப்புறக்கணிப்பு



வவுனியா, மே 07

போக்குவரத்துச் சபை வவுனியா டிப்போவின் பஸ் சாரதியை பொலிஸார் கைது செய்தமையைக் கண்டித்து சாரதிகள் நேற்று சில மணி நேரம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

பம்பைமடுப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற தனியார் பஸ் விபத்தை அடுத்து அப்பகுதியில் சேவையில் ஈடுபட்ட இ.போ.ச.சாரதியை போக்குவரத்துப் பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்திருந்தினர்.

இந்த விபத்துக்கும் சாரதிக்கும் தொடர்பு ஏதும் இல்லை எனக் கூறும் சக ஊழியர்கள் போக்குவரத்துப் பொலிஸார் கைது செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், கைது செய்யப்பட்ட சாரதியை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை சாலை நிர்வாகம் மேற்கொள்ளாமையைக் கண்டித்துமே பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இ.போ.ச.சாரதிகளின் பணிப்புறக்கணிப்பில் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாது பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, நேற்றைய விபத்து தொடர்பாக மேலும் கூறப்பட்டதாவது:

இ.போ.ச. பஸ் முந்திச் கொண்டு சென்ற சமயமே வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் தனியார் பஸ் மோதியது என்றும்

அதன்போது தனியார் பஸ்ஸில் சென்ற பயணிகள் 6 பேர் காயமடைந்தனர் என்றும், அவர்கள் வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ 100)

# அஸாத்தை விடுதலை செய்ய; ரிஷாத்தின் கட்சி கோரிக்கை

கொழும்பு, மே 07

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ள அஸாத்சாலியை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்து, ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அஸாத் ஸாலியின் விடுதலை தொடர்பில் ஏனைய முஸ்லிம் கட்சிகள் ஒருமித்து செயற்படுவது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் என்பவற்றுடன் அவசர கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டதாகக் கட்சியின் செயலாளர் நாயகம் ஹமீட் கூறினார்.

# முஸ்லிம்களை வடக்கிலிருந்து வெளியேற்றியது தவறுதான்

## சுமந்திரன் கூறுகிறார்

கொழும்பு, மே 07

வடமாகாணத்திலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றி இனச் சுத்திகரிப்புச் செய்தது தவறு என்பதை ஏற்றுக்கொள்ளும் பட்சத்திலேயே தமிழ்த் தரப்பு மற்றவர்களிடம் நியாயம் கோர முடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகரான தந்தை செல்வாவின் 36ஆவது நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவை விசாரணை நடத்த வேண்டுமென்பதை தற்போது ஏற்றுக் கொண்டிருக்கிறது.

அதில் கூறப்பட்டுள்ளது மனித உரிமை விடயத்திலே இருதரப்பினர்களும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கெதிராக குற்றம் புரிந்துள்ளார்கள்.

சர்வதேச சட்டங்களுக்கு முரணாக எங்களுடைய பூர்வீக நிலம் தற்போது சுவீகரிக்கப்படுகின்றன என்பதையும் சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

அதேநேரம், எங்களுடைய தரப்பிலிருந்தும் தவறுகள் உள்ளதை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். வடக்கிலிருந்து முஸ்லிம் சகோதரர்கள் வெளியேற்றப்பட்டதை எவரும் நியாயப்படுத்த முடியாது. இது கசப்பான உண்மை. நாங்களும் இனச் சுத்திகரிப்புக் குற்றவாளிகள் என்பதை ஏற்றுக் கொள்ளும் வரைக்கும் எமக்கெதிரான அடக்கு முறைகளை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளாது - என்றார்.

# விமானத்துறை தொழில்கள் பற்றிய கருத்தரங்கு இன்று நகரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 07

விமானத்துறை தொழில் வாய்ப்புக்கள் பற்றிய மூன்று நாள் கருத்தரங்கு இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின்றது. 'ஏசியன் எவியேஷன்' நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கருத்தரங்கு நாளையும், நாளை மறுதினமும் நடைபெறும்.

இன்று மாலை 3 மணிமுதல் 5 மணிவரை யாழ்.நகர் கஸ்தூரியார் வீதியில் உள்ள 'கேற்வே' கணனி மற்றும் மொழி நிலையத்திலும் நாளை நெல்லியடியில் உள்ள 'கேற்வே' நிலையத்தில் மாலை 4 மணி முதல் 5.30 மணி வரையும், நாளைமறுதினம் 4 மணி முதல் 5.30 மணி வரை சாவகச்சேரி நவீன சந்தைக் கட்டடத்தில் உள்ள 'கேற்வே' நிலையத்திலும் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. 3 நாள்களும் காலை 8.30 முதல் 10.30 மணி வரை யாழ்.நகரிலுள்ள ஞானம்ஸ் விடுதியிலும் கருத்தரங்கு நடைபெறும்.



விமானப் போக்குவரத்து மற்றும் விமானத் தொழில் நுட்பம் என்பன உலகளவில் வெகுவாக விரிவடைந்து வருகிறது. இதனால் அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகுதிகள் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் மிக்க எதிர்கால சந்ததியினர் தேவைப்படுகிறார்கள். கல்வித் தகுதிகளுக்கு ஏற்ப நல்ல வருமானம் பெறுவதற்கு வாய்ப்பு உண்டு.

'மாணவர்களுக்கு (எதிர்கால விமான மற்றும் விண்வெளி தலைவர்களுக்கு) நல்வழிப் பாதை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகுதிகள் கொடுத்து அவர்களுடைய எதிர்காலக் கனவுகளை அடைய உதவி செய்வது 'ஏசியன் ஏவியேஷன்' நிறுவனத்தின் கடமையாகும்'' என்று அந்த நிறுவனம் கூறுகின்றது. இதனாலேயே இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அது தெரிவிக்கிறது. கருத்தரங்கில் விமானப் பயிற்சி மற்றும் விண்வெளிப் பொறியியல் பற்றிய தெளிவான அறிவும் விளக்கமும் வழங்கப்படும்.

ஏசியன் ஏவியேஷன் நிறுவனம் 1985 இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிறுவனம் கிங்ஸ்டன் பல்கலைக்கழகம், இங்கிலாந்து மற்றும் இலங்கை விமானப்போக்குவரத்து அமைச்சின் கீழ் இயங்குகிறது. இந்த நிறுவனம் சிறுவயதிலிருந்தே விமானம் மற்றும் விண்வெளித் துறைகளில் ஆர்வமாய் உள்ளவர்களுக்கு பிரகாசமான எதிர்காலத்துக்காக வழிப்பாதையை வழங்குகிறது.

(ஐ.)

# அஸாத் விடயத்தில் அமெரிக்கா அக்கறை

கொழும்பு, மே 07

அஸாத் ஸாலி தனது சட்டத்தரணிகளின் உதவியை நாடுவதற்கு அனுமதிக்கப்படவேண்டுமென இலங்கை அரசிடம் வலியுறுத்தியிருப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே. சீசன் தெரிவித்துள்ளார்.

'ட்விட்டர்' சமூக இணையத்தின் ஊடாக நேற்று குறும்பேட்டியொன்றை வழங்கிய தூதுவர், இலங்கையில் சட்டம், ஒழுங்குகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதை அமெரிக்கா விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் மதச் சுதந்திரம் குறித்து எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த தூதுவர், சர்வதேச மனிதாபிமான சட்டதிட்டங்களுக்கமைய மத ரீதியான சுதந்திரம் என்பது மிக முக்கியமான மனித உரிமை என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# அஸாத் சாலிக்கு நீதிகோரி சர்வதேசத்திடம் செல்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, மே 07

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயரான அஸாத் சாலிக்கு நீதிகோரி சர்வதேசத்திடம் முறையிடவுள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

''அஸாத் சாலி பயங்கரவாதி அல்லர்; வன்முறைவாதி அல்லர்; அவர் சமாதானத்தை விரும்பும் ஜனநாயகவாதி'' என்றும் கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது.

''அஸாத் சாலியை உடனடியாக விடுவிக்குமாறு அரசைக் கோரும் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் எனவும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். இல்லையெனில், அஸாத் சாலியைப்போல் இன்னும் பல ஜனநாயகவாதிகள் குறித்த சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்படும் நிலை ஏற்படும்'' என்றும் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அஸாத் சாலியின் கைது தொடர்பில் நேற்று உதயனிடம் கருத்துத் தெரிவிக்கும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''வன்னியில் இறுதி யுத்தம் முடிவடைந்த பின்னரும் அவசரகாலச் சட்டத்தையும், பயங்கரவாதத் சட்டத்தையும் அரசு நடைமுறையில் வைத்திருந்தது. அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காட்டிய எதிர்ப்பையடுத்து அவசரகாலச் சட்டத்தை மட்டும் இந்த அரசு நீக்கியது. ஆனால், பயங்கரவாதச் சட்டத்தை அரசு நீக்காமல் வைத்துள்ளது. அஸாத்தின் விடுதலையை வலியுறுத்தி ஜனநாயகவாதிகளுடன் சேர்ந்து போராட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவுள்ளது. அதேவேளை, அஸாத் சாலிக்கு நீதிகோரி சர்வதேசத்திடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முறையிடவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## சிந்தித்துச் செயற்பட வேண்டிய தருணம் இது; மனம் கொள்வோமா?

நாட்டின் அரசமைப்புக்குப் பத்தொன்பதாவது திருத்தத்தைக் கொண்டுவர அரசாங்கம் உத்தேசித்துள்ளது. மாகாண சபைச் சட்டத்தில் உள்ள காணி அதிகாரத்தைப் பிடுங்கி, அதனை மத்திய அரசிடம் வாரி வழங்குவது. அதே போன்று, பொலிஸ் அதிகாரங்களில் பிரதானமானவற்றை, மிக முக்கியமானவற்றை கபளீகரம் செய்து மத்திய அரசுக்குத் தாரை வார்ப்பது.

இவற்றை நாடி பத்தொன்பதாவது நகல் வரைவைத் தயாரிக்கும் பணிகள் ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் ஆரம்பமாகி விட்டதாகவும் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

அரசின் அங்கத்துவக் கட்சிகளான விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியும், சம்பிக்க ரணவக்கவின் ஹெல உறுமயக் கட்சியும் வடக்கு மாகாண சபைத் தேர்தலை உத்தேசிக்கப் பட்டுள்ளது போன்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் அவசர அவசரமாக நடத்தக் கூடாது என்று கர்ச்சிக்கின்றன.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் அது மஹிந்த அரசின் வீழ்ச்சியின் ஆரம்பம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் அமைச்சர் சம்பிக்க.

மொத்தத்தில், அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களே சிங்களக் கடும்போக்காளர்களின் கண்களைக் குத்துகின்றன.

இதேவேளை, வடக்கு மாகாண சபைத் தேர்தலை செப்ரெம்பர் மாதத்தில் நடத்துவதில் அரசுக்கும் உண்மையான விருப்பம் இல்லை. மீள்குடியேற்றம் முழுமை அடையும் வரை தேர்தலை நடத்தக் கூடாது என்பதே அதன் மனதார்ந்த முழுமையான விருப்பம் எனலாம். அதற்கிடையில் வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் சிங்கள மக்களை- சிங்கள வாக்காளர்களைக் குடியேற்ற வேண்டும் என்பதே சூக்குமமான உள்ளார்ந்த நோக்கம்.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்கு, வடமாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கான வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வடக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்த விடமாட்டோம்-

இவ்வாறு சிங்கள தேசிய அமைப்புக்களின் ஒன்றியம் கர்ச்சிப்பதும் அதற்கு முண்டுகொடுக்கும் 'பிரகடனம்' எனக் கொள்ளலாம்.

கடந்த வாரத்தில் லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் அமைச்சர்கள் மட்ட செயன்முறைக் குழுக் கூட்டத்துக்கு முன்னதாக, இங்கு ஜனாதிபதி திடீரென வடக்கு மாகாண சபைத் தேர்தல் குறித்து மீண்டும் அறிவித்திருந்தார்.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து கனதியான குற்றச்சாட்டுக்களை வெளியிட்டு வரும் சில அங்கத்துவ நாடுகளை, ஆசுவாசப்படுத்துவதற்காக இருக்கலாம் என்பது அவற்றில் ஒன்று என நம்பலாம். இந்தியா வழங்கிய யோசனையின் பிரகாரமே, ஜனாதிபதி அதனை அறிவித்தார் என்று கருதவும் இடமுண்டு!

அது பல நோக்கங்களை, இலக்குகளைக் கொண்டது எனக் கொள்ளலாம்.

எந்த வகையில் சுற்றிவளைத்துப் பார்த்தாலும், சிங்கள இனவாதத் தரப்புகளின் கண்களை உறுத்துவது மாகாண சபைகள் வசம் உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க இயலாது. இது குறித்து இந்தப் பத்தியில் அண்மைக் காலத்தில் அடிக்கடி சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

மாகாண சபைகளுக்கு உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை இல்லாமல் செய்வது முதலாவது இலக்கு என்றால்-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்தி, அதனைப் பல சிதிலங்களாக உடைத்துவிடுவது இரண்டாவது இலக்காகும்.

கடந்த சுமார் கால் நூற்றாண்டு காலமாக மாகாண சபைகள் இயங்கி வருகின்றன. எனினும் கிழக்கு மாகாண சபை உட்பட எந்த ஒரு மாகாண சபையும் காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கேட்டதில்லை.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆளும் கட்சியோ, அதற்குச் சாமரை வீசும் கூட்டுக் கட்சிகளோ பதவிக்கு வந்தால், அரசு எந்தத் தொந்தரவும் வராது. தத்தமது வாய்களைப் பொத்திக் கொண்டு கிடைக்கும் சலுகைகளும் படைக்கப்படும் அதிகாரங்களும் போதும் என்று தமது சுயதேவைகளைப் பெற்றுக் கொள்வதோடு திருப்தி கொண்டுவிடும்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, மக்கள்- வாக்காளர்கள்- அமோகமாக வெற்றிபெற வைத்துவிட்டால் அரசின் உத்தேச சூழ்ச்சிகள் நலிந்து, மெலிந்து போய்விடும் என்று அரசு தனக்குள் அஞ்சும்.

அதனைத் தவிர்க்கவும், தடுக்கவும் வேண்டிய பொறுப்பும், கடமையும் வடக்கு வாழ் மக்களிடமே உண்டு. தமிழ்க் கூட்டமைப்பு தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றுவது காலத்தின் தேவை. அத்தகு நிலை நழுவிப் போனால், தமிழ்த் தேசிய இனம் மேன்மேலும் ஒடுக்கி நசுக்கப்படும். எங்களுக்குள்ளே இவ்வேளையில் எக்காரணம் கொண்டும் பிளவுகள் ஆகா; அவை வேண்டாம்.

தமிழர்கள் என்றுமே ஒன்றுபட்டதில்லை என்ற சரித்திரத்தை, 'முன்னுதாரணங்களை' முற்றாகத் துடைத்து எறிய வேண்டும். காலத்தின் தேவையும் அதுவே. இல்லையேல் [முள்ளிவாய்க்காலுக்கு அடுத்த] இரண்டாம் கட்ட அழிவுகளையும் இழப்புக்களையுமே அனுபவிக்க நேரிடும்.

இது குறித்து ஆழ்ந்து உணர்ந்து செயற்பட வேண்டிய தருணம் இது. சிந்திப்போமா..? ஒற்றுமை கொள்வோமா?

**அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கான நியமனம்**

# தவறான சுற்றறிக்கை குறித்து இன்னும் ஏன் மௌனம் சாதிக்கிறது வடமாகாண சபை?

## கேள்வி எழுப்புகின்றனர் தவிசாளர்கள்

யாழ்ப்பாணம், மே 7

அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கான நியமனம் தொடர்பில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை தவறானதென சுட்டிக்காட்டப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேலாகியும் வடமாகாண சபையினால் புதிய சுற்றறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை.

இதனால் உள்ளூராட்சி சபைகள் நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிக்கல்களை எதிர்கொள்வதாக தவிசாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

வடமாகாண உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட்டு, அதில் பெரும்பான்மையான சபைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தது. சபைகள் கைப்பற்றப்பட்டு ஒன்றரை வருடங்களின் பின்னரே, அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கான நியமனம் தொடர்பில் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருந்தது.

இருப்பினும் குறித்த சுற்றறிக்கையில், அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கான கல்வித் தகைமைகளைப் பொறுத்தவரையில் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தமிழ், சிங்களம் உள்ளடங்கலாக இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆகக் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் இந்தத் தரங்களின் அடிப்படைத் தகைமையாகத் தரம்-8 அல்லது தரம்-9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருக்க வேண்டும் என்று உள்ளூராட்சி சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் 01/1986 ஆம் இலக்க சுற்றறிக்கை, 06, 2006 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை, வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி அதிகார சபை அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர் சேவைப் பரிமாணக் குறிப்பின் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய உள்ளூராட்சி சபைகள் இந்தப் பதவிகளுக்கான கல்வித் தகைமையை தரம்-8 என்று நிர்ணயித்தே விளம்பரப்படுத்தியுள்ளன.

எனவே வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையை மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டு 3 மாதங்கள் கடக்கின்ற நிலையில் இன்னமும் திருத்தப்பட்ட புதிய சுற்றறிக்கை வடமாகாண சபையினால் வெளியிடப்படவில்லை.

இதனால் ஆளணி நியமனங்கள் தொடர்பில் தாம் சிக்கல்களை எதிர்கொண்டு வருவதாகவும், மக்களுக்கான சேவைகளை உரிய முறையில் வழங்குவதற்கு இடர்பாடுகளை எதிர்கொள்வதாகவும் சபைத் தவிசாளர்கள் குறிப்பிடுகின்றனர். (ஒ-5)

# இந்திய அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் உரிய முறையில் மக்களுக்குச் செல்வதில்லை

### வடபகுதி புத்திஜீவிகளும் சிவில் சமூகமும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 7

இந்திய அரசினால் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சொல்லப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தமிழ்மக்களை உரிய முறையில் சென்றடைவதில்லை. இவ்வாறானதொரு நிலையில் இந்திய உயர் அதிகாரிகள் வடபகுதிக்கு வந்து அவற்றைப் பார்வையிடுவதால் எந்தவித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

இவ்வாறு வடபகுதி புத்திஜீவிகளும், சிவில் சமூகத்தினரும் தெரிவித்துள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்ட வடமாகாணத்தில் பெரும் எடுப்பில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இந்திய அரசால் இந்தியாவில் விளம்பரப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆனால் வடபகுதி தமிழர்களுக்கு இந்திய உதவித் திட்டங்கள் உரிய முறையில் கிடைக்கவில்லையென்று இந்திய ஊடகங்கள் இந்திய அரசை விமர்சித்து வருகின்றன.

இந்த விமர்சனங்களை சமாளிப்பதற்காகவே இந்திய அதிகாரிகள் இங்கு அடிக்கடி பயணங்களை மேற்கொள்வதாக குற்றஞ்சாட்டும் வடபகுதி புத்திஜீவிகள், இதனால் தமிழ் மக்களுக்கு எந்தவித பயனும் ஏற்படப்போவதில்லையென குறிப்பிடுகின்றனர்.

தமிழ் மக்களுக்கென 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்திய வீட்டுத்திட்டம் இன்னமும் முழுமையடையாதுள்ளது. இந்த நிலையிலும், மேற்கொள்ளப்படும் வீட்டுத்திட்டத்தில் அரசியல் தலையீடுகள் இருப்பதைச் சுட்டிக்காட்டப்பட்ட பின்னரும் இந்திய அதிகாரிகள் அது தொடர்பில் அதீத அக்கறை எடுக்காமல் இருக்கின்றனர் என்று வடபகுதி புத்திஜீவிகள் குறிப்பிடுகின்றனர். (ந-5)

## அஞ்சல் திணைக்கள சிற்றூழியர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மே7

வடக்கு மாகாண அஞ்சல் திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள சிற்றூழியர் பதவிகளுக்கு தகைமை உடையவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (வ-9)

## வதிரியில் இலவச கணினிப் பயிற்சி

வடமராட்சி, மே 7

கரவெட்டி, வதிரியில் உள்ள வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தில் இலவச கணினிப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான கணினிப் பயிற்சி நிலையத் திறப்பு விழா கழகத் தலைவர் வி.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெற்றபோது புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்ற முகாமைத்துவ ஆலோசகரான இளைப்பாறிய திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.இராஜரட்ணம் நாடாவை வெட்டி நிலையத்தை திறந்து வைத்து, கணினிப் பயிற்சி வகுப்பினை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய பிரதி அதிபர் எஸ்.கிருஷ்ணகுமார், வல்வெட்டி விநாயகர் வித்தியாலய அதிபர் என்.மகேந்திரன், இளைப்பாறிய மேலதிக மாவட்டப் பதிவாளர் எஸ்.பவானந்தன் உட்படப் பலர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

கணினிப் பயிற்சி வழங்குவதற்கென 10 கணினி இயந்திரங்களும் இந்த நிலையத்துக்கென கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இலவச கணனிப் பயிற்சி வகுப்பில் பயிற்சி நெறியை மேற் கொள்ளமுடியும். கணினிப் பயிற்சி நெறியின் போதனாசிரியராக ஆர். ஜே.பற்றிக் பணியாற்றி வருகின்றார்.

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கழக உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு இந்த நிகழ்வில் வைத்து கல்வி ஊக்குவிப்பு நிதியும் வழங்கப்பட்டது. (ஒ-8)

# பருத்தித்துறை-யாழ்.750 சேவை தற்போது வழமை நிலையில்

### இயந்திரக் கோளாறு சீர்செய்யப்பட்டதை அடுத்து

யாழ்ப்பாணம்,மே 7

இயந்திரக் கோளாறு காரணமாக தொடர்ச்சியாக 3 நாள்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 750 இலக்க யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவை காலை 7 மணியிலிருந்து 8.00 மணிவரை-மூன்று சேவைகள்- தடைப்பட்டிருந்தன. எனினும் தற்போது அவை சீர்செய்யப்பட்டுள்ளதால் நேற்றிலிருந்து சீரான பஸ் சேவை நடைபெறுகிறது என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச்சாலை முகாமையாளர் கே.கந்தசாமி தெரிவித்தார்.

கடந்த 3 நாள்களாக குறிக்கப்பட்ட காலை நேர சேவையில் ஈடுபடும் 750 இலக்க பஸ் சேவை தடைப்பட்டிருந்தது. இதனால் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் பயணிகள் தனியார் பஸ்களை நாடவேண்டி இருந்தது. பருவகாலப் பற்றுச்சீட்டுப் பெற்றவர்களும் தனியார் பஸ்களில் பணம் கொடுத்து பயணிக்க வேண்டி இருந்தது. மாதாந்த பருவகாலப் பற்றுச் சீட்டையைப் பெற்றும் தனியார் பஸ்களுக்கு பணம் கொடுத்து பயணிக்க வேண்டியமை தொடர்பாக பாடசாலை மாணவர்களும், அரச உத்தியோகத்தர்களும் விசனம் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக இ.போ.ச.பருத்தித்துறை சாலை முகாமையாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது;

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 750, 751 இலக்க பஸ்கள் சில கடந்த ஓரிரு தினங்களாக இயந்திரக் கோளாறு காரணமாக பழுதடைந்து சேவையில் ஈடுபடுத்த முடியாதநிலை இருந்தது. இதனால் எம்வசம் உள்ள பஸ்களைப் பயன்படுத்தி குறிப்பிட்ட சில நேரங்களுக்கான பஸ் சேவைகள் வழங்கப்பட்டன.

எனினும் தற்போது இந்த பஸ்கள் சீர்படுத்தப்பட்டுள்ளதால் நேற்றிலிருந்து வழமையைப் போன்று தொடர்ச்சியாக சேவையில் ஈடுபட்டு வருகின்றன என்றார் அவர். (வ-ரி-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சுப்பையா நடராசா (அப்பையா)



கொக்குவில் மேற்கைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் சுப்பையா நடராசா நேற்று முன்தினம் (05.05.2013) ஞாயிற்றுக் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரிமளத்தின் அன்புக் கணவரும் ரகுநாதன் (கனடா), காஞ்சனா (கொழும்பு), ரஞ்சநாதன் (கனடா), ரங்கநாதன் (கனடா), மாதினி (கொழும்பு), மாதவி (கனடா), ஜெகநாதன் (கனடா), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலசரஸ்வதி (கனடா), கணேசநாதன் (இலங்கை வங்கி, சுன்னாகம்), பவளராணி (கனடா), சசிகலா (கனடா), காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் கருணாகரன் (கனடா), மீரா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05.2013) புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
கனடா: 0014162826314,
கொழும்பு: 0112736420, 0774708594

(8872) (23-16-14)

தகவல்:
நா.கணேசநாதன்
(இலங்கை வங்கி, சுன்னாகம்)

## வர்ணகுலசிங்கம் கிருஸ்ணரூபன்

(ஊழியர், அபான்ஸ் நிறுவனம்- திருநெல்வேலி)



நகுலேஸ்வராவீதி, கீரிமலையைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வர்ணகுலசிங்கம் கிருஸ்ணரூபன் நேற்றுமுன்தினம் (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வர்ணகுலசிங்கம் கலாதேவி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், பிரிய தர்சினியின் தம்பியும், சுகந்தினி (A/L 2013 யூனியன் கல்லூரி), கஜேந்திரன் (A/L 2014 யூனியன் கல்லூரி), சாந்தகுமார் (தரம்9 யூனியன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு அண்ணாவும், சின்னத்தம்பி பரமேஸ்வரி, நாகலிங்கம் (சரவணமுத்து -சிமெந்துக் கூட்டுத்தாபனம், சாச்சான்), நல்லம்மா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம். (சி/8873)(16.14.9) தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா கண்ணகை நேற்று (06.05.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் கறுப்பாத்தை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற அம்பலவானர் நாகம்மாவின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தவமணி, புஸ்பராணி மற்றும் சிவபாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), வரதராணி, காலஞ்சென்ற வரதலட்சுமி மற்றும் யோகலிங்கம் (ஜேர்மனி), தர்மகுலசிங்கம் (ரவி- கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற சிறிஸ்கந்தராஜா மற்றும் சதானந்தன், அம்பிகா (ஜேர்மனி), பத்மினிதேவி (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியும் செந்தில் தர்சிகா (ஜேர்மனி), ஜெயச்சந்திரன் (லண்டன்), கமல், மோகனவிஜிதா (லண்டன்), நிரோஸ், பிரசாந், திவ்யா (ஜேர்மனி), யுகந்தன் (பிரான்ஸ்), உசாநந்தினி, கேசவரூபினி, யோகராஜா, லாவண்யா, தேனுஜா (ஜேர்மனி), சஜீவன், துர்க்காயினி, கனியா (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பானுயா, சிந்துஜா (ஜேர்மனி) நிவேதா, சஜித் (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

இலகடி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தகவல்:
தர்மகுலசிங்கம்
(ரவி-மகன்)


# வேலை வாய்ப்பு

சைவ உணவகம் ஒன்றுக்கு கீழ்வரும் வேலையாள்கள் தேவை. மாதாந்த சம்பளம், வருடாந்த போனஸ், மூன்று நேர உணவு, தங்குமிட வசதியுடன் கீழ்க் காணும் வெற்றிடங்களுக்கு வேலையாள்கள் தேவை.

01.உணவு பரிமாறுபவர்(சப்பிளையர்கள்)
02. குசினி வேலையாள்கள்
03.அலுவலக உதவியாளர்கள் (ஆண், பெண் இருபாலரும்)
04. காசாளர்(இருபாலரும்)
05. முகாமையாளர்
06.பில் கிளார்க்
07. கணினி ரைப்பிங் விடயம் தெரிந்தவர்கள் (ஆண், பெண் இருபாலரும்)

இடம் பெயர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு:- 077 7917753,
36, 38, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.


# கண்ணீர் அஞ்சலி



05.05.2013 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த

## வர்ணகுலசிங்கம் கிருஸ்ணரூபன்

அவர்களின் பிரிவால் நாம் ஆழ்ந்ததுயர் அடைவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும்.
NORTHERN PC PARK, Kantharmadam, Jaffna.

# மரண அறிவித்தல்

## திருமதி இராசையா பூமணி



நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா பூமணி நேற்று (06.05.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-ராமாசி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகர்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், ரூபராஸ்வரன்(றூபன்), இலங்கேஸ்வரன் (இலங்கன்), சுதாயினி, சுபாசினி, பிரதீப் (தீபன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுமதினி, அஜந்தா, பிரதீபன், பிரதாபன் ஆகியோரின் பாசமிகு மாமியும், ஜனார்த்தனன், திவ்விய சாலினி,பிரசாலினி,சஞ்சீவன், பிரகாசன், பிரணவி, மதீசன் ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும், பூபதியின் அன்புச் சகோதரியும், இராசம்மா, செல்லம்மா,காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் தம்பிராசா, சரஸ்வதி, சதாசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

72/1, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,யாழ்ப்பாணம். (37095)(5.6)

தகவல்:
குடும்பத்தினர்.


# வீடு வாடகைக்கு

இரண்டு பரப்பு காணியுடன் 3 அறை கோல், டீவி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
இடம்- உரும்பிராய் சந்தி
தொடர்பு: 077 515 9348
(35163) (6.11)



# A/L பௌதீகவியல் மாணவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

தவிர்க்க முடியாத காரணங்களினால் Mr. R. KUMARAN, Mr.R. KUGEN ஆகியோரின் பௌதீகவியல் வகுப்புக்கள் தற்காலிகமாக **VCM INSTITUTE** இல் நடைபெறும்.

## MR. R. KUMARAN

A/L- 2013- TUES -07.05.2013 (இன்று) 11.30- 1.00 PM
A/L- 2015- TUES -07.05.2013 (இன்று) 03.30- 5.00 PM
A/L- 2014- THURS -09.05.2013 03.30- 5.00 PM

## MR. R.KUGEN
## A/L - DAY CLASS-

TUES -07.05.2013 (இன்று) 09.15- 11.00 AM

(பிரிவுII இற்கான நேர அட்டவணை விரைவில் அறிவிக்கப்படும்)


# மரண அறிவித்தல்கள்



## பிள்ளையார் சந்தணம்மா

வளலாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் மடம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிள்ளையார் சந்தணம்மா நேற்று (06.05.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நாகமுத்து பிள்ளையாரின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை (மிருக வைத்தியர்), தங்கம்மா தம்பதியரின் அருமை மகளும், தவவதனி, தர்சினி, தேன்மொழி, தாட்சாயினி, பிருந்தாபன் ஆகியோரின் அருமைத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2013) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பி.ப. 2 மணியளவில் வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மடம் வீதி,
யாழ்ப்பாணம். () (23-16-14)

தகவல்:
குடும்பத்தினர்.



## ஸ்ரீஸ்கந்தராசா கஜரூபன்

(உரிமையாளர் Top World Communication)

புத்தூர் மேற்கைப் பிறப்பிடமாகவும் கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீஸ்கந்தராசா கஜரூபன் நேற்று (06.05.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் சிவனேஸ்வரி தம்பதியரின் மகனும் சீவரத்தினம் - அன்னராசாகுமாரி தம்பதியரின் அன்பு மருமகனும் சுகிர்தாவின் பாசமிகு கணவரும் துவாருஜனின் பாசமிகு தந்தையும் கஜமுகனின் சகோதரரும் முருகானந்தன், கிருபானந்தன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் கணேஸ்வரன், சிவகுமாரி, கவிதா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2013) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3 மணியளவில் தகனத்துக்காக சிந்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] முருகப் பிள்ளையார் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (8878) (23-16-14)

தகவல்:
[illegible] (மாமா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆர்வக் கோளாறே பொஸ்டன் குண்டுவெடிப்பு



வோஷிங்டன், மே 7
பொஸ்டனில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகள் ஆர்வக் கோளாறு காரணமாகவே முன்னதாக வெடிக்க வைக்கப் பட்டுள்ளன என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
பொலிஸாரால் கைது செய்யப் பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டு வரும் 19 வயதான ஷோக்கர் சர்னயேவ்வே இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.
சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் போது குண்டுவெடிப்பை நடத்தவே அவர்கள் திட்டமிட்டிருந்தனர். எனினும் வெடிகுண்டுகள் வெகு சீக்கிரமே வெற்றிகரமாகத் தயாராகிவிட்டன. ஆர்வக் கோளாறால் குண்டுகளை முதலில் வெடிக்க வைத்துவிட்டு பின்னர் சுதந்திர தினத்துக்கு வேறு செய்துகொள்ளலாம் என்று நினைத்தோம் என்று விசாரணைகளில் தெரிவித்துள்ளான் ஷோக்கர் சர்னயேவ். (ற)



பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் ஏற்பட்ட கட்டட விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 600 ஐத் தாண்டியது. மீட்கப்படும் உடல்கள் அடையாளம் காண்பதற்காக அடுக்கப்பட்டுள்ளன.

## எகிப்து பிரதமரின் கார் மீது துப்பாக்கிச் சூடு

கெய்ரோ, மே 7
எகிப்துப் பிரதமர் ஹிஷாம் காண்டில் பயணம் செய்த கார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பிரதமர் காயங்கள் எதுவுமின்றித் தப்பிக் கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.
பிரதமர் காரில் பயணம் மேற்கொண்டபோது மற்றொரு வாகனத்தில் வந்தவர்கள் இவர் மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.
துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவர்கள் பிரதமரின் பாதுகாப்புப் பிரிவால் விரட்டிப் பிடிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



# தலிபான்களுடன் பேசுவதே தீவிரவாதத்தை குறைக்க வழி

## அமெரிக்கா கூறுவதைக் கேட்க வேண்டாம் பாக்.முன்னாள் பிரதமர் வலியுறுத்து

லாகூர், மே 7
தீவிரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவுக்கு உதவுவதை விட்டுவிட்டு தலிபான்களுடன் பேச்சு நடத்துவதே சிறந்த பயனைத் தரும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்.
பாகிஸ்தானில் எதிர்வரும் 11ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. பல்வேறு கட்சித் தலைவர்களும் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். கருத்து கணிப்புகளில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) கட்சி முன்னிலையில் இருப்பதாகத் தெரிகின்றது
இந்நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,
அமெரிக்காவில் 2001 செப்ரெம்பர் 11ஆம் திகதி நடைபெற்ற தீவிரவாத தாக்குதல் சம்பவத்துக்குப் பின்னர், சர்வதேச தீவிரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கைகளில் அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் உதவி வருகிறது. இதற்காக அமெரிக்கா



ஏராளமான பண உதவி அளிக்கிறது. ஆனால் இது பாகிஸ்தான் மக்களிடையே கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவுக்காக நடந்த சண்டையில் ஏராளமான பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்டதே இதற்கு காரணம்.
அமெரிக்காவின் துணையுடன் தலிபான்களை அழிப்பதால் மட்டுமே தீவிரவாதத்தை ஒழித்துவிட முடியாது. அல் குவைதா ஆதரவு பெற்ற பாகிஸ்தான் தலிபான் தீவிரவாதிகள் இராணுவ தாக்குதல்களால் வலுவிழந்துள்ளனர். எனவே இந்த விடயத்தில் அமெரிக்காவுக்கு உதவுவதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். தலிபான்களுடன் பேச்சுக்கள் நடத்துவது சரியான வழிமுறையாக இருக்கும் - என்று அவர் தெரிவித்தார்.(ற)

பாகிஸ்தானில் அமையும் நிலையான ஆட்சி அயல் நாடானா ஆப்கனில் தீவிரவாதத்தை ஒழிக்க உதவியாக இருக்கும் என்று அமெரிக்கா கருத்து வெளியிட்டுள்ள நிலையில், நவாஷ் ஷெரீப் தெரிவித்துள்ள கருத்து அமெரிக்காவை அதிருப்திக்குள்ளாக்கக்கூடும்.

## இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல்

ஜெருசலேம், மே 7
தமது நாட்டு எல்லைக்குள் இரு எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன என்று இஸ்ரேல் இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. இஸ்ரேலின் எய்லாட் நகர்ப் பகுதியிலேயே இந்தத் ரொக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.
ரொக்கெட்டுகள் வந்த திசை மற்றும் வேகத்தில் இருந்து அவை எகிப்து நாட்டின் சினாய் மாகாணத்தில் இருந்து ஏவப்பட்டிருக்கலாம் என்று தெரிவித்துள்ள இஸ்ரேலிய இராணுவம், எகிப்தின் சினாய் மாகாணத்தில், அல்-குவைதா சார்பு தீவிரவாத இயக்கங்கள் சமீபத்தில் பலம் பெற்றுள்ளனஎன்றும்குறிப்பிட்டுள்ளது.
இதேவேளை- இந்த தாக்குதலுக்கு உடனடியாகவே உரிமை கோரியுள்ளது, மக்லெஸ் ஷௌரா அல்-முஜாஹிதீன் இயக்கம். இரு 'கிராட்' ஏவுகணைகள் இஸ்ரேல்மீது ஏவப்பட்டன என்று அந்த இயக்கத்தின் இணைய தளத்தில் செய்திக்குறிப்பு வெளியாகியுள்ளது. (ற)

# மீண்டும் தாக்குதல்

## சிரிய ஆயுதக் களஞ்சியம் சேதம்

டமாஸ்கஸ், மே 7
சிரிய இராணுவ ஆயுத நிலைகள் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளன.
நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட அந்தத் தாக்குதலில் சிரிய இராணுவத்தின் இராணுவக் ஆயுதக் களஞ்சியம் ஒன்று முற்றுமுழுதாகச் சேதமடைந்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
தாக்குதல் நடத்தப்பட்ட இடத்திலிருந்து சுமார் 20 சதுர கிலோ மீற்றர் தூரத்துக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது போன்ற அதிர்வு ஏற்பட்டது என்றும் பெரும் தீப்பிழம்புகள் தோன்றின என்றும் உள்ளூர் வாசிகள் தெரிவிக்கின்றனர்.
இதேவேளை, சிரிய ஆயுத நிலைகள் மீது இஸ்ரேல் நடத்தும் விமானத் தாக்குதல்களுக்கு அமெரிக்கா தனது ஆதரவைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# மலேஷியத் தேர்தலில் வென்றது ஆளும்கட்சி

கோலாலம்பூர், மே 7
மலேஷியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 13ஆவது பொதுத் தேர்தலில் ஆளும் பாரிசான் தேசிய முன்னணிக் கட்சி பெரும்பான்மை பலத்துடன் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது. மொத்தமாக 222 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்றத் தேர்தலில் ஆளும் தேசிய முன்னணி 133 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. எதிர்க்கட்சியான மக்கள் கூட்டணி 89 ஆசனங்களைப் பெற்றது.
முன்னாள் அமைச்சரும், அன்வர் இப்ராஹிம் தலைமையிலான எதிர்க்கட்சிக் கூட்டணி ஊழல், எதேச்சதிகாரம், இனரீதியான பாரபட்சம் ஆகியவற்றுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து ஆளும் கட்சிக்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்திருந்தது. எனினும் எதிர்க்கட்சியினால் ஆட்சியைப் பிடிக்க முடியாது போயுள்ளது.
தேசிய முன்னணியின் வெற்றியின் பின்னர் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய மலேஷியப் பிரதமர் நஜீப் துன் ரசாக், ''அரசு வழங்கிய உறுதிமொழிகள் அடுத்த ஐந்து வருடங்களுக்குள் நிறைவேற்றப்படும்'' என்று உறுதியளித்த அதேவேளை, ''தேர்தல் நியாயமான நடத்தப்படவில்லை'' என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டை நிராகரித்தார்.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களில் 80 சதவீதமானவர்கள் வாக்களித்துள்ளனர் என்று அந்நாட்டுத் தேர்தல் ஆணையம் அறிவித்தது. மலேசிய வரலாற்றில் அதிகமான வீதத்தினர் வாக்களித்தமை இதுவே முதன்முறையாகும்.
இதற்கு முன்னதாக 1964ஆம் ஆண்டு 78.9 சதவீதமானவர்கள் வாக்களித்துள்ளதுடன் ஒப்பிடுகையில் 13ஆவது தேர்தலில் வாக்களித்தவர் விகிதம் புதிய சாதனை ஆகும்.
மலேசியா சுதந்திரமடைந்த 1956ஆம் ஆண்டு முதல் அதாவது அரை நூற்றாண்டுக்கு மேலாக பாரிசான் தேசியக் கூட்டணியே ஆட்சி செய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ற)



# சீனாவுடன் எப்போதும் சுமுகமான உறவில்லை

## ஜப்பான் துணைப் பிரதமர் கூறுகின்றார்

புதுடில்லி, மே 7
கடந்த 1, 500 ஆண்டுகளில் சீனாவுடன் ஒருபோதும் ஜப்பான் சுமுகமான உறவு கொண்டிருந்தது இல்லை என்று அந்த நாட்டின் துணைப் பிரதமர் தாரா அசோ தெரிவித்துள்ளார்.
இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தாரா அசோ, அங்கு வைத்துக் கருத்து வெளியிடும்போதே இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறுகையில்:-
''சீனாவுடன் நில எல்லைப் பரப்பை இந்தியா பகிர்ந்து கொண்டுள்ளது. அதேபோல், சீனாவுடன் கடல் எல்லைப் பரப்பை ஜப்பான் பகிர்ந்துள்ளது. ஆனால், கடந்த 1,500 ஆண்டுகளில் சீனாவுடன் ஜப்பான் சுமுக உறவுடன் இருந்தது இல்லை. சீனாவுடன் எல்லைப் பிரச்சினை இருப்பதால், இந்தியாவும் ஜப்பானும் இணைந்து ராணுவம் மற்றும் கடற் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும்.
ஜப்பான், இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து நெருங்கிய இராணுவ ஒப்பந்தம் மேற்கொண்டு பிராந்திய பாதுகாப்பின் நிலைத் தன்மையை உறுதி செய்ய வேண்டும்'' என்று தெரிவித்தார்.
கிழக்கு சீனா கடற்பகுதியில் உள்ள தீவு தொடர்பான விவகாரத்தில் ஜப்பானுக்கும், சீனாவுக்கும் இடையே தகராறு இருந்து வருகிறது. அதேபோல், இந்திய எல்லைப் பகுதிக்குள் அவ்வப்போது சீன இராணுவத்தினர் ஊடுருவி வருகின்றனர். இதைக் கருத்தில் கொண்டே தாரா அசோ இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார் என்று அரசியல் நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர். (ற)

## பாலியல் குற்றச்சாட்டில் பிரிட்டன் எம்.பி. கைது

லண்டன், மே 7
பிரிட்டன் நாடாளுமன்ற கீழவையின் துணைத் தலைவர் நைஜல் இவான்ஸ் (55) பாலியல் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.
இவான்ஸ் மீது இரு இளைஞர்கள் பாலியல் முறைப்பாட்டை செய்துள்ளனர். பிரிட்டனின் லங்காஷையர் பகுதியில் உள்ள அவரது வீட்டில் கடந்த 2009 ஆம் ஆண்டில் தன்னிடம் அவர் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டார் என்று முறையிடப்பட்டுள்ளது.
அதைத் தொடர்ந்து இவானை பொலிஸார் கைது செய்தனர். எனினும், அவர் ஜூன் 19ஆம் திகதி வரை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதார தடை விதித்தால் ஈழத் தமிழரே பாதிக்கப்படுவர்

### கம்யூ. செயலர் ராமகிருஷ்ணன் கருத்து



சென்னை, மே 7

இலங்கைக்கு எதிராக பொருளாதார தடை விதிப்பதால் தமிழர்களே அதிகளவு பாதிக்கப்படுவர் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் ராமகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதாரத் தடை விதிப்பதால் இலங்கை வாழ் தமிழர்களே அதிகளவு பாதிக்கப்படுவர் என்பதனை அரசியல் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் கம்யூனிஸ்ட் கட்சியின் உணர்வு பூர்வமான அழுத்தங்களை பிரயோகிக் காமல், தமிழர் பிரச்சினைக்கு காத்திரமான அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட வேண்டும். இலங்கையுடன் நட்புறவைப் பேணினால் மட்டுமே பேச்சுகள் இணக்கப்பாடுகளின் மூலம் தீர்வுத் திட்டம் நோக்கி நகரக் கூடிய சாத்தியம் காணப்படும். உணர்வுபூர்வமான அச்சுறுத்தல்கள் எச்சரிக்கைகள் நிலைமைகளை மோசமடையச் செய்யுமே தவிர, நன்மைகள் ஏற்படப் போவதில்லை - என்றார்.


இதேவேளை தமிழக அரசின் தீர்மானம், முதல மைச்சரின் கடிதம் ஆகிய வற்றை மத்திய அரசு பொருட்படுத்தவில்லை. இலங்கை தமிழர்களை மத்திய அரசு கைவிட்டு விட்டது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா தெரிவித்துள்ளார். (வ)

# நீங்கியது தடை

## உச்சநீதிமன்றம் அதிரடி

டில்லி, மே 7

'கூடங்குளம் அணு மின் நிலையம் இயங்குவதற்கு தடையில்லை' என்று உச்ச நீதிமன்றம் நேற்று அதிரடித் தீர்ப்பளித்தது. அதுமட்டு மல்லாது அணு மின் நிலையம் செயற்படுவதை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.



கூடங்குளம் அணுமின் நிலையப் பணிகளை நிறுத்தக்கோரி பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. கூடங்குளம் அணுமின் நிலைய அணுக்கழிவு, பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மனுதாரர்கள் பல்வேறு கேள்விகளை முன்வைத்து வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

பாதுகாப்பு விதிகளை முறையாகச் செயற்படுத்தும்வரை அணு உலையை இயக்கத் தடை விதிக்கவும் வலியுறுத்தப்பட்டது. இந்த வழக்கில் நேற்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் கே.எஸ். ராதாகி ருஷ்ணன், தீபக்குமார் ஆகியோர் அடங்கிய குழு நாட்டின் அணு சக்தி கொள்கைக்கு உச்சநீதிமன்றம் மதிப்பளிக்கிறது.

பயன்படுத்தப்பட்ட எரிபொருளை சேமிக்கும் முறையை மத்திய அரசு கையாள வேண்டும். கூடங்குளம் அணுமின் நிலையம் பாதுகாப்பாக இருப்பதாகவே அனைத்து குழுக்களின் அறிக்கைகளும் தெரிவித்திருக்கின்றன.

இதனால் கூடங்குளம் அணு உலை செயற்பட தடை விதிக்க முடியாது. கூடங்குளம் அணு உலை செயற்படலாம் என்று தீர்ப்பளித்துள்ளது.

ரஷ்ய நாட்டின் உதவி யுடன், இந்த அணு மின் நிலையம் ஆரம்பிக்கப் பட்டது. 14 ஆயிரம் கோடி ரூபா செலவில் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இரண்டு அலகுகளும் கட்டி முடிக்கப்பட்டன. அணு மின் நிலையம் இயங்க தயாரான நிலையில், கூடங்குளம் பகுதியில், சிலர், கடும் எதிர்ப்பை ஏற்படுத்தினர். தொடர் உண்ணாவிரதம், மறியல் போராட்டங்களை நடத்தினர். (வ)



டில்லி நாடாளுமன்ற வீதியில் வீதித்தடையை மீறி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிரதமர் வீட்டை முற்றுகையிடச் சென்ற சீக்கிய அமைப்பினரை பொலிஸார் கைது செய்தனர்.

## மும்பையைத் தாக்கலாம்

### அமெ. உளவுத்துறை மும்பை பொலிஸாருக்கு எச்சரிக்கை

மும்பை, மே 7

மும்பை மற்றும் கொல் கத்தா ஆகிய நகரங்களில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக அமெரிக்க உளவுத்துறை, மும்பை நகர பொலிஸாருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொல்கத்தாவில் உள்ள அமெரிக்க மையம் மற்றும் தூதரக அதிகாரிக்கு வந்த மர்ம கடிதத்தில் ஜூலை 21 ஆம் திகதி மும்பை மற்றும் கொல்கத்தாவில் குண்டுத் தாக்குதல் நடத்தப்படும் என தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தின் தலைப்பில் அல்-ஜிகாத் என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அது பெயரா அல்லது இயக்கத்தின் பெயரா என தெரியவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க தூதரகத்தை குறிவைத்து இந்த தாக்கு தல் நடத்தப்படும் என்பதால் அமெரிக்கர்கள் தூதரகத்தை காலி செய்துள்ளனர். இதனால் ஹைதராபாத், பெங் களூர், மும்பை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (வ)

## கர்நாடகாவில் 223 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நிறைவு

தென்னிந்திய மாநிலமான கர்நாடகாவின் சட்ட மன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்






கிழமை முடிவடைந்தது. 224 தொகுதிகளை கொண்ட மாநில சட்ட சபைக்கு ஒரு தொகுதி தவிர 223 தொகுதிகளுக்கு ஞாயிறன்று தேர்தல் நடைபெற்றது. பெரியபட்டணா என்ற தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் சாவடைந்ததால், அந்தத் தொகுதிக்கான தேர்தல் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல் பெருமளவில் அசம்பாவிதங்கள் ஏதுமின்றி அமைதியான முறையில் முடிவடைந்த தாகவும், வாக்குப்பதிவு இம்முறை 66 சதவீதத்துக்கு சற்று அதிகமாக இருந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# எல்லையில் திருப்பம் சீன படைகள் வாபஸ்

டில்லி, மே 7

இந்தியா - சீன இராணுவ அதிகாரிகளுக்கு இடையே இடம் பெற்ற 4 ஆவது கட்ட பேச்சில் சுமுக முடிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து, இந்திய எல்லையில் ஊடுருவி இருந்த சீன படைகள் உடனடியாக வெளியேறின.



இதனால் கடந்த 4 வாரங்களாக ஏற்பட்டிருந்த பதற்றம் தற்போது முடிவுக்கு வந்துள்ளது.

இந்திய கட்டுப்பாட்டு எல்லைக்குள் காஷ்மீர் மாநிலம் லடாக் பகுதியில் சீன இராணுவம் அத்துமீறி நுழைந்ததோடு, இந்திய எல்லைக்குள் 19 கிலோ மீட்டர் தூரத்துக்கு நுழைந்து முகாம் அமைத்தது. 5 கூடாரங்கள் அமைக்கப்பட்டு 50 படையினர் தங்கி இருந்தனர். சீனாவின் இந்த ஊடுருவல் இந்தியாவை அதிர்ச்சி அடைய வைத்தது.


இந்த விவகாரம் தொடர்பாக இரு நாட்டு இராணுவ அதிகாரிகளும் ஏற்கனவே 3 முறை கூடி பேச்சு நடத்தினர். ஆனாலும், எந்த சுமுக முடிவும் எடுக்கப்பட வில்லை.

இந்தநிலையில் 4 ஆவது கட்டமாக சூசுல்லில் இரு நாட்டு இராணுவ அதிகாரி களும் பேச்சு நடத்தினர். இதில் பிரிகேடியர் தர அதிகாரிகள் கலந்து கொண் டனர். 45 நிமிடங் [illegible] சீன இராணுவம் தரப்பில் கூறுகையில், இந்திய இராணுவம் சீன எல்லைக்குள் 300 மீற்றர் தூரத்துக்கு ஊடுருவி முகாம் அமைத்து உள்ளது. எங்களை வெளியேறும்படி கூறும் முன்னர், இந்தியா தனது படைகளை சீன எல்லையில் இருந்து திரும்பப் பெற வேண்டும் என்று கூறியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தியா தரப்பில் கூறும் போது, இருதரப்பினரும் ஒரே சமயத்தில் படைகளை திரும்பப்பெறலாம் என்றும் கூறியது.

இதனை சீனா ஏற்றுக்கொண்டது. இந்த பேச்சு விவரங்கள் இரு நாட்டு உயர் அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் 7.30 மணிக்கு சீனா தனது படை களை லடாக் பகுதியில் இருந்து திரும்பப் பெற்றுக் கொண்டது. அதேநேரத்தில் சீனா கூறிய பகுதியில் இருந்து இந்திய இராணுவமும் திரும்பப் பெறப்பட்டது. இதன் மூலம் கடந்த 4 வாரங்களாக ஏற்பட்டிருந்த பதற்றம் தற்போது முடிவுக்கு வந்துள்ளது. (வ)

## மகாத்மா காந்தியின் பொருள்கள் ஏலத்துக்கு

### பிரபல எழுத்தாளர் எதிர்ப்பு



கான்பூர், மே 7

மகாத்மா காந்தியின் பொருள்களை லண்டனில் ஏலம் விடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தப்போவதாக பிரபல எழுத்தாளரும், காந்திய வாதியுமான கிரிராஜ் கிஷோர் அறிவித்துள்ளார்.

1921 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி எழுதிய உயில் மற்றும் அவர் அளித்த அதிகாரப் பத்திரங்கள் முக்கிய கடிதங்கள், அவர் பயன்படுத்திய கோப்பை, தந்தத் தால் செய்யப்பட்ட புகழ் பெற்ற 3 குரங்கு பொம்மை உட்பட சில பொருள்கள், லண்டனில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஏலத்துக்கு விடப்படுகிறது.

இதைத் தடுத்து, காந்தி பயன்படுத்திய பொருள்களை மீட்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு கிரிராஜ் கிஷோர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஆண்டில், காந்தியின் மூக்குக் கண்ணாடி உள்ளிட்ட சில பொருள்கள் ஏலத்துக்கு விடப்பட்டபோது அப்போதைய ஜனாதிபதி பிரதிபா பட்டீலுக்கு கிஷோர் கடிதம் எழுதினார். அரசு தரப்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. காந்தியின் பொருள்கள் மீண்டும் ஏலத்துக்கு வரும் நிலையில் அதை தடுக்காவிட்டால் போராட்டம் நடத்துவேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடிச் சந்தையில் தூக்குத் தராசு பாவனை

## தகுந்த நிறை இல்லை என உள்ளூர் உற்பத்தியாளர் விசனம்

நெல்லியடி மே 7
நெல்லியடிச் சந்தையில் தூக்குத் தராசை பயன்படுத்தியே உற்பத்தியாளர்களிடமிருந்து உற்பத்திப் பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றன. இதனால் எமது உற்பத்திப் பொருள்களுக்குத் தகுந்த நிறை கிடைப்பதில்லை என்று உற்பத்தியாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பில் உற்பத்தியாளர்கள் மேலும் தெரிவித்ததாவது:-
நெல்லியடிச்சந்தையில் பொருள்களை அளவிட தூக்குத் தராசைப் பயன்படுத்துவதனால் ½ கிலோவுக்கு மேல் சில வேளைகளில் இல்லாமல் போகின்றன.
இதனைவிட உற்பத்திப் பொருள்களுக்கு 10:1 என்ற விகிதத்தில் உற்பத்திப் பொருள்கள் கழிவுடனேயே விற்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஆரம்ப காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் சந்தைகள் இயங்கிய போதுதான் 10:1 எனகழிவு வழங்கி பின்னர் விற்பனையாளர்களிடமிருந்து வரியும் அறவிடப்பட்டது. இதனால் அன்றைய காலத்தின் தேவை கருதி உற்பத்தியாளர்கள் விற்பனை செய்தனர்.
ஆனால்தற்போதும் இந்த நிலை வழக்கத்திலேயே இருக்கிறது.
பிடுங்கப்பட்ட உடனடி மரக்கறி, வெங்காயம் போன்ற உற்பத்திப் பொருள்களுக்கு கழிவு வழங்கினால் பரவாயில்லை.
அதற்குரிய சட்டத்தை உலர்ந்த நிறைகுறையாதவற்றுக்கும் பயன்படுத்துகின்றனர்.
இதேபோல் தம்புள்ளையிலிருந்து வரும் மரக்கறிகளின் பொதியில் நிறை குறிப்பிடப்பட்டிருக்கும்.
அந்த பொதிகளுக்கு எந்தவித கழிவுகளும் வழங்காமல் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்காமல் நிறை கழிவு செய்யப்படுகின்றது.
எனவே உரியவர்கள் இதனைக் கருத்தில் கொண்டு இலத்திரனியல் தராசு, நிறை கழிவுகளில் கவனம் செலுத்துமாறு வேண்டுகோள் விடுகின்றோம்- என்றனர். (வ-422)

## போதையில் வாகனம் செலுத்தியவர் கைது

யாழ்ப்பாணம்.மே 7
மதுபோதையில் மோட்டார் வாகனம் செலுத்திய ஒருவரை அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
புத்தூர் சந்திப் பகுதியில் மது போதையிலும், அனுமதிப் பத்திரம் இல்லாத நிலையிலும் மோட்டார் சைக்கிள் செலுத்திய ஒருவரை அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்து மல்லாகம் பொலிஸில் முன்னிலைப்படுத்தினர்.
மல்லாகம் நீதிமன்றத்தில் குறித்த வழக்கை விசாரித்த நீதிபதி குற்றவாளிக்கு 12 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு தீர்ப்பளித்தார். (வ-ரி)



காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தின் சைவக் களஞ்சியம் நூல் வெளியீட்டு விழா அண்மையில் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. நூலாசிரியர் கலாநிதி க.வைத்தீஸ்வரக் குருக்கள் நூலை வெளியிட்டு வைக்க நூலின் முதற் பிரதியை தொழிலதிபர் எஸ்.பி. நாகரத்தினம் பெற்றுக் கொள்கிறார்.

# குருநகரில் டெங்கு ஒழிப்பு

## மாநகரசபை சுகாதாரப் பிரிவினர் ஏற்பாட்டில்



யாழ்ப்பாணம், மே 7
யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவினரால் குருநகர் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் கடந்த வாரத்தில் இடம் பெற்றது.
குருநகர் மத்திய கிழக்கு, மேற்கு பகுதிகள் மற்றும் தண்ணீர் தாங்கி வீதிகளில் மேற்படி டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் இடம்பெற்றதாக குருநகர் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே.ராஜா தெரிவித்தார்.
டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தின் போது அந்தப் பகுதியில் உள்ள பொதுக் கிணறுகள் மற்றும் மக்களின் குடியிருப்பு கிணறுகள் போன்றவற்றுக்கு நுளம்பு குடம்பிகளைக் கட்டுப்படுத்துவதற்கான மின் குஞ்சுகளும் விடப்பட்டன.
பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே.ராஜா தலைமையில் சுகாதார பாதுகாவலர்கள், தொண்டர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் போன்றோரின் உதவியுடன் மேற்படி டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன.
அந்தக் குழுவினர் வீடு வீடாகச் சென்று டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொண்டதோடு குடியிருப்புப் பகுதிகளைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும என்ற அறிவுறுத்தல்களை மக்களுக்கு வழங்கினர்.
இதே வேளை குருநகர் பிரதேசத்தில் அநேகமான கழிவு நீர் ஓடும் வடிகால் வாய்கள் போதிய துப்புரவுப் பணிகள் இன்றிய நிலையில் காணப்படுகின்றன. (வ-17)

# சுகாதாரமற்ற போத்தல் குடிதண்ணீர் விற்பனையில்

## சுகாதாரத் திணைக்களத்தினர் மக்களுக்கு எச்சரிக்கை

தென்மராட்சி, மே 7
சுகாதாரமற்ற முறையில் உற்பத்தி செய்யப்படும் போத்தல் குடிதண்ணீர் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதால் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.
தற்போது குடாநாட்டில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக போத்தல்களில் விற்பனை செய்யப்படும் குடி தண்ணீர் அதிகளவு பொது மக்களால் கொள்வனவு செய்யப்படுகிறது.
சுகாதார அமைச்சில் பதிவு செய்யப்பட்ட உற்பத்தி நிறுவனங்களால் மட்டும் போத்தல் குடிதண்ணீர் தயாரிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
பதிவு செய்யப்பட்ட உற்பத்தி நிலையங்கள் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை புதுப்பித்தல் வேண்டும்.
விற்பனைக்கு விடப்படும் குடிதண்ணீர் போத்தல்களில் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட பதிவு இலக்கம், வருடம் ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும்.
ஆனால் உற்பத்தி நிறுவனங்கள் சில மூன்று வருடங்களின் பின்னர் புதுப்பித்தல் செய்யாத நிலையில் பழைய பதிவு இலக்கம், வருடம் குறிப்பிட்டு விற்பனைக்கு விட்டுள்ளனர்.
இவ்வாறு காணப்படும் பொது சுகாதாரப் பரிசோதகர்களால் பறிமுதல் செய்யப்பட்டுவருகிறது.
குடிதண்ணீர் போத்தல் விற்பனை செய்வோரும் அதனை வாங்குவோரும் அவதானமாக இருக்குமாறு சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (வ-9)

# குடாநாட்டு சந்தைகளில் முருங்கைக்காய் தாராளம்

யாழ்ப்பாணம், மே 6
குடாநாட்டில் பரவலாக முருங்கைக்காய் சீசன் ஆரம்பித்துள்ளதால் சந்தைகளில் முருங்கைக்காயின் விலை சடுதியாகக் குறைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.
காலபோக பயிர் செய்கைகளுக்கு ஏற்ப இந்த வருடம் விவசாயிகள் தோட்டப் பயிர்ச் செய்கையிலும், வீட்டுத் தோட்டங்களிலும் உள்ளூர் முருங்கைப் பயிர்ச் செய்கையையும், இந்தியன் ரக முருங்கைக் கன்றுகளையும் பயிரிட்டனர். குறிப்பிட்ட 3 மாத காலம் அல்லது 6 மாத காலப் பகுதிக்குள் விளைச்சல் பெறக் கூடியதாக முருங்கைக் கன்றுகளைப் பயிரிட்டுள்ளனர்.
குறிப்பாக இந்த வருடம் இந்தியன் ரக முருங்கைக் கன்றுகள் வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு கிராம பீதியாக வழங்கப்பட்டிருந்தன. எனினும் உள்ளூர் முருங்கைக் காய்களுக்கு தென்னிலங்கைப் பகுதிகளில் பெருமளவு கிராக்கி உள்ளதால் கிடைக்கக் கூடிய விளைச்சல்களைக் கொண்டு தற்போது முருங்கைக் காய்களைச் சந்தைகளுக்கு விற்பனைக்காக விட்டுள்ளனர்.
கடந்த மாதங்களில் 800 ரூபாவில் இருந்து 900 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்த முருங்கைக்காய் தற்போது சடுதியாக குறைவடைந்து 400 ரூபாவில் இருந்து 600 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
இதனை விட கிராமப் புறச் சந்தைகளில் நுகர்வோர் மிகக் குறைவான விலையில் முருங்கைக்காய்களை வாங்கக் கூடியதாக தாராளமாக முருங்



கைக்காய் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. தென்னிலங்கையில் இருந்து வருகை தருவோரும் அதிகமான உள்ளூர் முருங்கைக் காய்களை வாங்கிச் செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது. (வ-14)

# போக்குவரத்துப் பொலிஸார் தீவிர சோதனையில்

யாழ்ப்பாணம், மே 6
யாழ். குடாநாட்டில் போக்குவரத்து பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.
தற்போது அதிகரித்துள்ள வீதி விபத்துக்கள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் முகமாக பொலிஸார் வீதிகளில் திடீர் திடீரென தமது சோதனை நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளனர்.
வாகனங்களை மறித்து சாரதி அனுமதிப்பத்திரம், வாகன வரி மற்றும் காப்புறுதிப் பத்திரங்களை பரிசோதிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.
இவ்வாறு வாகன அனுமதிப் பத்திரங்கள் இன்றி செலுத்திச் செல்வோர் அதற்கான தண்டப் பணங்களையும் செலுத்தி வருகின்றனர்.
இது இவ்வாறிருக்க மறு புறத்தில் குற்றச்செயல்கள் தாராளமாக இடம்பெற்று வருகின்றன. (வ-17)

### சாதாரண தரப் பரீட்சையில் அதிகூடிய சித்தி பெற்ற

# சமுர்த்தி குடும்ப மாணவருக்கு கல்வி நிதி

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த வருடம் இடம்பெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்ற சமுர்த்தி குடும்பங்களைச் சேர்ந்த 36 மாணவர்களுக்குமாதாந்தம் கல்வி நிதி கிடைக்க வுள்ளது. தென்மராட்சி பிரதேச சமுர்த்தி மகாசங்க 'சிப்தொற' கல்வி நிதியத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 36 மாணவர்களுக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் க.பொ.த. உயர்தரப் பரீட்சை எடுக்கும் வரை (2 வருடங்கள்) குறித்த நிதி வழங்கப் படவுள்ளது. இந்தத் திட்டத்தில் முதலாவது கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி, தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், உதவிப் பிரதேச செயலர் செல்வி ர.நவரத்தினம், பிரதேச பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன் சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் க.விக்னேஸ்வரன் ஆகியோர் கல்வி நிதியை வழங்கினர். (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தாக்குதலின் பின்னணி புரிகிறது

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கூறுகிறார்

உதயன் பத்திரிகை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் இதுவரையில் முழுமையான விசாரணை நடவடிக்கையெடுக்காமை அதன் தாக்குதல்களின் பின்னணியை அனைவரும் தெளிவாக புரிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அண்மைக்காலமாக ஊடகங்கள் மீதும், சில அரசியல்வாதிகள் மீதும் தொடர்ச்சியான நடவடிக்கைகள் மற்றும் அடக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உண்மை நிலையை வெளிக்கொணரும் ஊடகங்கள் மீதும் மக்களின் உரிமையை வெளிப்படுத்தும் அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வடக்கில் இருந்து வெளிவரும் பத்திரிகையான உதயன் மீது தொடர்ச்சியாக அழுத்தங்களும் தாக்குதல்களும் இடம்பெற்றுவருகின்றமையானது இந்த நாட்டின் ஜனநாயக தன்மையினை வெளியுலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

இன்று ஊடக அடக்கு முறைகளுக்கு மத்தியிலும் தமது சமூகம் சார்ந்த பிரச்சினைகளை வெளிக்கொணர்வதில் பின்னிற்காமல் செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஓர் ஊடகத்தின் மீதான தாக்குதல் அதன் உண்மைத் தன்மையினை வெளிக்காட்டி நிற்கின்றது.

இவ்வாறான தாக்குதல்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்தவேண்டியது ஒரு அரசின் கடமையாகும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு லயன்ஸ் கழகத்தால் குடல் சம்பந்தமான நோய்களைக் கண்டறியும் 'ஸ்கேனர் இயந்திரம்' கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் கிழக்குமாகாண முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத், பௌத்த சாசன மத விவகாரங்கள் பிரதி அமைச்சர் எஸ்.குணவர்தன, லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் ஜனரஞ்சன் ஆகியோர் மலர் அஜைத்துச் செல்லப்படுகின்றனர். (40)

# காத்தான்குடியில் முதியவரின் சடலம் மீட்பு



மட்டக்களப்பு,மே 7

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி கடற்கரையில் முதியவரொருவரின் சடலம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி, 6ஆம் குறிச்சி ஜன்னத் மாவத்தையை சேர்ந்த அலியார் இப்றாகீம் (வயது 72) என்பவரது சடலமென்று அடையாளம் காணப்பட்டுள்ளது என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி கடற்கரையில் முதியவரொருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. (ச)

# சமாதானத்தை சீர்குலைக்கும் செயற்பாடுகளில் ஈடுபடாதீர்

## பொலிஸாருக்கு பிரதம நீதியரசர் அறிவுரை

நிந்தவூர்,மே 7

போரின் பின்னர் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள சமாதான சூழலை சீர்குலைக்கும் வேலைகளில் ஈடுபடவேண்டாம் என்று பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், பொலிஸாரை எச்சரித்துள்ளார்.

நிந்தவூரைச் சேர்ந்த முஸ்லிம் நபர் ஒருவர் தாக்கல் செய்திருந்த மனுவொன்றை பரிசீலித்தபோதே தலைமை நீதியரசர் இந்தக் கருத்தைக் கூறினார்.

நியாயமான காரணமின்றி தன்னைக் கைதுசெய்த பொலிஸார் இரண்டு மணி நேரத்துக்குப் பின்னர், எந்த விதக் குற்றச்சாட்டுக்களுமின்றி தன்னை விடுவித்து விட்டதாக மனுதாரர் வழக்கில் தெரிவித்தார்.

பொலிஸார் சார்பில் முன்னிலையான அரசதரப்பு சட்டத்தரணி மனுதாரருக்கும் பொலிஸாருக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டதாகக் கூறினார்.

எனினும், அதனை ஏற்றுக் கொள்ள மறுத்த தலைமை நீதியரசர் இருதரப்புக்கும் இடையிலான பிணக்கு முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போதிலும், பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பில் நீதிமன்றத்துக்கு திருப்தியடையமுடியாது என்று கூறினார்.



வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூலை மாதம் 1ஆம் திகதிக்கு ஒத்திவைத்த மொஹான் பீரிஸ், அன்றைய தினம் மன்னிப்புக் கோருவதற்காக சம்மந்தப்பட்ட பொலிஸாரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும் அரசதரப்பு சட்டத்தரணிக்கு அவர் உத்தரவிட்டார்.

# பயங்கரவாதச் சட்டம் நீக்கிய பின் காணாமற்போயினர் 300 தமிழர்

## செல்வராசா எம்.பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு ,மே 7

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டதன் பின்பு 300 தமிழர்கள் காணாமற் போயுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா குற்றம் சாட்டியுள்ளார்.

மட்டகளப்பு, வெல்லாவெளிப் பிரதேசத்துக்குட்பட்ட முனைத்தீவு கிராமத்தின் மேம்பவர் விளையாட்டுக் கழகத்தின் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

**இலங்கையில் தற்போது மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதை அமெரிக்க அரசு உறுதி செயதுள்ளது. அது இலங்கையில் பல பாகங்களிலும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.**



அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தற்போது மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதை அமெரிக்க அரசு உறுதி செயதுள்ளது. அது இலங்கையில் பல பாகங்களிலும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. இதற்கு அடிப்படையாக அமைந்திருந்தது கே.டபிள்யூ. தேவநாயகம் அமைச்சராக இருந்த காலத்தில் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டமாகும்.

அரசு பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட்டுவிட்டது எனக் கூறிய பின் 300 அப்பாவித் தமிழ் மக்கள் காணாமல் போயுள்ளார்கள். அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பதை அறிய நாம் நாடாளுமன்றம், பொலிஸ் தலைமையகம் , மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளரிடமும் முறைப்பாடு செய்தோம். இதுவரையில் அவர்களை கண்டு கொள்ள முடியவில்லை.

இவ்வாறு தமிழ் இனத்தைப் பாதுகாப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. ஆனால் இவ்வாறான செயற்பாடுகளை அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்கின்ற தமிழ் அமைச்சர்களும், அமைப்பாளர்களும் இதுவரைக்கும் செய்யவில்லை. -என்றார். (ச)

# அரசியலில் என்னை ஓரம் கட்டவே செயலரின் வீடு மீது தாக்குதல்

## கல்முனை மாநகர முதல்வர் தெரிவிப்பு

அம்பறை,மே 7

அரசியலில் என்னை ஓரம் கட்டும் நோக்கத்தோடு செயல்படும் சதிகாரர்களின் வெளிப்பாடே எனது பிரத்தியேக செயலரின் வீடு தாக்கப்பட்டுள்ளமை என்று கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப் கண்டனம் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை சாய்ந்தமருதில் உள்ள கல்முனை மாநகர முதல்வரின் பிரத்தியேக செயலர் ஏ.எல்.எம்.இம்சாதின் வீட்டின் மீது கல்லெறி தாக்குதல் சம்பவம் இடம்பெறறது.

இந்தத் தாக்குதலினால் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப்பால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நான் அரசியலுக்குள் பிரவேசித்த நாள் முதல் சாய்ந்தமருதில் உள்ள அரசியல்வாதி ஒருவர் எனக்கு எதிராக செயற்பட்டு வருகின்றார். என்னை அரசியலில் இருந்து ஒதுக்க வேண்டும் என்பதே அவரது இலக்காக உள்ளது.

இந்தச் சம்பவம் மாத்திரமின்றி இதற்கு முன்னரும் எனது உயிருக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

நான் முதல்வராக கல்முனை மாநகர சபையை பொறுப்பேற்றதிலிருந்து பல அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகின்றேன். அவற்றையெல்லாம் பொறுக்க முடியாத இந்த அரசியல்வாதி என்னால் முன்னெடுக்கப் படுகின்ற அபிவிருத்திப் பணிகளை தடுத்து நிறுத்துவதிலும், இவ்வாறான கீழ்த்தரமான சதி வேலைகளை செய்வதிலும் தனது அடியாள்களை ஏவி வருகின்றார். அதன் ஓர் அங்கமாகவே எனது பிரத்தியேக செயலாளரின் வீட்டுத் தாக்குதலையும் நான் நோக்குகின்றேன். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



# கலாசார விவரத் திரட்டு கைநூல் தயாரிப்பு

மட்டக்களப்பு,மே 7

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேச செயலகத்தினால் கலாசார விவரத் திரட்டு கைநூல் தயாரிக்கப்படவுள்ளது.

பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் இந்த ஆண்டுக்கான கலாசார விவரத் திரட்டுக் கைநூல் தயாரிக்கப்படவுள்ளது என்று அந்தப் பிரதேச செயலர் எஸ்.எல்.எம்.ஹனீபா தெரிவித்தார்.

கலைஞர்கள், பிரதேச செயலக கலாசார பிரிவுடன் தொடர்புகொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து கொடுக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.



ஏறாவூர் நகரப் பிரதேச செயலாளர் பிரிவில் கலாசாரத் திரட்டுக் கைநூல் தயாரிக்கப்படுவது இதுவே முதற் தடவையென்பது குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தம் வீசாத நிலையில் புதுக்குடியிருப்பு மக்கள்

புதுக்குடியிருப்பு, மே 7

புதுக்குடியிருப்புப் பகுதியில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலமாக மின்சாரம் பெறுவதற்கு விண்ணப்பித்த பலர் இதுவரை மின்சாரம் வழங்கப்படாத நிலையில் உள்ளனர்.

மின்சார இணைப்பை வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் முறையிட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.




கடந்த போர் இடர்களினால் பாதிக்கப்பட்டு மீள் குடியமர்ந்த மக்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவசமாக மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

புதுக்குடியிருப்பு மேற்கு, கோம்பாவில், கைவேலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் முல்லைத்தீவு மின்சார சபை அலுவலகத்தில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலமாக மின் இணைப்பை பெறுவதற்கென விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துப் பல மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரையும் மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லை.

ஆனால் ஒரு சிலருக்கு தூரங்களைக் கவனத்தில் கொள்ளாது உடனடியாக மின் கம்பங்கள் நடப்பட்டு மின்சார இணைப்புக்கள் வழங்கப்படுகின்றன.

எனவே மின் இணைப்பைப் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களின் அடிப்படையில் மின்சாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்திடம் முறையிட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-410)

## இரண்டு மாத மின் நிலுவையை செலுத்தாவிட்டால் துண்டிப்பு

### கிளிநொச்சிப் பிரதேச மின் பொறியியலாளர் நடவடிக்கை

கிளிநொச்சி, மே 7

இரண்டு மாதத்துக்கும் மேலாக மின்கட்டணத்தைச் செலுத்தாத அனைவரதும் மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சிப் பிரதேச மின் பொறியியலாளர் எஸ்.பிரபாகரன் தெரிவித்தார்.

425 மில்லியன் ரூபா தற்போது மின் நிலுவையாக உள்ளது. இதனை அறவிடுவதற்காகவே இந்த மின் துண்டிப்பு நடைமுறையைக் கடைப்பிடித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி, வவுனியா ஆகிய பகுதிகளில் உள்ள அரச, தனியார் நிறுவனங்கள் உட்பட இராணுவத்தினரும், பொலிஸாரும் 4 மாதங்களாக மின் கட்டணத்தைச் செலுத்தாததால் பெருமளவு மின் நிலுவைகள் காணப்படுகின்றன.

இராணுவத்தினரும், பொலிஸாரும் அதிகளவு மின் நிலுவையைக் கொண்டுள்ளனர். இதனால் இரண்டு மாத மின் கட்டணங்களை உடனடியாக அறவிடுவதற்கென மின் துண்டிப்பை நடைமுறைப் படுத்தியுள்ளதாகவும், இதன் மூலமாக 200 மில்லியன் ரூபாவை அறவிட முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

## பாடசாலையை விட்டு விலகிய இளைஞர், யுவதிகளுக்கு தொழில் திறன் பயிற்சி

வவுனியா, மே 7


பாடசாலையை விட்டு விலகிய இளைஞர், யுவதிகளை பின்வரும் தொழில் திறன் விருத்திப் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ளுமாறு வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா கேட்டுக் கொண்டுள்ளார்.

உலோக ஓட்டுகள் பயிற்சி நெறி 6 மாத காலமும், கேக் ஐசிங் பயிற்சி நெறி 3 மாத காலமும், மணப்பெண் அலங்காரப் பயிற்சிநெறி 3 மாத காலமும், கணினிப் பயிற்சிகள் மற்றும் சிங்கள பாடம் என்பன 3 மாதமும் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சியின் நிறைவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாகவும், ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகள் வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தில் உள்ள முறைசாராக் கல்விப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் வவுனியா தெற்கு வலயக் கல்வி பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தப் பயிற்சி நெறிகள் வவுனியா தெற்கு கல்வி வலயத்தினால் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

## இறைச்சிக் கழிவுகளால் சீர்கேடு



முல்லைத்தீவு பொதுச்சந்தையில் இறைச்சிக்காக அறுக்கப்படும் மாடு, கோழி ஆகியவற்றின் கழிவுகள் அகற்றப்படாத நிலையில் காணப்படுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் தோன்றியுள்ளன. தெரு நாய்கள் இந்தக் கழிவுகளை இழுத்துச் சென்று ஆங்காங்கு போடுவதால் துர்நாற்றமும் வீசிக் கொண்டிருக்கிறது. இதனால் சந்தையில் மீன், மரக்கறி ஆகியவற்றின் விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்கள் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (க-435)

## ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டமைக்கு பெற்றோர் நன்றி தெரிவிப்பு

மாங்குளம், மே 7

வன்னிப் பிரதேசத்திலுள்ள அதிகஷ்டப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டமை தொடர்பாக அந்தப் பகுதியைச் சேர்ந்த பெற்றோர் நன்றி தெரிவித்துள்ளனர்.

அண்மையில் வவுனியா வடக்கு கல்வி வலயத்திலுள்ள சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்துக்கு 8 வருடமாக விஞ்ஞானபாட ஆசிரியர் இல்லையென உதயன் பத்திரிகை வாயிலாக பெற்றோர் விசனம் தெரிவித்திருந்தனர்.

இதனைக் கருத்திற் கொண்டு தற்போது அந்தப் பாடசாலைக்கு விஞ்ஞானபாட ஆசிரியரும், கணிதபாட ஆசிரியரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு வடமாகாணக் கல்வித் திணைக்களத்துக்கும், வவுனியா வடக்கு கல்விப் பணிப்பாளருக்கும் அந்தப் பகுதியைச் சேர்ந்த பெற்றோர் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். (க-422)

## புதிய நிர்வாகிகளைத் தேடும் ஓட்டோ உரிமையாளர்கள்



மன்னார், மே 7

மன்னார் ஓட்டோ சங்கத்துக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்படாமை தொடர்பாக ஓட்டோ உரிமையாளர்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் தனியார் பஸ் தரிப்பிடத்துக்கு முன்பாக ஒதுக்கப்பட்ட காணியில் தற்போது மன்னார் ஓட்டோ தரிப்பிடம் அமைந்துள்ளது.

இந்தச் சங்கத்தின் பொறுப்பான பதவியில் ஒருவர் கடந்த 5 வருடங்களுக்கும் மேலாகச் செயற்பட்டு வருகின்றார். புதிய நிர்வாகத்தெரிவுகளை நடத்துவதற்கு அவர் அனுமதி வழங்காத நிலை காணப்படுகின்றது.

தேவையற்ற காரணங்களுக்காக அவரும் அவருடன் சேர்ந்துள்ள சில ஓட்டோ சாரதிகளும் தரிப்பிடத்தில் வைத்து பொதுமக்கள் பார்க்கக்கூடிய வகையில் ஏனைய ஓட்டோ சாரதிகளுடன் தர்க்கத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தலைமைப் பொறுப்பில் இருக்கும் அவர், தமக்கு வேண்டிய ஓட்டோ சாரதிகளை விருப்பத்துக்கு ஏற்றவாறு சங்கத்தில் இணைத்து சேவையில் ஈடுபடுத்துவதாகவும் இதனால் ஏனையோர் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மன்னார் ஓட்டோ சாரதிகளுக்கு இடையில் சச்சரவுகளும் தலைதூக்கியுள்ளன.

எனவே உடனடியாக மன்னார் ஓட்டோ சங்கத்தின் தற்போதைய நிர்வாகத்தைக் கலைத்து விட்டு புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்ய வேண்டுமெனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-12)

## வவுனியாவில் சினிமா நிறுவன அலுவலகம்

வவுனியா, மே 7

சினிமாப் படத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனமொன்றின் வவுனியா மாவட்ட அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட கடன்காரன் என்ற முழுநீளத் திரைப் படத்தைத் குறித்த நிறுவனம் தயாரித்து வருகின்றது. இதற்கான படப்பிடிப்புக்கள் மன்னார், திருகோணமலை, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்று வருகின்றன.

வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தைச் சேர்ந்த எஸ்.சிவகாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் நாடாவை வெட்டி அலுவலகத்தைத் திறந்துவைத்தார்.

## இரவு வேளைகளில் சீரில்லாத பஸ் சேவை

### அவலங்களை எதிர்கொள்ளும் மக்கள்

வவுனியா, மே 7

வவுனியாவில் இரவு நேர பஸ் சேவைகள் சீராக இயங்காமையால் பயணிகள் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வவுனியா பஸ் நிலையத்தில் இருந்து உள்ளூர் கிராமங்கள் மற்றும் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மல்லாவி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்கான பஸ் சேவைகள் இரவு வேளைகளில் குறிப்பிட்ட நேரங்களுக்கு புறப்படாமை மற்றும் திடீரென பஸ் சேவைகள் நிறுத்தப்படல் ஆகிய காரணங்களால் அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர், வெளியிடங்களுக்குச் செல்லும் பெண்கள், சிறார்கள், நோயாளிகள், வயோதிபர்கள் எனப் பலரும் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவலநிலை காணப்படுகின்றது.

இதேவேளை தாமதித்துப் புறப்படும் பஸ்கள் ஓமந்தை சோதனைச் சாவடியை அடைவதற்கு நீண்டநேரம் எடுப்பதால் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் நொச்சிமோட்டை, ஓமந்தை, வேலன்சின்னக்குளம், அரசன்குளம், சேமமடு வீதியூடாகச் செல்லும் பயணிகள் உட்பட பல கிராமப்புற மக்கள் இரவு வேளைகளில் சிரமங்களை எதிர்கொள்வதை அவதானிக்க முடிகின்றது. (க-402)

## வன்னேரிக்குளம் வீதி புனரமைப்பு

**30 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைப்பு செய்யப்படாத வீதி தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது.**

அக்கராயன், மே 7

கிளிநொச்சி அக்கராயனில் இருந்து வன்னேரிக்குளம் வரையான 10 கிலோமீற்றர் வீதி தற்காலிகமாகப் புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது.

30 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைப்பு செய்யப்படாது குன்றும் குழியுமாக இருந்த வீதி தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச அதிகாரிகளிடம் நீண்டகாலமாக மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த வீதி புனரமைக்கப்பட்டு வருகிறது.

1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வன்னேரிக்குளம் கிராமத்தில் 460 இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் ஆதிக்கத்தை முறியடிக்க இலங்கையுடன் ஜப்பான் நெருக்கம்

## இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்த முயற்சி

கொழும்பு,மே 6

இலங்கையில் அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்கை முறியடிக்கும் நோக் கிலும், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையிலும், இலங்கை யுடன் ஜப்பான் உயர் நிலைப் பேச்சுக்களை நடத்தியுள்ளது.

இரண்டு நாள் பயணமாக இலங்கை வந்துள்ள ஜப்பான் பிரதிப் பிரதமர் ராரோ அசோ நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்தவைச் சந்தித்து இரு தரப்பு விவகாரங்கள் குறித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

அத்துடன், 800 மில்லியன் டொலர் செலவில் ஜப்பானின் உதவியுடன் விரிவாக்கப்பட்டுவரும் கொழும்புத் துறைமுகத்துக்கும் ஜப்பானிய பிரதிப் பிரதமர் சென்று பார்வையிட்டுள்ளார்.

26 ஆண்டுகால உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பின்னர், உயர்ந்து வரும் சந்தை வாய்ப்புகளுக்கான நுழைவாயிலாக இலங்கையை உருவாக்கவுள்ளதாகக் கூறி சீனா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளிடம் இருந்து அரசு முதலீடுகளைப் பெற்றுள்ளது.

இலங்கையில் 2005ஆம் ஆண்டில் இருந்து துறைமுகங்கள், மின்நிலையம் உள்ளிட்ட திட்டங்களில் சீனா 3.7 பில் லியன் டொலரை முதலிட்டுள்ளது.

இந்தச் சந்திப்புக் குறித்து கருத்து வெளி யிட்ட கொழும் பிலுள்ள ஆய்வாளர் பிமனி மீபாகல, சீனா தனது முதலீ டுகளைப் பரவலாக்கும் போது, ஆசியாவில் சீனா வின் செல்வாக்கை உடைக்க ஜப்பான் முயற்சிக்கலாம் என்று தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜப்பானியப் பிரதமர் சின்சோ அபேயை கடந்த மார்ச் மாதம் சந்தித்திருந்தார். இதையடுத்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், இலங்கை முக்கியமானதொரு பிராந்திய கடல்சார் மையமாக இருப்பதாகவும், அது அனைத்துலக அளவில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கும் என்றும் குறிப்பிடப் பட்டிருந்தது. கடற்கொள்ளைக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் ஜப்பானிய கடற்படையின் போர்க்கப்பல்கள் இலங்கைக்கு வருவதை வரவேற்ற ஜனாதிபதி மஹிந்தவுக்கு அந்த கூட்டறிக்கையில் நன்றி தெரிவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (த)


## அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் 1933ஆம் ஆண்டு T.R 35ஆம் இலக்க வழக்கில் தென் இந்தியா, சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோயில் படிக்கட்டளைத் தருமத்தின் சிவபுரி மடத்திற்கு உரிய வலிகாமம் மேற்குப் பகுதி, தென்மராட்சிப் பகுதி மற்றும் தீவுப் பகுதியில் அமைந்துள்ள 130 ஆதனங்களுக்கு குறித்த வழக்கில் வெஸ்ரிங் ஓடர் என்னும் அதிகாரப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் சிதம்பரம் சிவபுரிமடத்தின் தர்மகத்தாவான **வைத்திலிங்கம் தம்பிரான் சிவராஜன் சொக்கநாதன்** குறித்த ஆதனங்களை முகாமைத்துவம் செய்யவும் பராமரிக்கவும் நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட உரிமையை சங்கானை ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த **வைத்திலிங்கம் தம்பிரான் துரைராஜன்** ஆகிய எனக்கு அற்றோனித்தத்துவம் ஊடாக வழங்கியுள்ளார் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன். ஆகவே மேலேகுறிப்பிட்ட ஆதனங்களின் குத்தகைக்காரர்கள் என்னுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்புகளுக்கு

**0213006382, 0778332954**

இப்படிக்கு

(8863) (23-16-14) **வ.த.துரைராஜன்**

சிவபுரிமட மடாதிபதி

சி.சொக்கநாதனின் அற்றோனித் தத்துவக்காரன்.



## நீங்காத நினைவுகளுடன் 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
24-10-1957

மறைவு
25-04-2006



### அமரர் இ.து.சிவராசா

(முன்னாள் செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை)
திதி: தேய்பிறை திரயோதசி

ஆண்டுகள் பல சென்றிடினும்
ஆறாது எம் துயரம் அகலாது உம் நினைவு
காலனிட்ட கட்டளையால் எம்மை கண்கலங்க வைத்தவரே!
கள்ளமில்லா புன்சிரிப்பும் கனிவான உன்றன் பார்வை
அன்பான பேச்சு அரவணைத்த உங்கள் கைகள்
அத்தனையும் எமக்குள்ளே பசுமையாய் பதிந்திட
எங்குதான் சென்றீர்களோ அப்பா! அப்பா!

என்றும் உங்கள்
பாசத்திற்காய் ஏங்கும்...
குடும்பத்தினர்.

சிவன் வீதி,
ஆவரங்கால், புத்தூர்.



## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
09 * 12 * 1962



விண்ணில்
12 * 05 * 2010

திதி: திரயோதசி

### அமரர் நடராஜா வில்வா(SLPS)

மூன்று ஆண்டுகள் சென்றதுவோ - அகிலத்தை விட்டேகி
நீண்ட துயர் தந்து நித்தமும் கண்ணீரில்
மாண்டு நாம் மண்மீது வாழ்வது கண்டு
மீண்டு நீர் வர மாட்டீரோ? மீளாத் துயர் போக்க

அக்கா அகம்
இணுவில்

மனைவி
(அன்னலட்சுமி-வில்வா)



## ஈர விழிகளுடன் ஈராண்டு நினைவஞ்சலிகள்

மண்ணுலகில் 24.02.1953
விண்ணுலகில் 30.04.2011

திதி: 07.05.2013



### அமரர் இராசேந்திரம் செல்லம்மா(மலர்)

தாங்கியே நின்றாயம்மா - உன்
தலைவனுடன் மக்களையும்
தாணியிலே நாம் தாயில்லாப் பிள்ளைகளாய்
தவிக்கின்றோம் உம் நினைவில்
ஆத்மா சாந்தி பெறஆண்டவனை வேண்டுகின்றோம்.

நியூ பிரிந்தா ஸ்ரோர்ஸ்
அல்லாரை வடக்கு,
மீசாலை.

உம் பிரிவில் வாடும்
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


### வெள்ளி மாலை வகுப்புக்களை நடத்தக் கூடாது

காரைநகர் பிரதேச சபை தீர்மானம்

காரைநகர், மே 7

காரைநகர் பிரதேசத்தில் வெள்ளிக்கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்களும், பாடசாலைகளும் மாலை நேர வகுப்புக்களை நடத்தாது மாணவர்கள் ஆலய வழிபாடுகளில் ஈடுபட வழிசமைத்து கொடுக்க வேண்டும் என காரைநகர் பிரதேச சபை மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை காரைநகர் பிரதேச சபை தலைவர் வே. ஆனைமுகன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உறுப்பினர் க.பாலச்சந்திரன் முன்வைத்த மேற்படி கோரிக்கையை சபை ஏக மனதாக ஏற்றுச் செயற்படுத்த தீர்மானித்துள்ளது.

அந்த வகையில் வெள்ளிக்கிழமைகளில் மாலை நேர வகுப்புக்களை முற்றாகத் தடைசெய்து மாணவர்கள் ஆலயங்களுக்குச் சென்று வழிபடவும் பஜனைகளில் ஈடுபடவும், அறநெறிப் பாடசாலைகளில் கற்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.


## மூன்றாம் ஆண்டு நினைவுகளுடன்

அன்னையின் மடியில்
14.03.1955

ஆண்டவன் அடியில்
11.05.2010



### அமரர் நல்லையா தர்மபாலன்

5 ஆம் வட்டாரம், மண்கும்பான்.

*மூன்றாண்டுகள் சென்றாலும் –அப்பா உங்கள் நினைவுகள் ஓயாத*
*அலைகளாக மோதுதப்பா எம்மோடு இருந்த காலங்களில்*
*உங்களை எமக்காய் அர்ப்பணித்தீர்கள்–அப்பா*
*என் அருமைத் தாத்தாவே எம்மைத்*
*தவிக்க விட்டு சென்றதேனோ எவ்வளவு உறவுகள் இருந்தும்*
*அப்பா நீங்கள் பிரிந்த இடை வெளியை யார்தான் நிரப்புவாரோ*
*ஆண்டுகள் பலகோடி அவனிமிசை*
*நீண்டாலும் அழியாது உங்கள் நினைவுகள் அப்பா*
**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.**

233/6, கோயில் வீதி.
நல்லூர்.

(36980)(6.11)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் 61 ஆவது பிறந்த நாள் நினைவும்

மனம் மகிழ
04.02.1952

மனம் நெகிழ
18.04.2012



### திருமதி சிவாஜினி குகமூர்த்தி

திதி: அபரபக்க திரயோதசி

ஆண்டொன்று சென்றதுவோ அகிலத்தை விட்டேகி
நீண்ட துயர் தந்து நித்தமும் கண்ணீரில்
மாண்டு நாம் மண் மீது வாழ்வது கண்டு
மீண்டு நீர் வர மாட்டீரோ? மீளாத் துயர் போக்க
**உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.**

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!**

**ச.குகமூர்த்தி (கணவர்)**
**(முறிவு நோவு வைத்தியர்)**
**கு.யோகேஸ்வரன்**
**(மகன் - 2 ஆம் வருட முகாமைத்துவ பீட மாணவன் யாழ். பல்கலைக்கழகம்)**

**20, செம்மணி வீதி,**
**நல்லூர்.**

(37032)(6.11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர்கள் சிறு பிள்ளைகளை பாதுகாப்பின் கீழ் வைத்திருங்கள்

## துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாக்க அதுவே வழிசெய்யும் என்கிறார் அனோமா திஸாநாயக்க

கொழும்பு,மே 7
பெற்றோர் தங்கள் சிறு பிள்ளைகளை அவர்கள் ஆண்களாக இருந்தாலும் பெண்களாக இருந்தாலும் 24 மணி நேரமும் தங்கள் நேரடிப் பாதுகாப்பின் கீழ் வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் துஷ்பிரயோகத்துக்கு இழக்காகி வாழ்நாள் முழுவதும் அந்த வேதனையை அனுபவிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவார்கள்.

இவ்வாறு சிறுவர் மற்றும் மகளிர் விவகார அதிகார சபையின் தலைவி அனோமா திஸாநாயக்க பெற்றோருக்கு அபாய அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இன்று தொலைக்காட்சிகள், கையடக்கத் தொலைபேசிகள் ஊடாகவும் அனைவருக்கும் பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய ஆபாச வீடியோ காட்சிகளை பார்ப்பதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. அதனால் சமூகத்தில் தற்போது ஒழுக்கம் சீர்குலைந்து போயுள்ளது.

10 முதல் 12 வயதான சிறுவர்கள் கூட தொலைக்காட்சி படங்களைப் பார்த்து பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் அளவுக்கு இன்று நிலைமை மோசமடைந்துள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள சட்டம் வலுவில்லாமல் இருப்பதனால்தான் சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருகின்றன.

தற்போதைய சட்டத்தின் படி பாலியல் குற்றமிழைத்த ஒருவர் இரண்டு வாரங்களில் பிணையில் செல்வதற்கு சட்டம் இடமளிக்கிறது.

சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமாயின் இத்தகைய குற்றமிழைத்தவர்களை கைது செய்து அவர்களை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி காலதாமதப் படுத்துவதை விட நேரடியாக உயர்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும்.



அவர்கள் செய்த குற்றம் நிரூபிக்கப்படுமானால் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும். அதன் மூலமே எமது நாட்டின் சிறுவர் சமுதாயத்தை நாம் பாலியல் ரீதியில் காமுகர்களிடம் இருந்து காப்பாற்ற முடியும்.

இத்தகைய கொடியவர்களிடம் இருந்து பிள்ளைகளை பாதுகாப்பது பெற்றோரின் பொறுப்பு.-என்றார். (ச)

## வெலிக்கடை சிறைக்கு பாவனைக்கு உதவாத அரிசி விநியோகம்

கொழும்பு,மே 7
வெலிக்கடை சிறைச்சாலையில் கைதிகளுக்கு உணவு தயாரிப்பதற்கென நிறுவனமொன்றினால் விநியோகிக்கப்பட்ட பாவனைக்கு உதவாத 30 ஆயிரம் கிலோ அரிசி திருப்பி விடப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

பிரபல அரசியல் வாதியொருவருடன் தொடர்புடைய விநியோக நிறுவனமொன்றே உணவுக்கு உதவாத அரிசியை வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அனுப்பி வைத்துள்ளது.

அந்த அரசியல்வாதி பிரபல வர்த்தகப்புள்ளியெனவும் அவருக்குச் சொந்தமான இந்த வர்த்தக நிறுவனத்தினால் நீண்டகாலமாகவே வெலிக்கடைச் சிறைச்சாலைக்குத் தேவைப்படும் அரிசி கேள்விக் கோரல்கள் மூலமான விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அந்த அரசியல் வாதியின் மனைவியே இந்த விநியோகச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாகச் செயற்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

இவ்வாறான உணவுக்கு உதவாத அரிசி விநியோகத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பல தடவைகள் வெலிக்கடை சிறைச்சாலை நிர்வாகத்தினரால் அந்த நிறுவனத்துக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளபோதிலும், கடந்த 30 ஆம் திகதி இவ்வாறான 30 ஆயிரம் கிலோ அரிசி வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு வழங்குவதற்கென எடுத்து வரப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலை அதிகாரிகளால் இது தொடர்பாக சிறைச்சாலைகள் ஆணையாளர் பல்லேகமவுக்குத் தெரியப்படுத்தியுள்ளதையடுத்து அவர் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-22)



பட்டிபொந்தோட்டையில் அமைக்கப்பட்ட வெள்ள நீர் மின் நிலையத்துக்கான பிரதேசத்தை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பார்வையிட்டார். இந்த நீர் மின் நிலையம் சீன நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட வெள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 32,000 கிலோ கழிவுத் தேயிலை சிக்கியது



கொழும்பு,மே 7
பாவனைக்கு உதவாத 32,000 கிலோ கிராம் கழிவு தேயிலைத் தூள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.
இந்தத் தேயிலை வெல்லம்பிட்டி பிரதேசத்தில் உள்ள களஞ்சியசாலையிலேயே கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தேயிலைத் தூள் மேலதிக விசாரணைகளுக்காக குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ச)

## தொலைபேசி உரையாடல் பதிவு செய்யப்படவில்லை

### ஊடகத்துறை அமைச்சின் செயலர் ஹேரத் கூறுகிறார்



கொழும்பு,மே 7
ஊடகவியலாளர்களின் கையடக்க தொலை பேசிகளை ஒட்டுக்கேட்கும் எவ்வித நடவடிக்கைகளும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று ஊடகத்துறை அமைச்சின் செயலர் சரித்த ஹேரத் தெரிவித்தார்.

இலங்கை அவ்வாறான பதிவுகளை மேற்கொள்ளும் கருவிகளை கொண்டிருப்பதாக தாம் அறிந்திருக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார். அத்துடன் இலங்கையின் சட்டப்படி அவ்வாறான நடவடிக்கைகளுக்கு அனுமதியில்லை என்று அவர் கூறினார்.

**இலங்கையின் சட்டப்படி தொலைபேசி உரையாடல்களை பதிவு செய்ய முடியாது.**

எனினும் தொலைபேசி உரையாடல்களை பதிவு செய்யும் கருவிகள் கடந்த வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்டதாக சண்டே லீடர் அரச தரப்புக்களை கோடிட்டு மீண்டும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## இன்புளுவென்ஸா வைரஸ் தொற்று; சிகிச்சை அளிப்பதற்கு ஆளணி தயார்

### சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு,மே 7
இன்புளுவென்ஸா (ஏ எச்1என்1) வைரஸ் தொற்றுநோய்க்கு உடனடி சிகிச்சையளிப்பதற்கு அனைத்து அரச வைத்திய சாலைகளிலும் விசேட ஆளணி தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இன்புளுவென்ஸா வைரஸ் தொற்று நோய்த் தடுப்பு மருந்து சகல வைத்திய சாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உடனடி சிகிச்சையளிப்பதற்கு விசேட ஆளணி தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இன்புளுவென்ஸா வைரஸ் தொற்று நோய் தொடர்பில் 546 குருதி மாதிரிகள் வைத்திய ஆய்வு நிலையத்துக்கு அனுப்ப வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 6 பேருக்கு [illegible] தொற்றுநோய் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

காய்ச்சல், இருமல், மூக்கினூடாக சளிவடிதல் போன்ற அறிகுறிகள் தொடர்ந்தும் காணப்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடுமாறு சுகாதார அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

இதேவேளை இன்புளுவென்ஸா தொற்றுநோய் காரணமாக மொனராகலை பிபில வைத்திய சாலையில் கர்ப்பிணித் தாயார் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
குறித்த தொற்றுநோய் காரணமாகவே அவர் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், மொனராகலை வைத்தியசாலையில் வேறு எவருக்கும் குறித்த நோயின் தாக்கம் அடையாளம் காணப்படவில்லை என்று வைத்திய [illegible] வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

## மீனவருக்கு ஆலோசனை வழங்க மத்திய நிலையம்



கொழும்பு,மே 7
மீனவர்களுடைய பிரச்சினைகளை முன்வைப்பதற்கான மத்திய நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என்று நாரா நிறுவனம் தெரிவித்துள்ளது.
இந்த மத்திய நிலையம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று நாரா நிறுவனத்தின் தலைவர் சயுர சமரசுந்தர தெரிவித்தார்.
இந்த மத்திய நிலையத்தின் ஊடாக மீனவர்களுடைய பிரச்சினைகள் மற்றும் அவர்களுக்கான ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.
கடற்றொழிலில் முதலீடு செய்கின்றமை குறித்த ஆலோசனைகளையும் இந்த நிலையத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார். ( ச)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாம்பழ வகைகளுக்குரிய பெயர் தொன்று தொட்டு வழங்கி வரும் பெயர்களுக்கு அமைவாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாகவே எமது பிரதேசங்களில் விலாட்டு, கறுத்தக்கொழும்பான், அம்பலவி, வெள்ளைக்கொழும்பான், செம்பாட்டான், கழகட்டி போன்றவை மாம்பழங்களாகவும் சேலம், பாண்டியன், மோனாம்துக்கி, கிளிச்சொண்டான் போன்ற மற்றும் இனம் அறியப்படாத பல வகை மாமரங்களும் மற்றும் விதையிலிருந்து தோன்றிய பலவகைகள் மாங்காயாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**கறுத்தக்கொழும்பான்**

கறுத்தக்கொழும்பான் மிகவும் விரும்பப்படும் மா வகையாகும். அண்மைக்கால ஆராய்ச்சிகளின்படி கறுத்தக்கொழும்பான் இனத்தில் கூட மூன்று வகைகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கறுப்புத்தோலை உடைய,



கறுத்தக்கொழும்பானின் வகைகள்

அடிப்பாகம் ஒடுங்கியதும் நுனி சற்று நீளமானதுமான ஒரு வகையும் இதே போன்று பருமன் உடையதும் ஆனால் மென் பச்சை நிறமான தோலுடைய இன்னொரு வகையும், இவை இரண்டையும் விட சற்று அடி பருத்ததாகவும் நீளம் குறைந்ததாகவும் சற்று நார்த் தன்மை அதிகமுள்ள கடும் மஞ்சள் நிறமுடைய சதையை உடையதுமாக மூன்றாவது வகையும் கண்டறியப்பட்டுள்ளன. இம்மூன்றிலும் இரண்டாவது வகை சற்று நார்த்தன்மை உடையது. மூன்றாவது வகை அதிக நாட்களுக்கு பழுதடையாமல் இருக்கும். முதல் இரண்டு வகையின் அங்குரங்கள் ஒரே மாதிரி அமைப்பைக் காட்டினாலும் மூன்றாவது வகையின் அங்குரப்பகுதி சகல இலைகளுக்கும் ஒளி ஊடுருவி வரக்கூடிய வகையிலும் அதிகளவு நெருக்க அங்குரத்தை உடையதல்லாமலும் இருக்கும்.

**விலாட்டில் இரண்டு வகை**

ஏனைய மாம்பழங்களை விட விலாட்டு மாம்பழம் தனிச் சிறப்புடையது கறுத்தக் கொழும்பான் கூட அறியப்படாத இடத்திலிருந்து இலங்கைக்குள் நுழைந்ததால்" விலாட்டு வகை மாம்பழமொன்றே எமதுநாட்டில் உருவானதாயும் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. பொதுவாகவே சிறிய உருவத்தில் காணப்படும் விலாட்டு மாமரத்தின் இரண்டு வகைகள் கண்டறியப்பட்டன. முதலாவது வகையானது தனித்துவமுள்ள குங்கும நிறத்தைப் பழம் முழுவதும் கொண்டிருக்கும். அடிப்பாகத்தில் மட்டும் குங்கும நிறத்தை உடையதும் ஏனைய பகுதிகள் மென் மஞ்சள் நிறமுடையதுமான இன்னொரு வகையும் அறியப்பட்டுள்ளது. முதலாவது வகையின் தசை சற்று கடும் மஞ்சளைக் காட்டும். ஏலவே கூறப்பட்டுள்ள கறுத்தக் கொழும்பானின் மூன்றாவது வகையைப் போன்று இவ்வகையிலும் சதையானது சற்று மாப்பற்று அதிகமானதாயும் இனிப்புக் கூடியதாயும் உள்ளது. இவ்வகை பருமனிலும் சற்று பெரியதும் உருண்டையானதுமாகும்.

**அம்பலவி**

மூக்குப்போன்ற பகுதி … துமான இவ்வகைப் … மக்களால் பெரிதும் விரும்பப்படும் இன்னொருவகை மாம்பழமாகும். தனித்துவமான வாசனையுடைய இப்பழம் பழுத்ததற்குப்பின்பும் ஐந்து தொடக்கம் ஏழு நாள்கள் வரை பழுதடையாமல் இருக்கும். மேலே கூறப்பட்ட ஏனைய இரண்டு வகைப்பழங்களும் (கறுத்தக் கொழும்பான், விலாட்டு) இவ்வகையில் சேமித்துவைக்கக் கூடியனவாகும். ஒப்பீட்டளவில் அம்பலவி ஏனையவற்றை விட அதிக நாள்கள் தாக்குப்பிடிக்கும். விலாட்டு, கறுத்தக் கொழும்பான் போன்றன நீண்ட நாட்கள் வைத்திருப்பின் தோலில் கரும் புள்ளிகள் உருவாகும். ஆனால் அம்பலவியிலோ தோலில் சுருக்கம் மட்டும் ஏற்படும். இதனால் அம்பலவி அதிக நாள்கள் வைத்திருந்து பயன்படுத்தக்கூடியதொன்றாகும். ஆனால் தாய்த்தாவரங்கள் கறுத்தக்கொழும்பான் போன்றோ அல்லது விலாட்டு போன்றோ அதிகளவில் பழங்களை தோற்றுவிக்காது இருப்பினும் ஏனையவை இரு பருவங்களிலும் காய்க்கத்தவறினாலும் அம்பலவியோ வருடம் முழுவதும் காய்தரக்கூடிய இனமாகும். இவ் இனத்தில் ஒரு வகை மட்டுமே எமது பிரதேசத்தில் உள்ளது.

**வெள்ளைக்கொழும்பான்**


ஏனைய இனங்களைப் போலல்லாது வெள்ளைக்கொழும்பான் தனி மூல உருக்கொள்ளும் தன்மை உள்ளதால் இவ்வகையில் வேறுபாடுகள் தோன்றுவதற்கு சாத்தியமில்லை. (விகாரம் ஏற்பட்டாலன்றி) தோல் வெள்ளையாக இருப்பதனாலும் அறியப்படாத இடத்திலிருந்து தருவிக்கப்பட்டதாலும் இது வெள்ளைக்கொழும்பான் என அழைக்கப்படுகின்றது. இப் … வற்றுடன் ஒப்பிடுகையில் சற்று நார்த்தன்மை அதிகமுள்ளது. சேமிப்பில் அதிக நாட்கள் தாக்குப்பிடிப்பதில்லை. இரு பருவங்களிலும் காய்க்கத்தவறினாலும் இம்மரங்கள் காய்க்கும் போது அதிக அளவில் காய்க்கும்.

**புதியதோர் இனம் - கொடிமா**

மாம்பழங்களின் ஆராய்ச்சியின் போது தற்செயலாக, ஒன்று கச்சாயிலும் மற்றொன்று சாவகச்சேரியிலுமாக இரண்டு ஒரே வகை மாமரங்கள் கண்டறியப்பட்டன. இதன் தோற்றம் அறியக்கிடைக்கப்படவில்லை. அங்குரத்தொகுதி கொடி போல தோன்றுவதால் இது 'கொடிமா' என பெயர் சூட்டப்பட்டுள்ளது. இவ் வகை மாங்கன்றுகளும் இரு பருவங்களிலும் காய்க்கவல்லது. இவ்வகைப் பழங்கள் உருண்டையானதும் மெல்லிய தோலையும் உடையது. தசை மஞ்சள் நிறமானதும் சாறு நிறைந்ததாகவும் நார்த்தன்மை எதுவும் அற்றதாகவும் காணப்படுகிறது. விதையின் அளவிற்கும் தசையின் அளவிற்கும் உள்ள விகிதம் கூடியதானதால் அதிகளவு தசையும் இப்பழத்திலிருந்து கிடைக்கும். அத்துடன் பழச்சாறு உற்பத்திக்கு விளைதிறனுடன் பயன்படுத்த முடியும். இவ் வகையில் விளைச்சல் சரியாக அறியப்பட்ட பின்பு இது புதிய இனமாக விரைவில் வெளியிடப்படவுள்ளது.

**செம்பாட்டான்**

செம்பாட்டானானது அதிகளவு காணப்பட்டாலும் நன்றாக பழுத்தாலொழிய இப்பழங்கள் புளிச்சுவை உடையது. ஆனாலும் இப்பழங்களை நன்றாக பழுக்க வைத்து உண்ணும் பழக்கம் எம்மவரிடையே உண்டு. அதிகளவில் காய்களைத் தோற்றுவிக்கும் இவ்வகையில் ஒரே வகை மட்டுமே எம் பிரதேசத்தில் காணப்படுகின்றது. இவ் வகைப்பழங்கள் பழுக்கும் போது அதிகளவில் பழுத்தாக்கத்திற்கு உட்படும்.



**நல்லின மாங்கன்றுகளைப் பெறுவது எப்படி?**

மாங்காய்கள் அயன் மகரந்த சேர்க்கை மூலமாகவே உருவாக்கப்படுகின்றது. இதனால் விதை மூலம் உற்பத்தியாக்கப்படும் ஒவ்வொரு கன்றும் தனித்துவமுள்ள வெவ்வேறு வகைப்பழங்களை உருவாக்கும். எனவே தாய்த்தாவரத்தை போன்றதொரு மரமொன்றை உருவாக்கவேண்டுமாயின் ஒட்டுக்கிளை ஒன்று ஒட்டுக்கட்டையுடன் உரிய முறையில் ஒட்டப்பட்டு கன்றுகள் உருவாக்கப்பட வேண்டும். 300-350 ஆண்டுகளுக்கு முன்பதாக இந்திய துணைக்கண்டத்தில் ஒட்டுமுறை வழக்கத்திற்கு வந்ததாக அறியப்பட்டுள்ளது. இதன்மூலம் தாய்த்தாவரத்தின் குணாம்சங்கள் தற்போதும் பேணப்பட்டும் வருகின்றன. இதற்காக மேற்கூறிய ஆராய்ச்சியின் பயனாகத் தெரிவு செய்யப்பட்ட நல்லின தாய்த்தாவரங்கள் ஒட்டுமுறை மூலம் உருவாக்கப்பட்டு திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்திலும் மாவட்ட விவசாயப் பயிற்சிப் பண்ணையிலும் ஏலவே உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து உருவாக்கப்படும் மாங்கன்றுகளே தற்போது இந் நிலையங்களில் கிடைக்கப்பெறுகின்றன. அதுமட்டுமல்லாது கண்டறியப்பட்ட தாய்த்தாவரங்கள் எல்லா இடங்களிலும் பெயர் குறிப்பிடப்பட்டுப் பேணப்படுகின்றன. நல்லின மரக்கன்று உற்பத்தியில் ஈடுபடுவோர் இத்தாய்த்தாவரங்களிலிருந்து ஒட்டுக்கிளைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இது முடியாவிடின் எமது பிரதேசத்தில் காணப்படும் இவ்வகையான தரமுள்ள மாவினங்களைத் தாராளமாகப் பெருக்கிக்கொள்வது எம்மவரின் கடமையாகும்.

கலாநிதி:சி.ஜே. அரசகேசரி.
ஆ.இளமாறன்.
பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்

> பிரபல்யமான மாம்பழ வகைகளின் பழங்கள் பழுதின்றிப் பறிக்கப்பட்டு இயற்கை முறையில் பழுக்க வைக்கப்பட்டு தேவையான தரவுகள் பெறப்பட்டன. இத்தரவுகளின் பால் அவற்றின் குணாம்சங்களின் அடிப்படையில் மாம்பழங்கள் பிரித்தறியப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**வன்னிப் பணிமனை:**
ஏ 9 வீதி, டிப்போ சந்திக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வீதிக்கு முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021 2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
புதிய சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விநியோகஸ்தர்கள்: 'தா...ன்ஸ்' மாலுசந்தி, அல்வாய்: 0212263206. 'நெல்லியடி லொயேலன்ஸ் ஸ்ரோர்ஸ்' பஸ் நிலையம், நெல்லியடி: 021 490 1519. ஜோதி புக் சென்டர் மன்னார்: 0232222052 'சீமாவல களஞ்சியம்' கண்டி வீதி, சீமாவல தெற்கு: 021 227 0399. 'மன்னார் சிவசக்தி' தாழ்வுபாடு வீதி, மன்னார்: 0752824478. 'கொடிகாமம் அருள்ராகி' பஸ் நிலையம், கொடிகாமம்: 0774937585. 'கோபி லைக்கிறிற்' முல்லைத்தீவு நகர்: 0779598917. 'அனுமான்' சிவன் கோயிலடி, ஓட்டுசுட்டான்: 0775033571.

# எது பயங்கரவாதம்?

கொழும்பு மாநகரசபையின் முன்னாள் பிரதி மேயர் அஸாத் சாலி அதிகாலைப் பொழுதொன்றில் கைதுசெய்யப்பட்டுள்ளார். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழேயே அவரது கைது நிகழ்ந்துள்ளதாக அரசதரப்பு அறிவித்திருக்கிறது. ஆனால் அவர் மீதான குற்றச்சாட்டுகள் எவை என்பது குறித்து எந்தவித தகவல்களும் வெளியாகவில்லை. இதேவேளை தன்மீதான விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்த அஸாத் சாலி, உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்க இப்போது அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது.

வைத்தியசாலையில் அவரைச் சந்திப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கூட அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மட்டுமே இதுவரை அவரைப் பார்வையிட்டுள்ளார். அஸாத் சாலி ஆரம்பகாலத்தில் முஸ்லிம் தேசியம் பற்றிய கொள்கையில் தீவிரப்பிடிப்புடையவராக காணப்பட்டவர். ஆயினும் காலப்போக்கில் அவர் யதார்த்தத்தை விளங்கிக் கொண்டார். தனியே முஸ்லிம் மக்கள் மாத்திரமல்லாது தமிழ் மக்களும் ஒன்றிணைவதன் மூலமே பெரும்பான்மை இனத்தவர்களுக்கு எதிரான உரிமைப் போராட்டத்தை வென்றெடுக்க முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டார். இதனால் அவர் முஸ்லிம் தமிழ்த் தேசிய ஐக்கிய முன்னணி என்ற கட்சியை ஆரம்பித்தார். அண்மையில் அவர் தமிழகத்தில் இருந்து வெளியாகும் ஆனந்தவிகடன் வார சஞ்சிகைக்கு நேர்காணல் ஒன்றை வழங்கியிருந்தார். அதில் முஸ்லிம் மக்கள் மீதான பௌத்த சிங்கள தாக்குதல்கள் காரணமாக மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி மீது முஸ்லிம் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தார். "எங்களைத் தள்ளிக்கொண்டே போனால், ஒரு கட்டத்தில் நாங்களும் திரும்ப வேண்டியிருக்கும். அப்போது ஆயுதங்களைத் தூக்குவதைத் தவிர வேறு வழி எதுவும் எமக்கில்லை" என்று முஸ்லிம்களும் ஆயுதம் தூக்கவேண்டி இருக்கும் என்று அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நேர்காணலே அவரது கைதுக்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகின்றது. தொடர்ச்சியாக அதிகாரத்தால் வஞ்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஓர் இனத்தின் வலியை பதிவுசெய்ததற்காக அவருக்குக் கிடைத்த பரிசு கைவிலங்கு.

ஊடக சுதந்திரத்தின் உலகில் 162 ஆவது இடத்தில் இருப்பதற்கு தகுதியான நாடு இலங்கைதான் என்பதை அஸாத் சாலியின் கைது இன்னொரு முறை நிரூபித்திருக்கிறது. ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில் அஸாத்சாலி தெரிவித்த கருத்துகளையே ஜீரணிக்க முடியாத அரசு, எப்படி தனக்கு எதிரான செயல்களில் இறங்கி உண்மையை உரைக்கும் ஊடகங்களை விட்டுவைக்கும்? கருத்து சுதந்திரம் என்பது வெறும் கருத்தளவில் மட்டுமே இலங்கையில் கையாளப்படுகின்றது.

ஒரு நேர்காணலுக்காக சிறைக்குள் அஸாத் சாலி தள்ளப்பட்ட இதே இலங்கைத் திருமணி நாட்டில்தான், பட்டப்பகலில் நட்ட நடு வீதியில் 400 பேர் பார்த்திருக்க ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை சுட்டுக்கொன்ற துமிந்த சில்வாவுக்கு 'சல்யூட்' அடித்து ராஜமரியாதை செய்கிறார்கள் பொலிஸ் அதிகாரிகள்.

வாழ்க ஜனநாயகம்.

# இலங்கை- இந்திய உறவில் மாற்றங்களுக்கான அறிகுறி

சண்டே ரைம்ஸ்
கட்டுரையிலிருந்து
■ கோகுலன்

அண்மையில் உயர்த்தப்பட்ட மின்கட்டண உயர்வில் அதிரடி மாற்றங்கள் செய்யப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நடத்திய பிரமாண்ட மேதின கூட்டத்தில் அறிவித்தார்.

மின்கட்டண உயர்வானது அவரது அனுசரணையோடுதான் அறிவிக்கப்பட்டது. நாட்டில் மின்சக்தி பாவனையாளர்களில் அதிக கட்டணம் செலுத்தும் கிட்டத்தட்ட 50 வீதமானவர்களின் கணமையை ஜனாதிபதி குறைத்துள்ளார்.

மின்சார சபையோ, பொது சேவைகள் சபையோ மின்கட்டண உயர்வை அதிகரித்து இறுதியாக அறிவிப்பதற்கு முன்னர் முன்கூட்டியே விலாவாரியாக ஆராயவில்லை என்பது இப்போது தெளிவாகத் தெரிகின்றது. ஜனாதிபதியின் அறிவித்தலின்படி மாதம் 60 அலகுக்கு குறைவாக மின் பாவிப்பவர்களுக்கு கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது. முன்பு அலகுக்கு மூன்று ரூபாய் செலுத்தியவர்கள் புதிய அறிவிப்பின்படி 5 ரூபாய் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தனர். இனி அவர்கள் தொடர்ந்தும் முன்னைய விகிதத்திலேயே கட்டணத்தை செலுத்துவார்கள். இதற்கு மேலாக இந்தப் பிரிவினரும் 180 அலகு வரை மின் பாவிப்பவர்களும் எரிபொருள் கட்டணத்தில் 25 வீதம் குறைப்பை அனுபவிப்பார்கள். பாவனையைப் பொறுத்து அறவிடப்படும் வரி அமைப்பாகும் இது.

ராஜபக்ஷவின் இந்த அறிவிப்பு எப்படி இருந்தாலும் பெரும் அளவிலான மத்தியதர வருமானம் பெறும் தரப்பினர் தொடர்ந்தும் பாதிக்கப்படவே செய்வார்கள் என்று மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த பாவனையாளர்கள் இந்த மாதத்தின் கடைசியில் தமது கட்டண சிட்டைகளை பெறும்போது தான் கட்டண உயர்வின் தாக்கத்தை உணர்வார்கள் என்கிறார்கள் அந்த தரப்பினர். இந்த கட்டண உயர்வின் காரணமாக பொருள்களின் விலைகள் மற்றும் பொதுசேவைகளின் கட்டணங்களும் அதேசமயம் அதிகரிக்கும் என்று கூறத் தேவையில்லை.

## கொமன்வெல்த் அமைச்சர்கள் பணிக்குழு

வெளி உலக விவகாரங்களைப் பொறுத்த வரை கடந்த மாதம் லண்டனில் நடந்து முடிந்த பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அமைச்சர்களின் பணிக்குழு மாநாடுதான் அரசின் கவனத்தை அதிகம் கவர்ந்திருந்தது எனலாம். ஏப்ரல் 26 ஆம் திகதி நடைபெற்ற மாநாட்டில் நவம்பர் 15,16 ஆம் திகதிகளில் கொமன்வெல்த் நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்துவதென்று உறுப்பினர்கள் முடிவெடுத்தார்கள். இந்த அமைச்சர்கள் பணிக்குழுவில் ஓர் உறுப்பினராக இல்லாமல் போனாலும் இலங்கையின் சார்பில் மிகப் பிரயாசையுடன் பரப்புரைகளை நடத்துவதில் இறங்கியிருந்தது, ஒரு நாடு-அதுதான் இந்தியா. இந்தியாவின் சிரேஷ்ட ராஜதந்திரிகளில் ஒருவரும் இப்போது கொமன்வெல்த் செயலாளர் நாயகமாக இருப்பவருமான கமலேஷ்சர்மா அமைச்சர்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளை மிகசாதுரியமாக இலங்கைக்கு சாதகமாக நடத்தியிருந்தார். கனடா, பிரித்தானியா உள்ளிட்ட பொதுநலவாய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் இலங்கைக்கு எதிராக கடும் கருத்துக்களை முன்வைத்து வாதிட்டிருக்கிறார்கள்.

கொமன்வெல்த் கொள்கைகளை சீர்குலைப்பதாக அந்த நாடுகள் இலங்கை மீது கடுமையாக விமர்சனங்களை முன்வைத்திருந்த நிலையிலும் இலங்கைக்கு சார்பான ஒருமுகக். கருத்து ஏற்படுத்தப்பட்டிருந்ததாக தெரியவந்தது. உச்சிமாநாட்டை நடத்துவதற்கான இடத்தை மாற்றுவதற்கான அதிகாரம் பணிக்குழுவுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை என்று குழுவுக்கு தலைமை வகித்த பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் டிப்பு மொனி சுட்டிக்காட்டியிருந்தார். இதன் விளைவாக இடமாற்றம் செய்யப்படுவதற்கான முயற்சி எதுவும் வரவேற்கப்படவில்லை. இந்த வகையில் இந்தியா கணிசமாக அளித்திருந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகின்றது. இந்தக் கூட்டத்துக்கு சுமார் ஒரு வாரத்துக்கு முன்னர் மீள் நல்லிணக்கம் தொடர்பாக நடைபெற்ற கொமன்வெல்த் வட்டமேசை மாநாடு ஒன்று செயலாளர் நாயகம் கமலேஷ்சர்மா தலைமையில் நடைபெற்றது. இலங்கைக் குழுவொன்றும் அதில் கலந்து கொண்டது. அந்தக் கூட்டத்தில் கமலேஷ்சர்மா பேசுகையில்;

உலக பருவகால மீளாய்வு மாநாட்டில், தேசிய நல்லிணக்கத்தை உருவாக்கவும் அது தொடர்பான பொறி முறைகளை மீளவும் செயற்படுத்தவும் உண்மைகள் மற்றும் நல்லிணக்க குழுக்களின் பரிந்துரைகளை நிறைவேற்றவும் இந்தவிதமான தேசிய பொறிமுறைகளில் இருந்து கிடைக்கும் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பல கொமன்வெல்த் நாடுகள் உறுதியளித்திருந்ததை நீங்கள் நிச்சயம் அறிந்திருப்பீர்கள். கொமன்வெல்த்துக்கான எமது பங்களிப்பானது எமது உறுப்பு நாடுகள் எங்கே இருக்க விரும்புகிறார்களோ அவர்கள் அங்கே இருப்பதற்கு உதவி புரிவதாகும்-இந்த விடயத்தில் தகுதிகளை கட்டியெழுப்பவும் மீள் நல்லிணக்கத்தை முன்நகர்த்தவும் உதவி புரிவதாகும் என்று கூறினார்.

இலங்கையிலிருந்து சென்ற இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் வட்டமேசை மாநாட்டுக்கு முன்னராக செயலாளர் நாயகத்தை சந்தித்திருந்தார்கள். அதன் பிறகு வெளியிடப்பட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

கொமன்வெல்த் செயலகமும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவும் இரண்டு முக்கிய அவசர விடயங்களில் தொழில்நுட்ப உதவிகள் தொடர்பாக சம்மதம் தெரிவித்திருந்தன. அவை வரும் மூன்றிலிருந்து ஆறு மாதங்களுக்குள் நிறைவேற்றப்படும். மனித உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் தேசிய நல்லிணக்கத்தை குறிக்கோளாக கொண்டு தேசிய விசாரணைகளைப் பயன்படுத்துவதாகும்.

## பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள விருப்பம்

இந்தக் கூட்டத்தில் மோதலினால் இடம்பெயர்ந்துள்ள மக்களின் குடியமர்வுக்கான காணிகள் தொடர்பாக எஞ்சியுள்ள சவால்கள், சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழித்திட்டத்தின் நல்லிணக்க தொடர்புகள் மற்றும் குறைகளை அறிக்கையிடுவதற்கான செயலாக்க முறைமை ஆகியனவையும் விவாதிக்கப்பட்டன. இலங்கையில் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் காணப்படும் விடயங்களை தீர்த்து வைப்பதற்கான ஆரம்ப முயற்சிகளை கொமன்வெல்த் தொடங்கியிருக்கிறது என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. இன்னொரு வகையில் சொன்னால் ஜெனிவா தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்ட பிரச்சினைகளையும் சர்வதேச விமர்சனங்களையும் தீர்த்துக் கொள்வதற்கு இப்பொழுது இலங்கை அரசு அர்த்தமுள்ள விதத்தில் ஈடுபடத் தொடங்கியிருக்கிறது என்பதே. அதாவது ஐ.நா.மனித உரிமைகள் சபை செப்டெம்பரில் மீண்டும் கூடும்போது ஐ.நா.மீதும் அதன் உயர்நிலை பிரமுகர்கள் மீதும் வசைபாடுவதற்குப் பதிலாக ஓர் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான நிலையில் இலங்கை இருக்க முடியும் என்பதாம். இந்த முயற்சி எந்த அளவில் முன்னேறும் என்பதை காத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஏதுவானால் அரசு இப்போது கொமன் வெல்த்தை சேர்ந்த 54 நாடுகள் தன்னோடு இருக்கின்றன என்று சொல்லிக்கொள்ள முடியும்.

## இந்திய உறவின் நல் விளைவு

இது எவ்வாறு சாத்தியமாயிற்று? இந்த வருடம் மார்ச் மாதம் நடந்த ஜெனிவா மனித உரிமை மாநாட்டுக்கும் பிறகு கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையில் குறிப்பிடக்கூடிய அளவில் உறவுகள் பலப்பட்டிருப்பதே காரணம் என்றுதான் கொள்ள வேண்டும்.

கடந்த கால சம்பவங்களை மறந்து, நல்லுறவுகளைப் பலப்படுத்திக்கொண்டு முன்னேறுவதற்கான விருப்பத்தை இலங்கையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் விருப்பம் உயர்மட்ட தலைவர்கள் புதுடில்லியின் காங்கிரஸ் தலைவர்களுக்கு தெளிவாக கூறியிருக்கிறார்கள். இதன் விளைவு இது திடீரென ஏற்பட்டுள்ள ஒரு ராஜதந்திர நிலைப்பாடு எனலாம்.

இந்தியாவால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய இலங்கை சம்மதம் தெரிவித்துள்ளது. இவைகளில், சர்வதேசம் அக்கறை கொண்டுள்ள மனித உரிமை மீறல் மற்றும் நல்லிணக்கம் போன்ற விடயங்களும் அடங்கும். இது இந்தியாவை பொறுத்தவரை அதன் வெளியுறவுக் கொள்கையின் வெற்றி என்று கருதப்படுகின்றது. இலங்கை மீதான சீனாவின் தனித்துவ ஏகபோகத்தையும் பாகிஸ்தானின் பிரதான செல்வாக்கையும் நீக்குவதற்கு இது இந்தியாவுக்கு சாதகமாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

பலலட்சம் டொலர் பெறுமதியான சம்பூர் அனல் மின்நிலையம் தொடர்பான ஒப்பந்தம் இரண்டு நாடுகளுக்குமிடையில் கைச்சாத்திடப்படும் நிலையில் இருக்கின்றது. மின்கொள்முதல் மற்றும் செயல்பாடு தொடர்பான இரண்டு முக்கிய ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படவிருக்கின்றன. 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் எதிர்காலம் தொடர்பான இந்தியாவின் கவலை தணிக்கப்பட்டுள்ளது. வடமாகாண சபைத் தேர்தல் செப்டெம்பரில் நடத்தப்படும் என்று ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்தியுள்ளார். அவ்வாறு தேர்தல் நடத்தப்படும் என்பது 13 ஆவது திருத்தம் தொடர்ந்து இருக்கும் என்பதை அங்கீகரிப்பதாகும். அதனை முற்றாக ஒழிக்கவேண்டும் என்று சில சக்திகள் விடுத்துவரும் கோரிக்கைகளுக்கு மாறாக ஒரு சில சாத்தியமான திருத்தங்களுடன் அது அப்படியே இருக்கும் என்று தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறும்பு மாறாத குழந்தைகள்

''வைத்தியரே! உங்களிடம் ஒரு முக்கியமான ஆலோசனை கேட்பதற்காக வந்திருக்கிறேன் என்று பெண் ஒருவர் கூறினார்.

என்னம்மா விடயம் என்று வைத்தியர் கேட்டார்.

''எனது சிறுவன் நான்காம் வகுப்பில் கல்வி கற்கின்றான். இன்னும் அவனின் குறும்புத்தனம் குறையவே இல்லை!

என்ன செய்கிறான்.

''தினமும் பாடசாலையிலே மற்றைய பிள்ளைகளை அடிக்கிறான்... பக்கத்து வீட்டுப் பிள்ளைகளுடனும் கூடவும் சண்டை போடுகின்றான். எனக்குப்பெரிய கஷ்டமாக இருக்கிறது.... என்றார்!

''குழந்தைகளிடம் துறுதுறுப்பு, கவனச் சிதறல், வேகம், மிதமிஞ்சிய செயல்கள் எல்லாம் இருக்கும்.

வயது அதிகரிக்க இது குறைந்து சம நிலைக்கு வந்துவிடும். ஆனால் இத்தகைய வரம்பு மீறிய இயக்க நிலை சில குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களான பிறகும் நிலைத்திருக்கும்.

இது நீடித்தால் அவர்கள் சமூக விரோதிகளாக மாறலாம்... மன நோயாளிகளாகக் கூட ஆகலாம்! என்றார் வைத்தியர்.

இதுக்கு என்ன செய்யலாம் வைத்தியர் என்றார் அந்தப் பெண்.

''மருந்து கொடுக்கலாம்... மனவழி மருத்துவம் மூலமும் குணப்படுத்தலாம். இப்படிப்பட்ட சிறுவர்களிடம் நாம் மிகவும் கவனமாகப் பேசவேண்டும். அதுசரி இப்பொழுது எங்கே இருக்கிறான் உங்கள் சிறுவன்?

''அதோ அந்தக் கதவுக்குப் பின்புறமாக ஒழிந்து நின்று கொண்டிருக்கிறான்; வைத்தியர். என்றார்''

நீங்கள் எதுவும் பேசவேண்டாம். நான் எப்படி அவனிடம் பேசுகிறேன் என்பதை மட்டும் கவனியுங்கள் என்றார் வைத்தியர்.

''சரி வைத்தியர் என்றார் அந்தப்பெண்!''


''தம்பி... இங்கே வா என்று அழைத்தார் அந்த வைத்தியர்.

''என்ன வைத்தியர் என்றான் அந்தச் சிறுவன்.

உன்னிடம் நான் இப்போது ஒரு கேள்வி கேட்கப் போகிறேன்... நீ அதுக்குப் பொறுப்பாகப் பதில் சொல்ல வேண்டும் என்றார்.

சரி வைத்தியர் என்றான் அந்தச் சிறுவன்.


''கடவுள் எமது பாவங்களை மன்னிக்க வேண்டும் என்றால் அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்.



முதலில் பாவங்களைச் செய்ய வேண்டும் என்றான் அந்தச் சிறுவன்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# 1990–2003 வரை இயங்காத யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி




தொடர்ச்சி....

**எம்.எவ்.எம்.இக்பால்**

ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் ஜிப்ரி தலைமையில் 11 மாதங்கள் உருண்டோடின. அவர் மாற்றலாகிச் சென்றதன் பின்னர் ஒன்றரை மாதங்கள் ஞானசுந்தரம் பதில் கல்லூரிக்கு அதிபராகக் கடமையேற்றார். அதன் பின்னர் 01.02.1964 தொடக்கம் ஜனாப் எம்.எம்.யூஸுப் புதிய அதிபராக நியமனம் பெற்றார்கள். அவரின் பதவிக்காலத்தில் பல முக்கிய விடயங்கள் இடம்பெற்றன.

முதன்முதலாக அவரின் பதவிக் காலத்திலேயே பச்சையும் வெள்ளையும் கலந்த கல்லூரிக் கொடி அறிமுகம் செய்யப்பட்டது. அத்துடன் கல்லூரியின் இலச்சனையும் ஓ.எஸ்.எம்.ஏ.கபூர் ஆசிரியரால் வரைவாக்கம் செய்யப்பட்டது. எதிர்கால விளையாட்டு வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு இக்பால், ஷாபி, அலி ஆகிய இல்லங்கள் உருவாக்கப்பட்டன. அதன்பிற்பாடு கஸ்ஸாலி இல்லமும் இணைத்துக் கொள்ளப்பட்டது.

ஜனாப் யூஸுப் அதிபரின் நற்சேவைகளைத் தொடர்ந்து அவர் மாற்றலாகிச் சென்ற பின் 01.02.1967 தொடக்கம் ஜனாப் எம்.எம்.அப்துல் குத்தூஸ் பதவி வகித்தார்கள். அதிபர் குத்தூஸ்கல்வியியல் டிப்ளோமா படிப்புக்காக சென்றிருந்த இடைக்காலத்தில் ஆசிரியர் ஜனாப் என்.எம்.ஏ.கபூர் அவர்கள் 11.10.1967 - 18.03.1968 வரை பதில் அதிபராகப் பணிபுரிந்தார். கல்லூரி முகப்பில் முதன் முதலாக Osmaniya College Jaffna 1963 என்ற வாசகத்தைப் பதிப்பித்த பெருமை இவரையே சாரும்.

1970 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் பதியுதீன் மஹ்மூத்தை மீண்டும் கல்வியமைச்சராக்கியது. இந்த சந்தர்ப்பம் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு மீண்டும் ஒரு பொற்காலமாகத் திகழ்ந்தது. தனிப்பட்ட முறையில் கல்லூரியின் மீது அக்கறை செலுத்திய அமைச்சர் கல்லூரிக்காக அதிக அபிவிருத்தித் திட்டங்களை மேற் கொண்டார்.

ஒஸ்மானியாக் கல்லூரியை அபிவிருத்தி செய்வதில் பெரும் முன்னோடியாகத் திகழ்ந்தார். அந்த வகையில் யாழ். முஸ்லிம் சமுதாயமே அவருக்கு என்றும் நன்றிக்கடன் பட்டவர்களாக இருக்க வேண்டும். சுருக்கமாகச் சொல்லப் போனால் ஒஸ்மானியாவின் [illegible] தலைவருமாக இருந்த [illegible] அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் அவர்களுக்கு நன்றி செலுத்தும் முகமாக எமது கல்லூரியின் மண்டபத்துக்காக 'அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் மண்டபம்' என்று நாமம் சூட்டப்பட்டது. 1972.05.12 அன்று அமைச்சரின் பொற்கரங்களாலேயே இந்த மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

திறப்பு விழாவின் போது பல கலைநிகழ்ச்சிகள் மேடை யேற்றப்பட்டன. அதிபர் குத்தூஸ் முயற்சியால் கல்லூரியில் தொலைபேசி இணைப்பு நிரந்தரமாக்கப்பட்டது. இவரின் பதவிக்காலத்தில் பல கட்டட நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டன. வர்த்தக கல்வி அறைகளும் இந்தக் காலத்தில்தான் நிர்மாணிக்கப்பட்டன.

**அதிபர் குத்தூஸ் முயற்சியால் கல்லூரியில் தொலை பேசி இணைப்பு நிரந்தரமாக்கப்பட்டது. இவரின் பதவிக்காலத்தில் பல கட்டட நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டன. வர்த்தக கல்வி அறைகளும் இந்தக் காலத்தில்தான் நிர்மாணிக்கப்பட்டன.**

பொது விஞ்ஞான ஆய்வுக் கூடமும் சிறப்புற பூர்த்தியடைந்து இரசாயனப் பொருள்களும் உபகரணங்களும் நிரம்பி வழிந்தன. அதிபர் குத்தூஸைத் தொடர்ந்து 30.06.1974 இல் ஜனாப் ஏ.எச்.ஹாமீம் அதிபர் பதவியை ஏற்றார். இவர் கல்லூரியில் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதில் அரும்பாடுபட்டார். இவரது காலத்தில் உதைப்பந்தாட்டக் குழு தேர்ச்சியடைந்த நிலையில் காணப்பட்டது.

மட்டுமல்லாமல் கல்லூரியின் முற்றமும் வளாகமும் சீரமைக்கப்பட்டது. பசுமரங்களும், மலர்ச் செடிகளும், பயன்தரு பயிர்களும் நாட்டப்பட்டு இயற்கையான குளிர்ச்சியான சூழலை உருவாக்கிய பெருமை ஜனாப் ஏ.எச்.ஹாமீம் அதிபருக்கே உரித்தாகும். அத்துடன் இவரது காலத்திலேயே கல்லூரியில் ''இரட்டை அலகு விஞ்ஞான ஆய்வுகூட, கட்டடமும் திறந்து வைக்கப்பட்டது.

03.08.1979 ஆம் ஆண்டில் ஜனாப் ஏ.எச்.ஹாமீம் அதிபர் இடமாற்றம் பெற்றதையடுத்து ஜனாப் எம்.கே.எம். ஹனீபா பதில்அதிபராகக் கடமையாற்றினார். அதன் பின்னர் 03.04.1980 இல் ஜனாப் எம்.ஏ.ஆர்.ஏ.றஹீம் அதிபர் பதவியேற்றார். அவர் விடுமுறை பெற்றிருந்த காலத்தில் 07.08.1981 - 27.12.1981 வரை ஜனாப் கே.எம். ஹம்தூன் பதில்கடமை புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

[வளரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிஞர் சூரியநிலா எழுதிய 'கவடுகள்' விதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா உசன் இராமநாதன் மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது முதற்பிரதியை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தனுக்கு வழங்குவதையும் நடுவில் நூலாசிரியர் நிற்பதையும் காணலாம். (ந 9)

# மந்திகைச் சந்தி குறுக்கு வீதி முன்னறிவிப்பு இன்றி தடை

## போக்குவரத்துக்கு மக்கள் பெரும் சிரமம்

வடமராட்சி,மே 7

மந்திகைச் சந்தி, குறுக்கு வீதி முன்னறிவிப்பு இன்றி போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்டுள்ளதால் இந்த வீதி ஊடாகப் பயணிப்போர் நீண்டதூரம் சென்று வேறு பாதை ஊடாகப் பயணிக்க வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை- யாழ்ப்பாணம், பருத்தித்துறை-சாவகச்சேரி வீதிகளை இணைக்கும் மந்திகைச் சந்தி, பிரதேச சபை அலுவலகம் ஆகியவற்றின் அருகால் செல்லும் மந்திகைச் சந்தி குறுக்கு வீதியே இவ்வாறு தடை செய்யப்பட்டுள்ளது.

சந்தை கட்டுவதற்கான கட்டுமானப் பொருள்கள் குவிக்கப்பட்டு நடு வீதியில் வைத்து கொங்கிறீட் கற்கள் அறுக்கப்பட்டு வருகின்றன. இதனால் சந்தைக்கு வந்து செல்வோரும், வடமராட்சி கிழக்கிலிருந்து இ.போ.ச. , தனியார் பஸ் வண்டிகளில் வரும் பயணிகள் சாவகச்சேரி வீதியில் இறங்கி யாழ்ப்பாணம் பயணிக்க பரு-யாழ் வீதிக்கும், யாழ்ப்பாணம், கொடிகாமம் பகுதிகளிலிருந்து இ.போ.ச., தனியார் பஸ் வண்டிகளில் வருவோர் பரு-யாழ், வீதியில் இறங்கி வடமராட்சி கிழக்குப் பயணிக்க பருத்தித்துறை- சாவகச்சேரி வீதிக்கும் சென்றே மாற்று பஸ் வண்டிகளைப் பிடிக்க வசதியாக இருந்தது.

> சந்தை கட்டுவதற்கான கட்டுமானப் பொருள்கள் குவிக்கப்பட்டு நடு வீதியில் வைத்து கொங்கிறீட் கற்கள் அறுக்கப்பட்டு வருகின்றன.

பயணிகளுக்கும், பொது மக்களுக்கும் மிகச் சுலபமாக இருந்த இந்தச் சந்தைக் குறுக்கு வீதியில் இவ்வாறு தடைகள் ஏற்படுத்தப் பட்டமையால் அந்தப் பகுதி மக்கள் மாத்திரமன்றி அந்த வீதியால் பயணிப்போரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இந்த குறுக்கு வீதியின் இரு கல்லைப்புறத்திலும் வீதி தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்ற விளம்பரப் பலகைகள் கூட வைக்கப்படவில்லை. இதனால் பரு-யாழ் வீதியிலிருந்து இந்த குறுக்கு வீதியில் பயணிப்போர் இடை நடுவில் வீதித் தடையினால் தொடர்ந்து பயணிக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்று ஆஸ்பத்திரி வீதி அல்லது சிலையடிச்சந்தி ஊடாக பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான மந்திகைச் சந்தைக் கட்டுமானப் பணிக்கான கொங்கிறீட் அறுக்கும் வேலைகளை சந்தைக்குப் புறத்திலோ அன்றேல் வேறிடத்திலோ மேற்கொண்டிருக்கலாம் என அனைத்துத் தரப்பினரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

சந்தை கட்டுமானப் பணிகளுக்கான வேலைகளை பிறிதொரு இடத்துக்கு மாற்றி குறுக்கு வீதியில் வழமை போல மக்கள் சென்று வர பருத்தித்துறை பிரதேச சபை உடனடியாக மாற்று நடவடிக்கை எடுக்குமா எனவும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ந-8)

## சின்னக்கடை வீதி திருத்தப்படுமா?

குருநகர்,மே 7

குருநகர் சின்னக்கடைப் பொதுச் சந்தையின் கிழக்கு வீதி பெரியளவு சேதமடைந்து குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

இதனால் இந்தச் சந்தைக்குப் பொருள்களை வாங்க வரும் பொது மக்களும், விற்பனைக்காக வரும் வியாபாரிகளும் மிகவும் சிரமத்தை எதிர்கொண்டு வருகிறார்கள். இந்த வீதியைத் திருத்த யாழ்.மாநகரசபை உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ந-51)

# காரைநகரில் சுகாதாரம் பேணுக தவறின் சட்ட நடவடிக்கை

## சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தல்

காரைநகர், மே 7

காரைநகர் பிரதேசத்தில் உள்ள உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் பல சரக்கு கடைகள் என்பன உரிய முறையில் சுகாதாரத்தைப் பேண வேண்டும். தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரப் பகுதியினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உணவு கையாளும் நிலையங்கள், பலசரக்குக் கடைகள் என்பன உரிய முறையில் எண்ணெய் தீந்தை (ஓயில் பெயின்ற்) பூசப்பட்டு மரக்கறி தட்டுக்கள் அமைக்கப்படவேண்டும்.

உலர் உணவு பொருள்கள் அனைத்தும் பிளாஸ்ரிக் வாளிகளில் சேமித்து வைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் தச்சு தொழிற்சாலைகள், இரும்பு ஒட்டும் தொழிற்சாலைகளில் கடமையாற்றுவோர் கையுறை பாவிக்க வேண்டும். முதலுதவிப் பெட்டி மற்றும் கண்ணுக்கு, கண்ணாடி அணிதல் அவசியம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனை மீறி நடக்கும் வர்த்தகர்களின் வியாபார உரிமைப் பத்திரம் இடைநிறுத்தப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என பொதுச் சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தி உள்ளனர். (ந-250)

# திண்மக் கழிவுகளை அகற்றியும் குடிதண்ணீரை வழங்கியும் வருகிறோம்

வலி.மேற்கில் சங்கானை, சுழிபுரம் மற்றும் இதர பகுதிகளில் திண்மக் கழிவுகள் அகற்றப்படுவதுடன், குடிதண்ணீர் கிடையாத பிரதேசங்களுக்கும் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருவதாக வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சிவகுரு பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட திண்மக் கழிவு அகற்றல் மற்றும் குடிதண்ணீர் விநியோகம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே பாலகிருஷ்ணன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வலி.மேற்கு பிரதேச சபை 25 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு முதற்கட்டமாக சுத்தமான பிரதேசங்களாக இருக்கவேண்டும் என்பதால் திண்மக் கழிவுகள் அகற்றப் படுகின்றன.

அத்துடன் குடிதண்ணீர் கிடையாத பிரதேசங்களுக்கும் குடிதண்ணீர் வழங்கி வருகின்றோம்.

எதிர்காலத்தில் பல்வேறுபட்ட சேவைகளை வலி. மேற்கு மக்களுக்கு வழங்கவுள்ளோம்'' -என்றார். (எ)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# நெல் கொள்வனவு படுமோசம்; வடக்கு விவசாயிகள் பாதிப்பு

வடமாகாணத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட நெல் கொள்வனவு போதுமானதல்லவென விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தமுறை பெரும் போகத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபை 8 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் நெல்லை மாத்திரமே கொள்வனவு செய்துள்ளது.

வட மாகாணத்திலுள்ள மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் இந்த முறை அதிக நிலப்பரப்பில் நெல் விளைவிக்கப்பட்டது. இதில் விளைந்த நெல்லில் 8 ஆயிரத்து 500 மெ.தொன் நெல் மட்டுமே அரசினால் கொள்வனவு செய்யப்பட்டது. எஞ்சியுள்ள நெல்லைத் தனியார் வர்த்தகர்களுக்குக் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய அவலநிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

> விளைந்த நெல்லில் 8 ஆயிரத்து 500 மெ. தொன் நெல் மட்டுமே அரசினால் கொள்வனவு செய்யப்பட்டது.

இங்குள்ள விவசாயிகளிடம் களஞ்சிய வசதிகள் இல் [illegible] ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-22)




வலி.மேற்கு அராலி [illegible] அலுவலகத்தில் நலன்புரிச் சங்கத் தலைவர் நா.அருணகிரிநாதன் தலைமையில் சேவை நயப்பு விழா இடம்பெற்றது.

இதில் நாற்பது வருட சேவையின் பின் இளைப்பாறிய [illegible] அதிகாரநந்தனுக்கு சமூகசேவை [illegible] சுழிபுரம் பிரதேச சபை செயலாளர் திருமதி சாரதா உருத்திரசாம்பவன் வழங்கிக் கௌரவித்தார். (ந 41)

## வழிகாட்டல் பரீட்சை

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் ஐந்தாம் தரப்புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை நடைபெறவுள்ளது.

வலய ஆரம்பப் பிரிவினரால் நடத்தப்படும் வலயமட்ட புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை, 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய திகதிகளில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ந-9)

## பேரவைக் கூட்டம்

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக மூத்த பிரசைகள் பேரவையின் மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் சிவாகிருஷ்ணமூர்த்தி தலைமையில் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடார்:** நீண்ட நாள்களாகப் பிற்போட்ட காரியங்கள் இன்று முடியும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். குடும்பத்தினரின் ஆதரவு கிட்டும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். மனக்குழப்பங்கள் விலகும்.

**இடபார்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். பேச்சால் தடைப்பட்ட காரியங்களை முடிப்பீர்கள். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**மிதுனார்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். உடன்பிறந்தவர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நட்பு வட்டாரம் விரிவடையும். அரச காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**கடகார்:** எந்தக் காரியத்தை தொட்டாலும் இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டி சூழ்நிலை உருவாகும். சிலரின் நயவஞ்சக செயலை நினைத்து வருந்துவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**சிங்கார்:** உடன்பிறந்தவர்களின் நீண்டநாள் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபார ரீதியாக சிலரை சந்திப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.

**கன்னி:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும். மறைமுக போட்டிகளை வெல்வீர்கள்.

**நாளை**

*சித்திரை-25 புதன்கிழமை 08.05.2013*
*திதி: சதுர்த்தசி பி.இ. 05.06 வரை*
*நட்சத்திரம்: அச்சுவினி முழுவதும்*
*சுபநேரம்: 04.25- 05.25 வரை*
*இராகுகாலம்: 11.55- 01.25 வரை*

**துலார்:** முடியாமல்போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிட்டும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பிள்ளைகளின் எண்ணங்களைக் கேட்டறிவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு கிடைக்கும்.

**விருச்சிகார்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப்போவீர்கள்.

**தனுசா:** மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளி வட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் ஆதரவு உண்டு.

**மகரார்:** அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். அயல் வீட்டாரின் அனபுத்தொல்லைகள் விலகும். ஆடம்பரச் செலவுகளை தவிர்ப்பீர்கள். கோபம் நீங்கும்.

**கும்பார்:** அநாவசியப் பேச்சை தவிர்ப்பது நல்லது. குடும்ப அந்தரங்க விடயங்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டாம். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாக கிடைக்கும்.

**மீனார்:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர், நண்பர்களுடன் விரிசல்கள் வரக்கூடும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 7 | 4 | | 1 | 8 | | 2 |
| 4 | | | 3 | | 5 | | | 6 |
| 1 | | 6 | | | | | 5 | |
| | 6 | | 2 | 8 | 7 | | | |
| 7 | | | | | | | | 3 |
| | | | 9 | 3 | 6 | | 4 | |
| | 7 | | | | | 4 | | 1 |
| 2 | | | 1 | | 9 | | | 8 |
| 6 | | 3 | 8 | | 2 | 7 | 9 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 6 | 4 | 2 | 3 | 8 | 8 | 9 | 1 |
| 3 | 9 | 8 | 1 | 7 | 5 | 4 | 6 | 2 |
| 5 | 2 | 1 | 6 | 4 | 9 | 7 | 8 | 3 |
| 9 | 3 | 5 | 8 | 1 | 7 | 2 | 4 | 6 |
| 8 | 7 | 2 | 4 | 5 | 6 | 1 | 3 | 9 |
| 1 | 4 | 6 | 3 | 9 | 2 | 8 | 7 | 5 |
| 4 | 8 | 9 | 5 | 6 | 1 | 3 | 2 | 7 |
| 6 | 1 | 3 | 7 | 2 | 4 | 5 | 9 | 8 |
| 2 | 5 | 7 | 9 | 8 | 3 | 6 | 1 | 4 |

சுடோக்கு [illegible] 1 - 9 வரையான எண்களை [illegible] ( [illegible] ). இந்த [illegible] 1 - 9 வரையான எண்கள், இரண்டு [illegible] [illegible] 1 - 9 இலக்கங்கள் [illegible] சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிக்கோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில்


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்**
**05.02.1931**

**மறைவு**
**19.04.2012**

## அமரர் சேதுகாவலர் சங்கரப்பிள்ளை

திதி: திரயோதசி (07.05.2013)

எங்கள் குடும்பத்தின்
ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
அன்போடும், பண்போடும்,
பாசத்தோடும் பேணிப்பாதுகாத்து
எம்மை நல்வழி நடத்தி இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் அன்புத் தெய்வத்தின்
பொன்னடிகளில் இந்த நினைவு
அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

**நீங்கா நினைவுடன்:**
**குடும்பத்தினர்**

(37087)(6)

**கைதடி கிழக்கு, கைதடி.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புராதன சிலைகள் திருட்டு



அநுராதபுரம்,மே 7

அநுராதபுரம், சாம விகாரையில் வைககப்பட்டிருந்த புராதன வெண்கல சிலைகள் இரண்டு திருடப்பட்டுள்ளன.

புராதன பெறுமதி வாய்ந்த சரஸ்வதி சிலையும், தெடிமுண்டதேவ சிலையுமே இவ்வாறு திருடப்பட்டுள்ளன என்று சாம விகாரையின் விகாராதிபதி மஹஸில்ச்சியே விமல தேரர் தெரிவித்தார்.

அண்மையில காலியில இடம்பெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்து கொள்ளச் சென்றிருந்த தான் கடந்த சனிக்கிழமை இரவு விகாரைக்கு வந்தவேளை, சிலைகள் திருட்டுப் போயுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும், பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தேரர் மேலும் தெரிவித்தார். (ச)

# பிரேமதாஸ பிரதமராக இருந்தபோது 100 வீதம் மின் கட்டணம் அதிகரிப்பு

## சஜித்துக்கு அமைச்சர் பவித்ரா பதிலடி

கொழும்பு,மே 7

சஜித் பிரேமதாசவின் தந்தை ரணசிங்க பிரேமதாச பிரதமராக இருந்த போது மின் கட்டணங்களை 100 வீதம் அதிகரித்தார்.

அவ்வாறே அவர் ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் மின் கட்டணங்களை 43 வீதமாக அதிகரித்தார் என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னி ஆராச்சி தெரிவித்தார்.

மின்சக்தி, எரிசக்தி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை வரலாற்றில் மின்சாரக் கட்டணத்தை 100 வீதம் அதிகரித்த ஒரே அரசு ஐ. தே. கட்சியாகும். நுரைச்சோலை, மேல் கொத்மலை போன்ற குறைந்த செலவிலான மின் திட்டங்கள் ஐ.தே.க. காலத்தில் இருந்தே உத்தேசிக்கப்பட்டிருந்தன.

பல்வேறு காரணங்களால் சிலர் எதிர்க்கும் போது அரசியல் ரீதியாக நட்டம் ஏற்படுமென கருதி அவர்கள் அவற்றை நடைமுறைப்படுத்தவில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நாட்டைப் பற்றிச் சிந்தித்து சகல சவால்களுக்கும் பயமின்றி முகம்





கொடுத்து மின் திட்டத்தை ஆரம்பித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படுகிறது.

2014 ஆம் ஆண்டில் 100 வீதமாக நாட்டுக்கு மின்சாரம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக நுரைச்சோலையின் இரண்டாம், மூன்றாம் கட்ட மின் நிலையங்கள் இந்த வருடத்திலும், அடுத்த வருடத்திலும் திறக்கப்படும்.- என்றார். (ச)

# பொதுநலவாய நாடுகள் மத்தியில் இலங்கைக்கு சிறந்த ஆதரவு


## தூதர் கிரிஸ் நோனிஸ் தெரிவிப்பு

கொழும்பு,மே 7

பொது நலவாய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கின்ற நாடுகள் இலங்கைக்கு சிறந்த ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றன என்று பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதர் கிரிஸ் நோனிஸ் தெரிவித்தார்.

அவர் ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும்போதே இவ்வாறு கூறினார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை நடத்தக்கூடாது என கனடா மாத்திரமே கோரிக்கை விடுத்து வருகிறது. எனினும் ஏனைய 54 நாடுகளும் இந்த மநாட்டுககு ஆதரவளித்துள்ளன. (ச)



கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வர் அஸாத் ஸாலியின் விடுதலைக்காக கொழும்பு தெவட்டகஹ பள்ளிவாசலில் விசேட துஆ பிரார்த்தனை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்தப் பிரார்த்தனையில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், ஐக்கிய சோஷலிச கட்சித் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மூன்று ஆங்கில எழுத்துக்களுடன் இலக்கத் தகடுகள்

கொழும்பு,மே 7

மோட்டார் வாகனங்களுக்கு 3 ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட இலக்கத் தகடுகள் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வழங்கப்படும் என்று மோட்டார் வாகன திணைக்களத்தின் பதிவாளர் எஸ்.எச். ஹரிஸ்சந்திர தெரிவித்தார்.

தற்போது இலங்கைக்கு தருவிக்கப்பட்டிருக்கும் 64 லட்சம் புதிய வாகனங்களுக்கு இந்த 3 ஆங்கில எழுத்துக்களுடன் கூடிய இலக்கத் தகடுகள் பொருத்தப்படும் என்று அவர் தெரிவித்தார். ஒருவர் தன்னுடைய பெயரை இலக்கத் தகடுகளில் பொறித்த வாகனங்களை 10 ஆண்டுகளுக்கு பயன்படுத்த முடியும் என்று அவர் கூறினார். (ச)

# மனித புதைகுழி தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள்

## இந்தவாரம் மேற்கொள்ள ஜே.வி.பி. திட்டம்

மாத்தளை,மே 7

மாத்தளையில் மனித எச்சங்கள் அடங்கிய புதைகுழி தொடர்பில் நீதிமன்ற செயற்பாடுகள் இந்தவாரம் மேற்கொள்ளப்படவுள்ளன என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

மாத்தளைப் பிரதேசத்தில் காணாமற் போனவர்களின் உறவினர்களுடன் இணைந்து தமது கட்சித் தரப்பினர் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மாத்தளை மனிதபுதைகுழி தொடர்பில் ஆராய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு



அமைக்கப்பட்டுள்ள நிலையில், ஜே.வி.பியினர் விசேட நீதிமன்றமொன்றை கோரியுள்ளனர்.

இந்த விசாரணைகள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியும் தமது செய்தியாளர் சந்திப்புகளின் போது பல தடவைகள் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பினான்ஸ் நிறுவன அதிகாரிகளை கொள்ளையரென நினைத்து தாக்குதல்

## புத்தளம் பகுதியில் சம்பவம்

கொழும்பு,மே 7

நிதி நிறுவனமொன்றுக்கு மாதாந்த தவணைக் கட்டணத்தை செலுத்தத் தவறிய ஓட்டோவின் உரிமையாளரை மடக்கி அவரிடமிருந்து பினான்ஸ் நிறுவன அதிகாரிகள் ஓட்டோவை எடுத்துச் சென்றனர். இந்தச் சம்பவம் புத்தளம், வேவாசி என்னுமிடத்தில் இடம்பெற்றது.

அதனை அவதானித்த இளைஞர் கோஷ்டியொன்று வாகனத்தை கொள் ளையர்கள் தான் அபகரித்துச் செல்கின்றார்கள் என்று நினைத்து மற்றொரு வாகனத்தில் துரத்திச் சென்று அவர்களைப் பிடித்தனர்.

இளைஞர் குழு அவர்களிடமிருந்த 5 ஆயிரம் ரூபா பணத்தையும் கையடக்க தொலைபேசி ஒன்றையும் அபகரித்துக்கொண்டு மாயமாய் மறைந்தது. (ச)

# விசாரணையில் இருந்து தப்பிக்கவே துமிந்த சில்வா வைத்தியசாலையில்

## ஹிருனிகா குற்றச்சாட்டு

கொழும்பு,மே 7

நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்தசில்வா நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார் என்ற அச்சத்திலேயே மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு முல்லேரியா தாக்குதல் சம்பவத்தில் கொல்லப்பட்ட பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிருனிகா பிரேமச்சந்திர குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் அவர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிங்கப்பூரில் இருந்து இலங்கை வந்ததன் பின்னர் நவலோக வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த துமிந்தசில்வா, பின்னர் கடந்தவாரம் அங்கிருந்து வெளியேறினார்.



எனினும் நேற்றுமுன்தினம் மீண்டும் வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது வழக்கு விசாரணையில் இருந்து தப்பித்துக் கொள்ள துமிந்த சில்வா தரப்பில் மேற்கொள்ளப்பட்ட தந்திரமான செயல். -என்றார். (ச)

# முருங்கைக்காயில் இரும்புச்சத்து அதிகம்



கொழும்பு,மே 7

தனிநபர் ஒருவரின் உடலுக்கு நாளொன்றுக்கு அவசியமான இரும்புச் சத்தில் 80 வீதம் முருங்கைக்காயில் இருக்கிறது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் உணவுப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்தத் தகவல் கண்டறியப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு முருங்கை, கீரை 100 கிராம் உணவில் [illegible] டால் அன்றைய தினத்துக்குத் தேவையான இரும்புச் சத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்று அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முருங்கைக்காயில் உள்ள எண்ணெய் உடலுக்குத் தேவையான கொழுப்பு உருவாவதை உறுதி செய்கிறது.

முருங்கைக்காய் விஷக்கிருமிகளை அழிப்பதுடன், உடலில் சுறுசுறுப்புத் தன்மையையும் அதிகரிக்கிறது என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இதுகுறித்து பொதுமக் [illegible] நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சு கூறியுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயக் கண்காட்சி இம்முறை வட்டக்கச்சியில்

## ஒகஸ்ட் மாதம் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே 7

விவசாயத் திணைக்களத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் விவசாயக் கண்காட்சி இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் வட்டக்கச்சியில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடாநாட்டு விவசாயிகளின் உற்பத்தித் திட்டங்களை பன்முகப்படுத்துதல் மற்றும் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தும் நோக்குடன் வருடாந்தம் விவசாய கண்காட்சியை விவசாயத் திணைக்களம் நடத்தி வருகிறது.

இதற்கமைவாக இந்த வருடம் கண்காட்சியை கிளிநொச்சி வட்டக்கச்சியில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருட விவசாயக் கண்காட்சி யாழ்.மாவட்டத்தில் நடைபெற்றது. எனினும் வன்னி மாவட்ட விவசாயிகளும் பயன் பெறுவதற்கு ஏதுவாக விவசாயக் கிராமமான வட்டக்கச்சியில் இந்த வருடம் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

இதற்கான முன்னேற்பாடுகளை அந்தப் பகுதி விவசாயத் திணைக்களங்கள் ஏற்பாடு செய்து வருகின்றன. விசேடமாக இந்தக் கண்காட்சியை வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் பார்வையிடக் கூடியதாகவும் வசதி வாய்ப்புக்கள் செய்யப்படவுள்ளன.

அன்னாசி பயிற்செய்கை, வாழை பயிற்செய்கை, சேதன பசளை வீட்டுத் தோட்டப் பயிற்செய்கை உட்பட மூலிகைத் தோட்டம் போன்ற வற்றை அமைத்து அந்தந்த இனக்கன்றுகளை கண்காட்சிகளில் பார்வையிடுவோர் வாங்கக் கூடியதாகவும், விவசாயிகள் சிறுசந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள ஏதுவாகவும் இந்தக் கண்காட்சி அமையவுள்ளது. இதனைவிட பாடசாலை மாணவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு தகுந்த ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன. (ஒ-14)

# மீள்குடியமர்வு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே 7

வலி.வடக்கின் மீள்குடியமர்வு தொடர்பான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு மல்லாகம் கோணப்புலம் நலன்புரி முகாமில் நலன்புரி நிலையக் குழுத் தலைவர் அன்ரனி குயின் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இது குறித்து மேற்படி குழுவின் தலைவர் கூறுகையில்: "நாம் 23 வருடகாலமாக முகாம்களிலேயே வாழ்கிறோம். இது இவ்வாறு நீடித்தால் நம் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடும். இதனால் கண்ணகி முகாம், சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையம், கோணப்புலம் நலன்புரி முகாம்கள், ஊரணி முகாம், பிள்ளையார் முகாம், தும்புத் தொழிற்சாலை முகாம், உரும்பிராய் முகாம், அளவெட்டி கிழக்கு முகாம், சிந்து முகாம் ஆகிய 10 முகாம்களைச் சேர்ந்த நிர்வாகக் குழு உறுப்பினர்களும் கலந்து ஆலோசித்து சில தீர்மானங்களை எடுக்கவுள்ளோம்" என்றார். (ஒ-ரி)

# சாவகச்சேரி வணிகர் மன்ற ஆண்டு விழா





தென்மராட்சி,மே 7

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 34ஆவது ஆண்டு நிறைவு விழாவில் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸுக்கு "ஆளுமையுடைய தலைவர்" என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

கடந்த மூன்று வருடங்களாக தலைவராக பணியாற்றி வணிகர்களின் பல்வேறு தேவைகளை சுமுகமான முறையில் தீர்த்து வைத்தமைக்காக வணிகர்களால் இந்தப் பட்டம் வழங்கப்பட்டது.

சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் இந்தப் பட்டத்தினை வழங்க மன்றின் மூத்த உறுப்பினர் கா.நவரத்தினம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

நிகழ்வில் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார், "தவராஜசிங்கம் விதவை நிதிய"க் கொடுப்பனவை வழங்கினார்.

இதேவேளை-

### நான்காவது தடவையாக செயற்குழு தெரிவு

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தில் நான்காவது தடவையாக வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையிலான செயற்குழு ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது. கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற 34ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சபையோரின் ஏகமனதான வேண்டுகோளின் பிரகாரம் தொடர்ந்து செயற்குழு இயங்கும் என அறிவிக்கப்பட்டது.

மன்றத்தின்தலைவராகவஸ்ரீபிரகாஸ், உப தலைவராக டாக்டர் எஸ். எஸ்.அருளானந்தம் செயலாளராக க.சுதாகரன், உப செயலாளராக வ.இரவிச்சந்திரன், பொருளாளராக இ.சுரேஷ் ஆகியோருடன் 18 நிர்வாக உறுப்பினர்களும் தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென மன்ற உறுப்பினர்கள் ஏகமனதாகத் தெரிவித்ததை அடுத்து தொடர்ந்து இதே செயற்குழு இயங்கும் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-ந-9)

### வளிமண்டலவியல் திணைக்கள உதவியாளர் பதவிக்கு நேர்முகம்

யாழ்ப்பாணம், மே 6

வளிமண்டலவியல் திணைக் களங்களில் 45 உதவியாளர்கள் வெற்றிடங்களுக்கு ஆயிரத்து 600 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

அவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் கடந்த திங்கட்கிழமை தொடக்கம், எதிர்வரும் 16ஆம் திகதி வரை கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகத் தேர்வு ஏப்ரல் மாதம் என்று தவறுதலாக அறிவிக்கப்பட்டுவிட்டது என்று திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

வடக்குக் கிழக்கு உட்பட பல நிலையங்களில் உதவியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளனர். வடக்கில் இருந்து மாத்திரம் ஆயிரத்து 200 பேர் வரை விண்ணப்பித்துள்ளனர். (ஒ-4)

# நவீல்ட் பாடசாலை மாணவருக்கு உதவி

கைதடி நவீல்ட் பாடசாலையில் கல்வி பயிலும் கண்பார்வை குறைந்த இரு மாணவர்களுக்கு ஐ.சி.றெக்கோடர்களும் கல்வியில் ஆர்வமுள்ள ஐந்து மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதியும் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 34 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் விழிப்புலன் இழந்த மாணவர்களுக்கு இவற்றை வழங்கினார். சாவகச்சேரி விக்னேஸ்வரா களஞ்சிய உரிமையாளர்களால் மன்றத்தில் ஆரம்பித்துள்ள சுப்பிரமணியம்- நேசரத்தினம் நிதியத்திலிருந்து கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. (ந-9)


**Vacancies**

எமது யாழ்.நகர் மற்றும் நெல்லியடி கிளைகளில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- Course Counselor - Female
- Reception Duty Officer - Female
- Instructor for C, C++, Java - Male / Female
- English Language Lecturer (Part time) - Male
- Lecturer for AUTO CAD (Part time) - Male / Female
- Instructor for Tally & QB - Male / Female

விண்ணப்பதாரிகள் சுயவிவரக்கோவையை மின்னஞ்சல் (e-mail) மூலமாக 12-05-2013ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்

**ASIAN COMPUTER EDUCATION**

e-mail : asianedu@dialogsl.net

**பணியாள்கள் தேவை**

25,000/=, 35,000/=, 40,000/= வரையான சம்பளத்துக்கு எங்கள் தனியார் துறைமுகத்தில் கப்பல் வேலைக்கு 18-55 வயது வரையான ஆண்கள் தேவை.

தொடர்பு: 077 3033 803 அனுராதபுரம்.

(35162) (6.11)

**காணி வீடு விற்பனைக்கு**

நல்லூர் நாவலர் வீதியில் நல்ல சுற்றாடலில் ஒரு பரப்பில் அமைந்த சுற்றுமதில் கொண்ட காணி வீடு விற்பனைக்குண்டு.

தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 433 9741, 077 949 8531, 077 684 8840

(35360)(6.11)

**வேலையாள்கள் தேவை**

25,000/= சம்பளத்திற்கு எங்களுடைய க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 18-55 வயது வரையான ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. குழுக்களாகவும் வரலாம். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தொடர்பு: 077 303 2004 அனுராதபுரம்.

**ஓட்டோ விற்பனைக்கு**

பஜாச் ஓட்டோ, NP AAB-xxxx விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 575 6820

(37134)(5.6)

**TV கள் மலிவு விற்பனை**

யாழ். நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் SONY Wega Flat TV கள் 21"- 12000/= முதல், 25"- 13600/=, , 29"- 15000/= Panasonic (பனசோனிக்) 29" -15000/= DTS அம்பிளிபயர், Box வகைகள், DVD -3000/=

தொடர்பு: 077 844 9829 (அப்பன்)

ரோவி ரேடியோ சென்ரர் (டொமினிக் வங்கி அருகில்) 59, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

(37135)(5.6)

**தேவை**

25000/= - 28000/= சம்பளத்துக்கு PVC தயாரிப்பு கம்பனியில் வேலைவாய்ப்புக்கு 18-50 வயது வரையான ஆண்கள் தேவை. உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு: 0776289655

(36160) (10.6)



**MINISTRY OF HIGHER EDUCATION**
**UNIVERSITY OF JAFFNA**
**INVITATION FOR BIDS**

CONSTRUCTION OF A FIVE STORIED BUILDING FOR THE UNIT OF SIDDHA MEDICINE OF THE UNIVERSITY OF JAFFNA AT KAITHADY– STAGE 1

1. The Chairman Ministry Procurement Committee on behalf of the Vice-Chancellor, University of Jaffna invites sealed bids from eligible and qualified bidders for **Construction of a Five Storied Building for the Unit of Siddha Medicine of the University of Jaffna at Kaithady– Stage 1** at the basic estimated to cost Rs 83.0 million (Excluding VAT)
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedures.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the following requirements.
   - **i. ICTAD Registration C4 or above.**
   - **ii. Average of the annual volume of construction work performed in the last five years shall be at least Rs. 83.0 million.**
   - **iii. Experience in the construction of at least one contract of a nature and complexity equivalent to the Works over the last 5 years (to comply with this requirement, works cited should be at least 70 percent completed) is Rs. 60 million.**
4. Interested bidders may obtain further information from the Works Engineer of the University of Jaffna and inspect the bidding documents at the address given below.
   **"Deputy Registrar
   Capital Works & Planning
   University of Jaffna
   Jaffna"**
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Deputy Registrar / Capital Works & Planning, University of Jaffna, Jaffna from **29.04.2013 until 20.05.2013 from 09, 00 hrs to 15, 00 hrs** on working days upon payment of a non refundable fee of Rupees Seven Thousand Five Hundred (Rs7,500/=) to the shroff of this University by cash.
6. Bids shall be delivered to the Director/Procurement, Ministry of Higher Education, No.18, Ward Place, Colombo 07 on or before **14, 00 hrs on 21.05.2013** . Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders representatives who choose to attend at the Director (Procurement) Office, Ministry of Higher Education.
7. All bids shall be accompanied by a bid security of **Rs. 1,300,000.00** obtain from the recognized Bank valid for period of hundred and nineteen (119) days from the closing of bid.
8. A Pre Bid Meeting will be held in the Board room of the Siddha Medicine Unit, University of Jaffna at Kaithady at **10 00 hrs on 13.05.2013** for bidders to get clarified any obscurities of the bid Document.

**Chairman,
Ministry Procurement Committee,
Ministry of Higher Education,
No.18, Ward Place,
Colombo 07.**
02.05.2013.

(C/8865)(2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவாலயங்களின் பரிபாலனம் பிணக்குகள் குறித்து ஆராய்வு

## யாழ். நகரில் இரு நாள்கள் நடந்த கருத்தரங்கில்



யாழ்ப்பாணம்,மே 7
யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் சைவாலய கிரியைகளும் ஆலய பரிபாலனமும் பற்றிய இரண்டு நாள் கருத்தரங்கு யாழ். கந்தர்மடம் இந்து சமய பேரவையின் நடராஜர் மண்டபத்தில் கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்றது. சிதம்பர மகா க்ஷேத்திரத்தின் பிரதம சிவாச்சாரியர் தில்லைவாழ் அந்தணர் சிவசிறி கணேச பரமேஸ்வரதீஷிதர், பேராசிரியர் ச.சத்தியசீலன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் சைவாலய கிரியைகள், சைவாலய பரிபாலனம், சைவாலய நிர்மாணம், வெளிநாடுகளில் சைவாலயங்களில் ஏற்படும் பிணக்குகள் போன்ற முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் அவற்றைத் தீர்வு காண்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

சைவப்பிரமுகர்களின் சந்தேகங்கள் குறித்தும் உரைகளின் போது தெளிவுபடுத்தப்பட்டது. எதிர்காலத்தில் ஆலயங்களில் பிரச்சினைகள் அற்ற சூழ்நிலை உருவாவதுடன் இளந் தலைமுறையினரையும் ஆன்மிக நெறிகளைத் தெரிந்து கொண்டு ஒரு நம்பிக்கையான எதிர்காலத்தை உருவாக்குவதே இக் கருத்தரங்கின் நோக்கம் எனவும் பேச்சாளர்கள் எடுத்துக் கூறினார்கள்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், கீரிமலை நகுலேஸ்வரம் ஆலய குரு கு.நகுலேஸ்வரக் குருக்கள் உட்பட இந்தமத குருமார்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினார்கள். சிவாச்சாரியர்களால் பொன்னடை போர்த்திக் கௌரவிக்கப் பட்டனர். (ஒ-7)

நாச்சிக்குடா – யாழ்ப்பாணம்

# அரச மற்றும் தனியார் பஸ் சேவை சீரில்லை

யாழ்ப்பாணம்,மே 7
பூநகரி. நாச்சிக்குடாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பஸ்கள் சீரின்மையால் பயணிகள் சீரான போக்குவரத்துச் சேவையைப் பெறமுடியாமல் அந்தரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாச்சிக்குடாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தனியார் மற்றும் அரச பஸ்கள் குறிக்கப்பட்ட நேரங்களில் சேவையில் ஈடுபடுகின்றன. எனினும் தற்போது தொடர்ச்சியாக ஒரு மாதகாலத்துக்கு மேலாக இந்த வழிப்பாதையூடாக சீரான பஸ்சேவைகள் இடம்பெறுவதில்லை.

இதன் காரணமாக அரச உத்தியோகத்தர்கள் மற்றும் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு வருகை தரும் நோயாளர்கள், பணிக்குச் செல்வோர் என குறித்த நேரத்தில் பஸ் சேவையைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர்.

இந்த வழிப் பாதையூடாக வீதிகள் சேதமடைந்து இருப்பதாலும் பஸ்களுக்குப் போதுமான வருமானம் கிடைக்கப் பெறாமையாலுமே தனியார் மற்றும் அரச சேவை பஸ்கள் சேவையில் ஈடுபடுவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

மன்னாரிலிருந்து சங்குப்பிட்டியூடாக தனியார் மற்றும் அரச பஸ்கள் சேவையில் ஈடுபட்டாலும் நாச்சிக்குடா, முழங்காவில் போன்ற பிரதேசங்களுக்கு உட்பட்ட உள்ளூர் கிராம மக்கள் நாச்சிக்குடாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவையைப் பெற வேண்டியுள்ளது.

எனவே குறித்த வழியூடாக சீராக பஸ் சேவையைப் பெற்றுத் தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-14)

### வெடிபொருள்கள் மீட்பு

விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்ட வெடிபொருள்கள் ஓமந்தை விளாத்திக் குளப் பகுதியில் வவுனியா விசேட பொலிஸ் பிரிவினரால் மீட்கப்பட்டன.

கடந்த 4 ஆம் திகதி மாலை 5 மணியளவில் வவுனியா மாவட்டக் குற்றத்தடுப்பு விசேட பிரிவினரும் பொலிஸாரும் இணைந்து இவற்றை மீட்டனர். இதில் மோட்டார் குண்டுகள்- 28, கண்ணிவெடிகள் -56 என்பன மீட்கப்பட்டன.

இந்த வெடிபொருள்கள் விடுதலைப் புலிகளால் போர் இடம் பெற்ற காலப்பகுதியில் மீண்டும் பயன்படுத்தும் நோக்கில் மறைத்து வைத்ததாக பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர். (க-402)

### சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

வடமராட்சி, மே 7
தொண்டமானாறு ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்- பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''இன்னிசை'' இடம் பெறும்.

சுன்னாகம் வாழ்வகத்தைச் சேர்ந்த குலேந்திரன் ஜெகதீசன் பக்கவாத்தியங்கள் சகிதம் இன்னிசையை வழங்குவார். (ந-8)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லாச்சி வைத்திலிங்கம்



யாழ்ப்பாணம், மணல்தறை ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லாச்சி வைத்திலிங்கம் (04.05.2013) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், விஸ்ணுகாந்தனின் அன்புத் தாயும், ஜெயமணிதேவியின் அன்பு மாமியும், லக்ஸ்மனின் பேர்த்தி யும், காலஞ்சென்ற Dr.தில்லைச்சந்திரன் மற்றும் குமுதச் சந்திரவதி, கிருஸ்ணபாலச்சந்திரன், இராதாசந்திரவதி (ஓய்வுபெற்ற பிரதி அதிபர்-யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்), நாகசந்திரபூசணி ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05.2013) புதன்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.10, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021-3214338

தகவல்:
குடும்பத்தினர்.

(37140)(10.6)

## மரண அறிவித்தல்

### அப்பாத்துரை சண்முகநாதன்



இணுவில் மேற்கைச் சேர்ந்த அப்பாத்துரை சண்முகநாதன் நேற்று (06.05.2013) திங்கட்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முதலித்தம்பி- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஞானமணியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், மகேஸ்வரி, ஞானேஸ்வரி, ஞானேஸ்வரன் மற்றும் மகாதேவன், பரமேஸ்வரி, சுந்தரேஸ்வரி, திருச்செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை, பொன்னுத்துரை மற்றும் தம்பிஐயா, காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை மற்றும் கனகம்மா, பூமணி ஆகியோரின் மைத்துனரும், கேதீஸ்வரன், (கஜான் ஸ்ரோர் -கோப்பாய்), கனகாம்பிகை, மனோகரன் (பலாங்கொட), விக்கினேஸ்வரன் (நாவலப்பிட்டி), ஜெகதாம்பிகை, பகீரதி (சுவிஸ்), முருகாகரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயந்தினி (யாழ்.கோப்பாய் மகா வித்தியாலயம்), மாணிக்கவாசகர் (சிம்மவாகினி றேட் சென்ரர் - கந்தர்மடம்), கேமலதா (பலாங்கொட),பங்கயச்செல்வி (நாவலப்பிட்டி), சண்முகேஸ்வரன் (கணபதி சவுண்ட்சேவிஸ்), குகதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கஜானன், நவநீதன், கஜலக்ஷி, சயந்திகா, வைஸ்ணவி, தர்ஷன், பவித்திரன், அமிர்தவர்ஜனன், நர்த்தகி, ரஜித்தன், ரஜீபா, திவியா, ஜனித்திரா, மதுஷன், அபிலாஷன், அக்சயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.05.2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

''வா' டுவிலி''
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

LEENU Computers
முதலாவது வருட பூர்த்தியை இட்டு
மாபெரும் விலைக்கழிவு
Pentiam D 3.20
RAM 1 GB
Hard 80 GB
17" LCD Monitor,
Keyboard, Mouse
22X00 19500/=
S.PRASNNARAJ 077 254 6511
(கோப்பாய் பொலிஸ் அருகில்)



வீடு விற்பனைக்கு
கோப்பாய் மத்தி, வெள்ளுருவைப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் நல்ல சூழலில் ஏழு பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0773967334 (37144) (10.6)

வேலையாள்கள் தேவை
கட்டடநிர்மாண துறையில் மேசன் உதவியாள்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: 0776004454 (37143) (10.6)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி குழந்தைவேலு



நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி குழந்தைவேலு 05.05.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- அன்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான இளைய குட்டி-தங்கமுத்து தம்பதியரின் மருமகளும், குழந்தைவேலுவின் அன்பு மனைவியும், சுந்தரலிங்கம், சந்திரலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பராணி, மஞ்சுளாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் அன்னலட்சுமி, இந்திராணி (கனடா), விஜயமலர் ஆகியோரின் சகோதரியும், கஸ்தூரி, கானுயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05.2013) புதன் கிழமை மு.ப 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காந்தாளம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைவு நகைகளுக்கு வங்கிகள் வழங்கும் பணத்தில் குறைப்பு

## ஒரு பவுணுக்கு ரூ.32 ஆயிரம் வரை

யாழ்ப்பாணம்,மே 7
தங்கத்தின் விலை சரிவடைந்துள்ளதால் வங்கிகளில் அடைவு நகைகளுக்கு வழங்கப்படும் பணமும் குறைக்கப்பட்டுள்ளது.
கடந்த ஒரு மாத காலமாக தொடர்ச்சியாக தங்கத்தின் விலையில் சரிவு ஏற்பட்டு வருகிறது. இதனால் தங்க நகைகளின் பெறுமதிக்கு ஏற்ப வங்கிகளும் அடைவுக்காக பணத்தை வழங்குகின்றன.
அரச மற்றும் தனியார் வங்கிகளில் தற்போது தங்கத்தின் தரத்துக்கு ஏற்றவாறு ஒரு பவுணுக்கு 32 ஆயிரம் ரூபாவிலிருந்து 20 ஆயிரம் ரூபா வரை அடைவுக்கான பணம் வழங்கப்படுவதாக வங்கி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.
இதன் காரணமாக தங்க நகைகளை வங்கிகளில் அடைவு வைத்து புதிய நகைகளை வாங்குவதற்கு பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
திடீரென தங்கத்தின் விலை அதிகரிக்கலாம் என்றும் மக்கள் கருதுகின்றனர். (ஒ-14)

# வடக்கில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பட வேண்டும்

## சண்டித்தனமாக பிரச்சினைகளை அணுகுவது ஆரோக்கியமானதல்ல என்கிறார் ரவூப் ஹக்கீம்



வவுனியா,மே 7
வடக்குத் தேர்தலை பிற்போடாது ஜனநாயகத்துக்கு அமைய நடத்த வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
வவுனியாவில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற மு.கா. வட மாகாண புனரமைப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் .
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்தக் கட்சியை பலவீனபடுத்துவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளின் விளைவாக நாங்கள் தொடர்ந்து தண்டிக்கப்பட்டு வந்திருக்கின்றோம் .
தேர்தலுக்காக நான் இங்கு வரவில்லை . எங்களது நாடாளுமன்ற உறுப்பினர், வன்னி மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடுவதற்கு என்னிடம் காலத்தை ஒதுக்கித்தருமாறு கேட்டிருந்தார். நேற்றுமுன்தினம் கட்சிப் போராளிகளைச் சந்திக்க கிடைத்ததையிட்டு மகிழ்சியடைகின்றேன்
எங்களுடைய அணுகுமுறை வித்தியாசமானது. இங்குள்ள அமைச்சரின் அணுகுமுறையை என்னால் அங்கீகரிக்க முடியாது. தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற பிரதேசங்களில் அவர்களின் அரசியல் தலைமையுடன் பேச்சு நடத்தி புரிந்துணர்வுடன் தீர்வு காண்பதுவே சிறந்த வழிமுறையாகும். இதுவே முஸ்லிம் காங்கிரஸின் அணுகுமுறையாகும்.
சண்டித்தனமாக பிரச்சினைகளை அணுகுவது ஆரோக்கியமானதல்ல. இதுவே முஸ்லிம் காங்கிரஸின் நிரந்தரமான நிலைப்பாடாகும்.
முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களுக்கு சில விட்டுக்கொடுப்புகளை செய்ய வேண்டிய தேவையுள்ளது. நாங்கள் எங்கு பெரும்பான்மையாக வாழ்கின்றோமோ அங்கு சிறுபான்மையாக வாழும் சமூகத்தினை அனுசரித்து செல்ல வேண்டிய அவசியம் இருக்கின்றது.
கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் நாங்கள் தனித்து போட்டியிட்டு வெற்றியீட்டிய போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சி அமைக்கவில்லை என்ற விமர்சனம் இன்னும் இருந்து வருகின்றது. ஆனால் சரியான ஒரு கட்டத்தில் தான் அவ்வாறான தீர்மானத்துக்கு நாங்கள் வந்துள்ளோம்.

### தண்ணீரில் எண்ணெய் மாதிரி

இன்று அரசோடு இருக்கும் அத்தனை பிரச்சினைகளுக்கு மத்தியில் தண்ணீரில் எண்ணெய் மாதிரிதான் முஸ்லிம் காங்கிரஸ் இருக்கின்றது. வாகனத்தில் ஆணி கழன்ற சில்லு போலத்தான் நாங்கள் பார்க்கப்படுகின்றோம்.
வடமாகாணத்தில் தேர்தலே நடத்தக் கூடாதென்று அமைச்சர்களான ரிசாத்தும், விமல் வீரவன்சவும் கூறுகின்றனர். அதில் மட்டும் அவர்கள் இருவருக்கும் உடன்பாடு.
சம்பிக்க ரணவக்கவும் அவர்களோடு இந்த விடயத்தில் இணைந்து கொள்கின்றார். அந்த நிலைப்பாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் இருக்க முடியாது. எங்களது பார்வையில் வட மாகாணம் தமிழ் மக்களை பெரும்பான்மையாகக் கொண்டது. எங்களுக்கு நடக்கும் அநியாயங்கள் முடிவுக்கு வர வேண்டியதை போல தமிழர்களுக்கு அநியாயம் நடந்தாலும் நேர்மையாக பேசும் கட்சியாகத்தான் நாங்கள் இருக்க முடியும்.
அவர்களுக்கு வாய்ப்பான மாகாண ஆட்சியொன்று அமையுமாக இருந்தால் அதற்கு குந்தகமாக இருக்க நாம் விரும்பவில்லை. ஆனால் அவர்களோடு சேர்ந்து நாம் ஆட்சி அமைக்கப் போகின்றோம் என்பது அர்த்த மல்ல. அரசுக்கு விரோதமாக நாங்கள் செயற்படப் போகின்றோம் என்பதும் அல்ல.
இன்று வடக்கில் முஸ்லிம்கள் இழந்து நிற்கும் அவர்களது வாக்குரிமையை பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் பத்திரமொன்றை சமர்பிக்கவுள்ளேன். அதில் மாற்று வழியொன்றை அறிமுகப்படுத்தி புதிய சட்டதிருத்தத்தைக் கொண்டுவர வழி காணப்படும்.- என்றார். (ச-ரி)

**யாழ். மாவட்ட அரச கால்நடை வைத்தியசாலைக்கான வாடகை கட்டடம் தேவை**

ஆனைக்கோட்டை சந்தியிலிருந்து கட்டுடை சந்தி வரையான பிரதான பாதையில் அல்லது பிரதான பாதையை அண்டிய பிரதேசத்தில் குறைந்தது மூன்று அறைகளுடன் கூடிய கட்டடம் வாடகைக்கு தேவை. முற்பணம் வழங்கப்படமாட்டாது. அரச நியதிகளுக்கேற்ப வாடகை வழங்கப்படும்.
மேலதிக தொடர்புகளுக்கு:
டாக்டர் திருமதி வ. அமிர்தலிங்கம்,
உதவிப் பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2387
(J8666)(6.11)

**அறைகள் வாடகைக்கு உண்டு**

யாழ் பல்கலைக்கழகம் அருகில் பலாலி றோட்டில் பல்கலைக்கழக மாணவர்கள்/உத்தியோகப் பெண்கள்/கல்லூரி மாணவர்களுக்கு அறைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 021 222 7069, 077 930 0148

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

உரும்பிராய் மேற்கு, மருதனார் மடம், பிரதான வீதியில் அமைந்துள்ள வீட்டுடன் 7¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (குணம்பில்லா)
தொடர்பு: 077 659 0978
(37147)(6.11)

**யா/ வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்-2013**

மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் 19.05.2013 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற இருப்பதனால் அனைத்து பழைய மாணவர்களையும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
அதிபர்,
யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி.
(37148)(6.11)

**கண்ணீர் அஞ்சலி**



எமது கலாமன்ற உபதலைவர்
சபாரத்தினம் இராசநாயகம் அவர்களின்
பாசமிகு சகோதரர்
**சபாரத்தினம் இரத்தினசபாபதிப்பிள்ளை**
அவர்களது திடீர் மறைவினால் மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடிகள் சேர பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

கிழவன்காடு கலாமன்றம்,
காரைநகர்
நிர்வாக சபையினர்,
ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.

**கண்ணீர் அஞ்சலி**



எம் தேவஸ்தான தலைவர் கோ.தியாகராசா (JP) அவர்களின்
அன்புத் துணைவியார் இறைவனடி சேர்ந்த
**திருமதி நாகரத்தினம்மாள் தியாகராசா (கிளியக்கா)**
அவர்கள் தேவஸ்தானத்தின் வளர்ச்சிக்காய் ஆரம்ப காலம் தொடக்கம் பல வழிகளில் எம்முடன் இணைந்து பணியாற்றிய ஓர் அன்புள்ளம்.
இன்று எமையெல்லாம் பெரும் வேதனைக்குள்ளாக்கிப் பிரிந்து விட்டார். அவரின்பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை எம் கண்ணீர்த்துளிகளால் காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி.

பரிபாலன சபையினரும், பிரதம அர்ச்சகரும், இந்து இளைஞர்களும்,
ஆலயசெல்வ விநாயகர் தேவஸ்தானம், கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
(J/8868)2.6)

உ
**அன்பொளி கல்வி நிலையம்**
**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

Best Wishes


செ.சேந்தன்
9A


கி.தர்மிகன்
9A


ப.யதுசியா
8A, B


ச.மதுஷா
7A, 2B


யோ.மேனகா
7A, B, C


மு.மயூரன்
7A, B, S


சி.ரஜிதா
7A, 2C

இவர்களோடு க.பொ.த உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்ற ஏனைய மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

(C/8867)(10.6)
**அன்பொளி கல்வி நிலைய**
**நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**சிவசுப்பிரமணியம் நேதாஜி** (BFA)

எமது பாடசாலை ஆசிரியர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் 03.04.2013 அன்று BMICH மண்டபத்தில் நடைபெற்ற பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றதைப் பாராட்டுவதுடன் மேலும் பல சிறப்புக்கள் பெற வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் கழகம், யா/நவாலி மகா வித்தியாலயம்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருமதி லோஜனி பார்த்தீபன்** (B.B.A)

எமது பாடசாலை ஆசிரியை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் 03.04.2013 அன்று BMICH மண்டபத்தில் நடைபெற்ற பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றதைப் பாராட்டுவதுடன் மேலும் பல சிறப்புக்கள் பெற வாழ்த்துகின்றோம்.

(37152)(2.6)

**ஆசிரியர் கழகம், யா/நவாலி மகா வித்தியாலயம்.**

## பாராட்டி வாழ்த்துகின்றேன்

கிளிநொச்சி திருவையாறு சிறார்களின் ஆரம்பக் கல்விக்கு வழி காட்டி தனி மனிதனாக பாலர் பாடசாலை கட்டடம் அமைத்து கணினிகள் உட்பட சகல வசதிகளையும் அளித்த

**செல்லத்துரை நிறஞ்சன் (ராஜி சேவிஸ்)**

அவர்களின் பணி தொடர அவரை பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**க.தாமரைச்செல்வன்**
**கிளிநொச்சி.**

(35018)(6.11)

## சேவை நலன் பாராட்டு



கிராம சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றி 05.05.2013 அன்று அப்பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள திருவாளர்

**வல்லிபுரம் வேல்முருகு**

அவர்களுக்கு தென்மராட்சி பிரதேசத்திற்கு உட்பட்ட கிராமங்களில் கிராமசேவக உத்தியோகத்தராக நற்பணி ஆற்றியமைக்கும் தனது சொந்த ஊரான எழுதுமட்டுவாழ் தெற்கிற்கு [J/333] இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்ந்த முக்கிய தருணத்தில் மிகச்சிறந்த சேவையாற்றியமைக்காகவும் மனம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் அவர் சகல பாக்கியங்களையும் பெற்று குடும்பத்தாருடன் சிறப்புற வாழ எல்லாம் வல்ல மீனாட்சி உடன் உறையும் சோமசுந்தரேஸ்வரப் பெருமானை வேண்டுகின்றோம்.

[37156][16.14.9]

பொது அமைப்புக்கள், எழுதுமட்டுவாழ்.
Best Wishes [எழுதுமட்டுவாழ் சிவன் பரிபாலனசபை]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
03.01.1947

மறைவு
07.04.2013

**அமரர் இராமலிங்கம் இலட்சுமணன்**

அன்னாரின் பிரிவு எம்மை தினமும் வாட்டுகின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

45/1,நாயன்மார் வீதி,
நல்லூர். (37151)(5.6)

சகோதரன், சகோதரிகள், பெறாமக்கள், மருமக்கள்

## கண்ணீர் அஞ்சலி



காரைநகர் பயிரிக்கூடல் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஐந்து தசாப்தங்களுக்குமேலாக பிரதமகுருவாகத் தொண்டாற்றிய

**குமாரசாமி அமிர்தேஸ்வர ஐயா**

அவர்களின் பிரிவால் துயரடைந்துள்ள அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காக பயிரிக்கூடல் முருகனை வேண்டுகின்றோம்.

பயிரிக்கூடல், காரைநகர். (சி/88/5)(16.14.9)

**முருகன் அடியார்கள்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி ஜெயந்தினி கேதீஸ்வரன் அவர்களின் மாமனார்

***அப்பாத்துரை சண்முகநாதன்*** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின்ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(37154)(16.14.9) **ஆசிரியர் கழகம், யா/கோப்பாய் ம.வி.**

## கண்ணீர் அஞ்சலி



*அமரர் ஸ்ரீஸ்கந்தராஜா கஜரூபன்*

உரிமையாளர் Top World Communication

எமது ஆருயிர் நண்பனின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(8874)
(23-16-6)

ப.குமரன்
Arrul Communication Arul Global Express

## மரண அறிவித்தல்

*பிரம்மஸ்ரீ குமாரசாமி ஐயர் அமிர்தேஸ்வரசர்மா (காரைநகர்)*



காரைநகர், மணற்காட்டைப் பிறப்பிடமாகவும், மணியகாரன் வீதி கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ குமாரசாமி ஐயர் அமிர்தேஸ்வரசர்மா (பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் முன்னாள் பிரதம அர்ச்சகர்) நேற்று (06.05.2013) திங்கட்கிழமை மு.ப 11.00 மணிக்கு சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.05.2013) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

95, மணியகாரன் வீதி,
கொக்குவில்.

தகவல்:
(சி/88/1)(16.14.9) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
03.01.1947

மறைவு
07.04.2013

**அமரர் இராமலிங்கம் இலட்சுமணன்**

கடந்த 07.04.2013 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (07.05.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம். (37096)(5.6)

என்றும் உங் [illegible]
மனைவி, மக் [illegible]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



*அமரர்*

***மகாலிங்கம் தவமணிதேவி***

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 * 06 * 1935 | 07 * 04 * 2013 |

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (07.05.2013) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible] வீதி,
யாழ்ப்பாணம். (37155)(16.14.9)

சி.மகாலிங்கம்
(கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வென்றது ஞானமுருகன்

யாழ்ப்பாணம் மே 7
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தினதும் விளையாட்டுக்கழகத்தினதும் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.
கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் ஞான முருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விளான் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது இதில் ஞான முருகன் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

## இறுதியாட்டம் நாளை


யாழ்ப்பாணம், மே 7
யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஹொக்கி போட்டியின் இறுதியாட்டம் நாளை புதன் கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
இறுதியாட்டத்தில் யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதவுள்ளது. அதனைத் தொடர்ந்து மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. (ற-23)

## எறிபந்து சுற்றுப் போட்டி நாளை

கரணவாய்,மே 7
வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்து சுற்றுப் போட்டிகள் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
19 வயது ஆண், பெண்களுக்கான போட்டிகள் நடைபெறும் எனவும், பங்குபற்றும் பாடசாலை அணிகள் குறித்த நேரத்துக்கு சமுகமளிக்குமாறு வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வக்குமரன் அறிவித்துள்ளார். (ற-400)

### 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கபடி

# பருத்தித்துறை வேலாயுதம் சம்பியன்



யாழ்ப்பாணம், மே 7
யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கபடிப் போட்டியின் இறுதியாட்டத்தில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி மோதியது.
விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் சமபலத்துடன் மோதிக் கொண்டன.
அதில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய அணி 38:34 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (ற-23)

# ‘இந்துக்களின் சமர்’ சமநிலையில் நிறைவு

யாழ்ப்பாணம், மே 7
கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற ‘இந்துக்களின் சமர்’ கிரிக்கெட் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது .
ஆட்டத்தின் முதல்நாள் ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்ற போதும் கடும் மழை காரணமாக போட்டி நடைபெறவில்லை. சனிக்கிழமை ஆரம்பமான ஆட்டத்தில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி, முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.
அதற்மைய முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி அணி 59 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.
அதில் கசான் 61 ஓட்டங்களையும், தர்சிகாந் 50 ஓட்டங்களையும், கிருசாந் 42 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் யாழ். இந்துக் கல்லூரி அணி சார்பில் மதுசன் 5 இலக்குகளையும், பானுகோபன் 3 இலக்குகளையும் வீழ்த்தினார்கள்.



தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணியினர் 31 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றனர்.
இதில் மதுசன் 91 ஓட்டங்களையும், கல்கோகன் 47 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் கொழும்பு இந்துக் கல்லூரி அணி சார்பில் திவாகரன் 4 இலக்குகளை வீழ்த்தினார்.
சிறந்த துடுப்பாட்ட வீரர் விருதை கொழும்பு இந்துக் கல்லூரி அணி வீரன் கசானி பெற்றுக்கொண்டார். சிறந்த பந்து வீச்சாளர் விருதை யாழ். இந்துக் கல்லூரி அணி வீரர் மதுசன் பெற்றுக்கொண்டார். சிறந்த களத்தடுப்பாளர் விருதை கொழும்பு இந்துக் கல்லூரி அணி வீரர் கருசானிக் பெற்றுக் கொண்டார்
ஆட்ட நாயகன் விருதை யாழ். இந்துக்கல்லூரி அணி வீரர் மதுசன் பெற்றுக்கொண்டார்.(ற-23)

# முல்லை. மாவட்ட வலைப்பந்து முடிவு

புதுக்குடியிருப்பு,மே 7
முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் 15,17 வயதுப் பிரிவுகளில் செபமாலை மகா வித்தியாலயமும், 19 வயதுப் பிரிவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.
இந்த இறுதியாட்டங்கள் கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன.
இதில் 15 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் முதலாமிடத்தை செபமாலை மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தினை வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தரப் பாடசாலையும், மூன்றாமிடத்தினை தேராவில் வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.
17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் செபமாலை மகா வித்தியாலயமும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.
இந்தப் பரபரப்பான ஆட்டத்தில் 20:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைத் தோற்கடித்து செபமாலை மகாவித்தியாலயம் சம்பியனாகியது.
இதில் மூன்றாமிடத்தினை முள்ளியவளை கலைமகள் மகாவித்தியாலயம் பெற்றது.
அடுத்து இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியும் மோதின.
அதில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி சம்பியனாகியது. இதில் மூன்றாமிடத்தினை விசுவமடு பாரதி வித்தியாலயம் பெற்றுக் கொண்டது.
(ற-400-433)

# வடமராட்சி வலய தடகள முடிவுகள்

கரணவாய், மே 7
வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலய மட்ட தடகளப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.
போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்ட வீர, வீராங்கனைகளின் விவரங்களின் தொடர்ச்சி:
**100 மீ. சட்டவேலி ஓட்டம்:-** ஆர்.நளாயினி - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, ஏ.அனிஸ்ரினி - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வி.விதுர்ஷனா - வடஇந்து மகளிர் கல்லூரி.
**1,500 மீற்றர்:** ஈ.மேரிகஸிஸ்ரெலா - சென் தோமஸ் றோ.க.த.க பாடசாலை, எம்.தர்மினி - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், வி.விதுசனா - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.
**முப்பாய்ச்சல்:-** எஸ்.தயானி - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஏ.அனிஸ்ரினி - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பி.நிவேதினி - அம்பாள் அ.த.க.பாடசாலை.
**21 வயது ஆண்கள்**
**1,500 மீற்றர்:-** வை.யதுருவன் - தொண்டமானாறு வீரசத்திரபிள்ளை மகா வித்தியாலயம்.
**400 மீற்றர்:-** எஸ்.கார்த்திக் - வேலாயுதம் மகாவித்தியாலயம், வி.ரொபின்சன் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஜே.ஜெயசீலன் - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
(தொடரும்)

### பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கரப்பந்து

# கோப்பாய் பிரதேச செயலகம் சம்பியன்


வலி.வடக்கு, மே 7
யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணி யாழ்.மாவட்ட சம்பியனாகத் தெரிவானது.
வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்திய கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலய மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இறுதிப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலக அணியும், கோப்பாய் பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்ட [illegible] வடையும் வரை விறுவிறுப்பாக நடைபெற்றது. மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களையும் கோப்பாய் பிரதேச செயலக அணி 25:21, 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.



ஆட்ட நிறைவில் கோப்பாய் பிரதேச செயலக அணி கரவெட்டிப் பிரதேச செயலக அணியை 2:0 என்ற சுற்றுக்கள் அடிப்படையில் வெற்றி [illegible] சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ற-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லியம்ஸின் துடுப்பாட்டம் வீழ்த்தியது பங்களாதேஷை




பங்களாதேஷுக்கு எதிரான 2ஆவது ஒருநாள் ஆட்டத்தில் சிம்பாவே அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சிப்பாவே சென்றுள்ள பங்களாதேஷ் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்று வருகின்றது.

முதலாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றுள்ள நிலையில், இரண்டாவது ஆட்டம் புலவாயோ நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாவே அணியின் அணித்தலைவர் பிரண்டன் ரெய்லர் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

அதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணியின் ஆரம்ப வீரர்கள் தமிம் இக்பால் (6), முகமது அஷ்ரபுல்(8) ஏமாற்றினர். பின்னர் களமிறங்கிய மோமினுல் ஹேக்(24), அணித்தலைவர் முஷ்பிகுர் ரஹிம் (26), சாகில் அல் ஹசன்(34), நாசிர் ஹொசைன்(36), மகமதுல்லா(31) ஓரளவு கைகொடுத்தனர்.

முடிவில் பங்களாதேஷ் அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 252 ஓட்டங்களை எடுத்தது.

சிம்பாவே சார்பில் எல்டன் சிகும்புரா 3 இலக்குகளையும், டென்டாய் சடாரா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

253 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய சிம்பாப்வே அணிக்கு ஹாமில்டன் மசகட்சா (15) ஏமாற்றமளித்தார். பொறுப்பாக ஆடிய சிபண்டா (49) அரைசதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார். அபாரமாக ஆடிய சீன் வில்லியம்ஸ் அரை சதம் அடித்தார். இவருக்கு வோலர் ஒத்துழைப்பு கொடுக்க, சிம்பாப்வே அணி 47.5 ஓவரில் 4 இலக்குகளை இழந்து 253 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் சார்பில் ஷபியுல் இஸ்லாம் 2 இலக்குகளையும், ஜியாவுர் ரஹ்மான், சாகில் அல் ஹசன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். ஆட்டநாயகன் விருதை சிம்பாப்வே அணி வீரர் வில்லியம்ஸ் கைப்பற்றினார்.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் 1-1 என சம நிலை அடைந்தது. மூன்றாவது மற்றும் கடைசி போட்டி எதிர்வரும் மே 8ஆம் திகதி புலவாயோ நகரில் நடைபெறவுள்ளது. (ற)

## சென்னையை வீழ்த்தியது நம்பிக்கை தருகிறது

### மும்பை வீரர் ஜோன்சன்




சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தியது எமது நம்பிக்கையை அதிகரித்துள்ளது இவ்வாறு தெரிவித்துள்ளார் மும்பை அணி வீரர் ஜோன்சன்.

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணி வீழ்த்தியது. அந்த ஆட்டத்தில் மும்பை அணி வீரர் ஜோன்சன் 3ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 3 இலக்குகளைக் கைப்பற்றியமையே (முரளிவிஜய், ரெய்னா, பத்ரிநாத்) ஆட்டத்தின் திருப்பு முனையாக அமைந்தது.

இதுகுறித்து ஆட்டநாயகன் விருது பெற்ற ஜோன்சன் கூறுகையில்,

''சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான இந்த ஆட்டம் எங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ஐதராபாத்திடம் நாங்கள் மோசமாக தோற்றோம். அதனை மாற்றும் விதமாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை அதிரடியாக வீழ்த்தி உள்ளோம்.

சென்னைக்கு எதிராக நாங்கள் ஆதிக்கம் செலுத்தி வீழ்த்தியதால் நம்பிக்கை அதிகரித்துள்ளது. அடுத்து வரும் ஆட்டங்களில் சிறப்பாக விளையாட முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு அதிகமாகவே உள்ளது. லீக் சுற்று நிறைவை நெருங்கி வருகிற நேரத்தில் ஒவ்வொரு ஆட்டத்திலும் வெற்றி பெற முயற்சிப்போம். மும்பைக்கு வெளியே நாங்கள் அவ்வளவாக வெற்றி பெறவில்லை. இனிவரும் ஒவ்வொரு போட்டியிலும் வென்று பிளேஆப் சுற்றுக்கு நுழைவோம்'' என்று தெரிவித்தார் அவர். (ற)



## பார்சிலோனா அபார வெற்றி

ரியல் பெட்டிஸ் அணிக்கு எதிரான லா லிகா கால்பந்து தொடரின் லீக் போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினின் லா லிகா உதைபந்தாட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது. அதன் லீக் ஆட்டத்தில் ரியல் பெட்டிஸ், பார்சிலோனா அணிகள் மோதின. போட்டியின் முதல் பாதியில் ரியல் பெட்டிஸ் அணியின் டார்லன் (2ஆவது நிமிடம்) முதல் கோல் அடித்தார். இதற்கு பார்சிலோனாவின் அலெக்சிஸ் (9) பதிலடி கொடுத்தார். தொடர்ந்து ரியல் பெட்டிஸ் அணியின் ரொபின் (43) ஒரு கோல் அடிக்க, முதல் பாதியின் முடிவில் போட்டி 2:1 என ரியல் பெட்டிஸ் அணி முன்னிலை வகித்தது. பின் இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட பார்சிலோனா அணிக்கு டேவிட் வில்லா (56), நட்சத்திர வீரர் மெஸ்சி (60, 71) ஆகியோர் கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தனர். இதற்கு ரியல் பெட்டிஸ் அணி வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை. முடிவில் பார்சிலோனா அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ரியல் ஷரகோசா, ரேயோ வலேகெனோவை 3:0 வீழ்த்தியது. மல்லோர்கா, லவாண்டே அணிகள் மோதிய போட்டி 1:1 என சமனிலையானது. செவில்லா, ஸ்பெனியாலை 3:0 என வெற்றி பெற்றது.

## பூப்பந்தில் சிந்து சம்பியன்

மலேசிய ஓபன் 'கிராண்ட் பிரிக்ஸ் கோல்ட்' பூப்பந்துத் தொடரின் ஒற்றையர் பிரிவில் இந்திய வீராங்கனை சிந்து சம்பியன் பட்டம் வென்றார்.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் மலேசிய ஓபன் 'கிராண்ட் பிரிக்ஸ் கோல்ட்' பூப்பந்துத் தொடர் நடைபெற்றது. பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் சிந்து, சிங்கப்பூரின் ஜுவான் கு ஆகியோர் மோதினர்.

முதல் செற்றை 21:17 என்ற புள்ளிகள் அடைப்படையில் கைப்பற்றிய சிந்து, இரண்டாவது செட்டை 17:21 எனக் கோட்டைவிட்டார். பின் எழுச்சி கண்ட அவர், வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செற்றை 21:19 எனப் போராடி தன்வசப்படுத்தினார்.

சுமார் ஒரு மணி நேரம் 11 நிமிடம் வரை நீடித்த இறுதியாட்டத்தில், இந்திய வீராங்கனை சிந்து 21:17, 17:21, 21:19 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். இதன்மூலம் இந்தத் தொடரில் பட்டம் வென்ற முதல் இந்தியர் என்ற புதிய சாதனை படைத்தார். அதுதவிர சிந்துவின் முதலாவது சம்பியன் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)




## 'நம்பர் - 1' ஆவாரோ ஷரபோவா?

ஸ்பெயினில் நடக்கும் 'மாட்ரிட் ஓபன்' ரென்னிஸ் தொடர் மூலம், ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா, டபிள்யு.டி.ஏ. ரென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தைப் பிடிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஸ்பெயினில் உள்ள மாட்ரிட் நகரில், 'மாட்ரிட் ஓபன்' ரென்னிஸ் தொடர் நடக்கிறது. அதில் பெண்கள் ஒற்றையரில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ரஷ்யாவின் மரியா ஷரபோவா உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் பங்கேற்கின்றன.

இந்தநிலையில் பெண்களுக்கான டபிள்யு.டி.ஏ. ரென்னிஸ் தரவரிசையில் அமெரிக்காவின் செரினா 11,115 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். இரண்டாவது இடத்தில் ரஷ்யாவின் ஷரபோவா (10240 புள்ளி) உள்ளார். இந்தத் தரவரிசையில் முதலிடத்தைப் பிடிக்கும் வாய்ப்பு ஷரபோவாவுக்கு கிடைத்துள்ளது. அதற்கு அவர் இந்தத் தொடரில் சம்பியன் பட்டம் வெல்ல வேண்டும். செரினா 2ஆவது சுற்றோடு வெளியேற வேண்டும். இதன் மூலம் 11,240 புள்ளிகளுடன் ஷரபோவா முதலிடம் பிடிக்கலாம். செரினா (11195) 2ஆவது இடத்துக்கு தள்ளப்படுவார்.

இதுகுறித்து ஷரபோவா கூறுகையில்,

''முதலிடம் பிடிப்பது குறித்து சிந்திக்கவில்லை. ஏனெனில் இதற்கு மற்ற வீராங்கனைகளின் செயற்பாட்டை எதிர்நோக்கி காத்திருக்க வேண்டும். ஆட்டத்தில் மட்டும் முழுக் கவனம் செலுத்தி வெற்றியை தக்கவைத்துக் கொள்ள முயற்சிக்கும் பட்சத்தில் சம்பியன் பட்டம் வெல்லலாம்,'' என்று தெரிவித்தார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியமைச்சர் ஹக்கீம் போட்ட குண்டால் அதிர்ந்தது அரசு!

## சட்டத்தின் ஆட்சி நடக்கவில்லை என்று அவர் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 07
இலங்கையின் நீதித்துறையின் சுயாதீனம் குறித்து நீதியமைச்சரான மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் தெரிவித்த காரசாரமான கருத்து அரச உயர்மட்டத்தை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது எனத் தெரியவருகின்றது.
இலங்கையின் நீதித்துறை தொடர்பில் நீதியமைச்சரே பெரும் சந்தேகத்தை வெளிப்படுத்தியுள்ளதானது, சர்வதேச மட்டத்தில் அரசை பெரும் சிக்கலுக்குள் மாட்டியுள்ளது என அரச உயர்மட்ட வட்டாரம் நேற்று இரவு கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது எனவும் அறியமுடிகின்றது.
''நாட்டில் சட்டத்தின் ஆட்சி ஒன்று நடைபெறுகிறது என்பதற்கு அத்தாட்சியாக இருக்கவேண்டிய - நீதியமைச்சரான - நானே - அதற்கு உடன்பட முடியாத நிலையில் இருக்கிறேன்'' என வவுனியாவில் ஹக்கீம் போட்ட அதிரடிக் குண்டால் அரச உயர்மட்டத்தில் பேரதிர்வு ஏற்பட்டுள்ளது.

> “அரசில் நீதியமைச்சராக இருந்துகொண்டு அவஸ்தைப் படுகிறேன்

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மு.கா. ஆதரவாளர்களுடனான சந்திப்பின்போதே நீதியமைச்சரான ரவூப் ஹக்கீம் மேற்படி நீதித்துறை தொடர்பில் சந்தேகத்தை வெளிப்படுத்தியிருந்தார்.
அரசில் நீதியமைச்சராக இருந்துகொண்டு அவஸ்தைப்படுவதாகவும், கைது மற்றும் விடுதலை என்பன சர்ச்சைக்குரிய விடயமாகவுள்ளன என்றும் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் கடும் காரசாரமாக வவுனியாவில் கருத்துத் தெரிவித்திருந்தார்.
கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அஸாத் ஸாலி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்படி இலங்கையின் நீதித்துறை தொடர்பில் சந்தேகம் வெளிப்படுத்தி கருத்துத் தெரிவித்திருந்தார்.
ரவூப் ஹக்கீமின் மேற்படி கருத்து அன்றைய தினமே அரச உயர்மட்டத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பெரும் அதிர்ச்சியும், ஆவேசமும் அடைந்த அரசு இது தொடர்பில் பெரும் கலக்கமடைந்து காணப்படுவதாகவும் நம்பகமாக சுட்டிக்காட்டப்படுகின்றது. சர்வதேச மட்டத்தில் இலங்கையின் நீதித்துறையின் சுயாதீனம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டும் பெரும் அழுத்தங்களும் கொடுக்கப்பட்டும் வரும் இன்றைய சூழ்நிலையில் இலங்கை அரசின் நீதியமைச்சரே நாட்டின் நீதித்துறை குறித்து சந்தேகம் வெளிப்படுத்தியிருப்பது நாட்டை பெரும் சிக்கலுக்குள் தள்ளும் ஒரு சதி நடவடிக்கையென அரச உயர்மட்டத்தில் நேற்று இரவு பரவலாகப் பேசப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

# சிப்பாய் சாவு

புதுக்குடியிருப்பு, மே 07
முள்ளியவளை, மாஞ்சோலை வைத்தியசாலைக்கு அருகிலுள்ள காவலரணில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் தன்னைத்தானே சுட்டதில் இறந்து போனார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.
நேற்றுக்காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. 23 வயதுடைய இளம் குடும்பஸ்தரான இராணுவச் சிப்பாயே இறந்து போனார்.
மூன்று மாதங்களுக்கு முன் பிறந்த தனது ஆண் குழந்தையைச் சென்று பார்ப்பதற்காக விடுமுறை வழங்கப்படாத நிலையில் இவர் விரக்தி அடைந்திருந்தார் என்று கூறப்படுகிறது.
சம்பந்தப்பட்ட சிப்பாய் கடமையாற்றிய இராணுவ முகாம் பொறுப்பதிகாரிக்கும், பொலிஸாருக்கும் அவரது இறப்பு தொடர்பாகத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து அந்த இடத்துக்கு வந்த அவர்கள் சடலத்தை பொறுப்பெடுத்து மாஞ்சோலை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.
(உ- 433-400)



தமிழீழ விடுதலை இயக்க தலைவர் சிறி.சபாரத்தினத்தின் நினைவு நாளை ஒட்டி ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளுக்கு விசமிகளால் நேற்று கழிவு ஒயில் ஊற்றப்பட்டுள்ளது. (உ-86)


நீங்கள் விரும்பிய நாட்டுக்கு குறுகிய காலம் போய் வரலாம்

- சுற்றுலாவாகச் செல்ல சுற்றுலா விசா
- கணவன் மனைவி ஒன்று சேர
- வெளிநாட்டு உறவுகளின் விழாக்களுக்கு
- வர்த்தகர்கள் எனின் எந்த நாட்டிற்கும் ஒரு வருட விசா
- மறுக்கப்பட்ட விசாக்களுக்கு சட்ட ரீதியாக வியாக்கியானம் கேட்க.

(37246)(5,6)

கொழும்பு போகவேண்டாம்.
யாழ்ப்பாணத்திலேயே நம்பகத் தன்மையுடன்,
குறைந்த கட்டணத்தில் விசா ஆலோசனை.

திசை காட்டி(பிறைவேற்)லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090




# மரண அறிவித்தல்

## செல்வி மாசில்லா மனுவேற்பிள்ளை (பூபதி)

[முன்னாள் ஆசிரியை, புனித அன்னாள் ஆலய பாலர் பாடசாலை]



பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மாசில்லா மனுவேற்பிள்ளை நேற்று (06.05.2013) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான S.A.மனுவேற்பிள்ளை-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், ஜீவரெட்ணம், எலிசபேத் ராணி, நவரெட்ணம், மேரிதிரேசா றதி, துரைரெட்ணம் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும், றோஸ்மலர், சாள்ஸ் பாபு,யோகராசா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும், மனுவேற்பிள்ளை, சத்தியாவதி, சித்திராவதி, காயித்திரி, தேவதாஸ், அனுஷா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று(07.05.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்திலிருந்து பி.ப.2.30மணிக்கு அன்னாள் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலியின் பின்பு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜீவரெட்ணம் (சகோதரன்)
40/2,கொழும்புத்துறை வீதி, கண்டுக்குளி,யாழ்ப்பாணம்
(37138)(5.6)

# பட்டம் பெறாத மருத்துவர்கள் சலுகை கேட்பது நியாயமில்லை

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம்,மே 7
மருத்துவப்பட்டம் பெற்றுக்கொள்ளாமல் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள், பட்டம் பெற்ற மருத்துவர்களைப் போன்று தமக்கும் சலுகைகளைக் கேட்பது பொருத்தமற்றது- இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
மருத்துவர் என்ற தகுதியை பெற்றுக் கொள்ளவும், மருத்துவம் செய்வதற்கும் மருத்துவப்பட்டம் அவசியம். எனினும் இத்தகைய பட்டம் எதுவும் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களிடம் இல்லை. வெறும் பதிவு மாத்திரமே உள்ளது.
மருத்துவப் பட்டம் இல்லாத பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள், உதவி மருத்துவ அதிகாரிகள் என்ற பதவியைப் பெற்றதுகூட தகுதியின் காரணமாக அல்ல அதற்குக் காரணம் அரசியல் செல்வாக்குத்தான்.
இவர்களை மருந்தகங்களில்தான் பணிக்கு அமர்த்துதல் வேண்டும். இல்லாவிட்டால் முன்கூட்டியே ஓய்வூதியம் வழங்கி இவர்களின் சேவையை முடிவுறுத்த வேண்டும்.
தேவைப்படும் மருத்துவ நிலையங்களில் மருத்துவப் பட்டம் பெற்று வெளியேறும் பட்டதாரிகளை நியமிக்க வேண்டும். இவர்களது வேலை நிறுத்தம் காரணமாக மருத்துவ சேவைகள் பாதிப்படையவில்லை. மாறாக மருத்துவ சேவையின் தராதரம்தான் அதிகரித்துள்ளது-என்றுள்ளது.
(ங-4)

# பிரபாகரன் நடத்தியது கீதாசார 'தர்மப்போர்'

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது மதத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே இருந்திருக்கிறது.
துட்டகைமுனுவின் போர் கூட இனவாதத்தின் அடிப்படையில்தான் நடத்தப்பட்டதாக கடந்த பல காலங்களில் கூறப்பட்டன. ஆனால் எந்தவொரு நூலிலும், ஆவணத்திலும் எல்லாளனுக்கும், துட்டகைமுனுவுக்கும் இடையிலான போர் இனவாதத்தின் அடிப்படையில் நடந்ததென்று குறிப்பிடப்படவில்லை.
எல்லாள மன்னனைப் பற்றி மகாவம்சத்தில் 23 விதந்துரைகள் இருக்கின்றன. அதில் முதலாவது மற்றும் இறுதி விதந்துரைகளைத் தவிர ஏனைய எல்லாவற்றிலும் அவரைப்பற்றி நன்றாகத்தான் சொல்லப்பட்டுள்ளது.
நமது நாட்டைப் பொறுத்தவரை கலாசாரம்கூட இந்தியக் கலாசாரத்தையே அடியொற்றி வந்திருக்கிறது. எமது நாட்டில் போரில் ஈடுபட்ட பிரபாகரன் கூட இந்திய நூலான பகவத்கீதையின் பல விடயங்களை அடியொற்றித்தான் அதில் குதித்தார் - என்றும் குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் குலதுங்க.


பஸ் விற்பனைக்கு
ND-xxxx இலக்கமுடைய(Semi Luxery) யாழ்-கொழும்பு (வழி இல 87) றூட் பெமிற்றுடன் விற்பனைக்குண்டு.
(37136)(6-6) தொ.பே: 072 142 4782


# நீரில் மூழ்கி மாணவன் சாவு

கொழும்பு, மே 07
தெல்தெனிய, விக்டோரியா நீர்த்தேக்கத்தில் மூழ்கி மாணவன் உயிரிழந்தான்.
மாபேரிதென்னை தமிழ் மகா வித்தியாலயத்தில் 5 ஆம் தரத்தில் கல்வி பயிலும் அமரநாத் பிரவீன் என்ற மாணவனே நண்பர்களுடன் நேற்றுமுன்தினம் காலை விக்டோரியா நீர்த்தேகத்தில் குளிக்கச்சென்றார். அப்போதே அவர் நீரில் மூழ்கி காணாமல் போனதாகவும் அவருடைய சடலம் நேற்று காலையிலேயே மீட்கப்பட்டதாகவும் தெல்தெனிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
(உ-16)

# 600 கிலோ மீன்கள் கொட்டடியில் மாட்டின

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்பட்ட மீன்கள் மனித பாவனைக்கு உகந்ததா என்பதைப் பரிசோதித்து முடிவு சொல்ல பொது சுகாதார பரிசோதகர்களுக்கு சில நாள்கள் செல்லும் என்பதனால் மீன்களை உடன் அழிக்க நீதிமன்று உத்தரவிட்டது.
தீவகத்திலிருந்து இந்த மீன்களை எடுத்து வந்த சிலர் நாவாந்துறையைச் சேர்ந்த ஒருவரிடம் விற்றுவிட்டுச் சென்றுள்ளனர் என்று அதிகாரிகள் கூறினர்.
மீன்களைக் கொழும்புக்கு அனுப்பும் பொருட்டு கொட்டடியில் உள்ள மறைவிடம் ஒன்றில் வைத்து ஐஸ் கட்டிகள் நிறைந்த பெட்டிகளில் அடைத்துக் கொண்டிருந்த போதே யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினால் மீன்கள் கைப்பற்றப்பட்டன.
சந்தேகநபரும் கைது செய்யப்பட்டார்.
மீன்களின் பெறுமதி குறைந்த பட்சம் 2 லட்சம் ரூபாய்க்கும் மேற்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.
(உ-4)


விற்பனைக்கு
(இஞ்சின் கியர் பொக்ஸ்)
TOYOTA -MITSUBISHI-ISUZU
வாகனங்களுக்கான இஞ்சின் கியர் பொக்ஸ் விற்பனைக்கு உண்டு
(4BD1,4BE1, 4BC2,4D32, 4D33, 4D34, 3L,1KZ, 2C)
என்பன விற்பனைக்குண்டு.
தொ.பே: 077 723 8615
(37173)(6-11)

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தான 11ஆம் நாள் - கிருஷ்ண கந்தோற்சவக் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# வலி.வடக்கு மீள்குடியமர்வு வழக்கு நேற்று ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 7

வலி.வடக்கு மீளக்குடியமர்வு தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனதிராசா தாக்கல் செய்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றில் நேற்றைய தினம் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கடந்த தவணை அரச தரப்பினர் முன்வைத்த ஆட்சேபனைகளுக்கு பதில் ஆட்சேபனை மனுதாரர் சார்பில் முன்வைக்கப்பட்டது.

தனது சொந்த இடமான வலி.வடக்கில் மக்களை மீளக்குடியமர்த்தக் கோரி 2003ஆம் ஆண்டு உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவினால் தாக்கல் செய்யப்பட்டது.

வலி.வடக்கு மீள்குடியமர்வை வலியுறுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியாலும் பிறிதொரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த இரண்டு வழக்குகளும் ஒன்றாக உயர்நீதிமன்றில் நேற்றையதினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், நீதியரசர்களான கே.ஸ்ரீபவன் மற்றும் ஹெட்டிகே ஆகியோர் முன்னிலையில் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கடந்த அமர்வில் அரச தரப்பால் முன்வைக்கப்பட்ட, படிப்படியாக மக்களை வலி. வடக்கில் குடியமர்த்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனைக்கு மனுதாரர்கள் சார்பில் எதிர் ஆட்சேபனை முன்வைக்கப்பட்டது.

''வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் மக்கள் வாழ்விடங்கள் அனுமதிக்கப்படாமல் அங்கு உல்லாச விடுதி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அந்தப் பகுதிகளின் காணிகளை சுவீகரிப்பதற்காக சுவீகரிப்பு அறிவித்தல்களும் ஒட்டப்பட்டுள்ளன'' என்ற எதிர் ஆட்சேபனை நேற்று முன்வைக்கப்பட்டது. (உ-5)

# கஞ்சாவுடன் கைதானவருக்கு 5 மாதங்களின் பின் பிணை

யாழ்ப்பாணம், மே.07

725 கிராம் கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 5 மாதங்களின் பின்னர் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

**2012 நவம்பர் 14 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வைத்து இவர் கைது செய்யப்பட்டிருந்தார்**

சந்தேகநபர் தொடர்பான பிணை விண்ணப்பம் யாழ். மேல் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே. விஸ்வநாதன் பிணை விண்ணப்பத்தை பரிசீலித்து பிணை அனுமதி வழங்கினார்.

2012 நவம்பர் 14 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வைத்து இவரைக் கஞ்சாவுடன் தாம் கைது செய்தனர் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டினர். இதனால் கதிர்காமம் புஸ்பதேவன் மாவத்தையைச் சேர்ந்த பாக்கியநாதன் ரமேஸ் கடந்த 5 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

அவரை 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 2 இலட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணையிலும் விடுவிக்க நீதிமன்று அனுமதித்தது. வாராந்தம் ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ். பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டது. (உ-4)

# மாணவிகளின் முகத்தை நீரில் அமுக்கிய ஆசிரியை

## வாளியைக் கழுவாததற்கு இதுவே தண்டனையாம்

யாழ்ப்பாணம், மே 7

உணவு விநியோக வாளியை கழுவ மறந்த 16 மாணவிகளை நீர் நிரம்பிய வாளிக்குள் அமுக்கி எடுத்துள்ளார் பொறுப்பாசிரியை.

இந்த அதிர்ச்சிச் சம்பவம் தென்மராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

குறித்த பாடசாலை மாணவர்களுக்கான உணவு விநியோகத்துக்கு பயன்படுத்தப்படும் வாளியை கடந்த வெள்ளிக் கிழமை மாணவிகள் கழுவ மறந்து அதனை வகுப்பறைக்குள்ளேயே விட்டுச் சென்றுள்ளனர்.

நேற்றுத் திங்கட்கிழமை பாடசாலைக்கு வந்தபோது தாம் வாளியைக் கழுவாமல் சென்றதை அறிந்த மாணவி ஒருவர், அந்த வாளியை கழுவும்பொருட்டு நீரால் நிரப்பிவிட்டு பிரார்த்தனைக்குச் சென்றுவிட்டார்.

எனினும் மாணவிகள் வாளியைக் கழுவாமல் சென்றதை கண்டுபிடித்துவிட்ட பொறுப்பாசிரியை பிரார்த்தனை முடிவடைந்ததும் தன் தண்டனைப் படலத்தை ஆரம்பித்தார். குறித்த வகுப்பைச் சேர்ந்த மாணவிகளை வரவழைத்த அந்தப் பொறுப்பாசிரியை நீரால் நிரப்பப்பட்ட வாளிக்குள் ஒவ்வொரு மாணவியின் முகத்தையும் அமுக்கி எடுத்துள்ளார். இதனால் அதிர்ச்சியும், பயமும், அவமானமுமடைந்த மாணவிகள் பாடசாலை முடியும் வரை அழுதபடியே நின்றனர்.

வீட்டுக்குச் சென்று சில மாணவிகள் பெற்றோரிடம் இது குறித்துத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக வலயக் கல்விப் பணிமனையில் பெற்றோர் முறையிடவுள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

(ந-9)

# அதிர்ந்தது விமான நிலையம் நீதிபதியின் அநாகரிகத்தால்

கொழும்பு, மே 7

நீதிபதிகள் மாநாட்டுக்காக இந்தியா சென்ற இலங்கை மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஒருவர், பெங்களூர் விமான நிலையத்தில் சக நீதிபதிகளுடன் நடந்து கொண்ட விதம் அங்கிருந்த பயணிகளை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

சக நீதிபதிகளை வார்த்தைகளால் துன்புறுத்தியதுடன், மற்றொரு நீதிபதியை தண்ணீர் போத்தலால் நீதிபதி தாக்கியதை விமான நிலையத்தில் கூடியிருந்த வெளிநாட்டு பயணிகள் பலரும் அதிர்ச்சியுடன் பார்த்தனர்.

சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் இந்த நீதிபதி சுமார் 10 நிமிடங்கள் வரை சக நீதிபதிகளைத் திட்டி விட்டு சக நீதிபதியை நோக்கி தண்ணீர் போத்தலை எறிந்துள்ளார்.

நீதிபதி ஆபாசமான வார்த்தைகளையும் பயன்படுத்தியதால் பயணிகளில் பலர் அதனைக் காதுகொடுத்துக் கேட்கமுடியாமல் சங்கடப்பட்டனர்.

மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளுக்காக கடந்த ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரை நடத்தப்பட்ட கருத்தரங்கில் பங்கேற்க இலங்கையில் இருந்து 10 நீதிபதிகள் இந்தியா சென்றிருந்தனர்.

விமான நிலையத்தில் தண்ணீர் போத்தலால் தாக்கப்பட்ட நீதிபதி, ஜனாதிபதியிடமும், தலைமை நீதியரசர் மொஹான் பீரிஸிடமும் முறைப்பாடு செய்துள்ளார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. (உ-01)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 7

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற 17 வயதுப் பிரிவு, 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

**17வயதுப் பிரிவு**

சென்.ஜேம்ஸ் கல்லூரி எதிர் சென்.ஹன்றிஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

யாழ்.மத்திய கல்லூரி எதிர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

(ந-23)

# சீரற்ற காலநிலை ஒருவாரம் நீடிக்கும்



கொழும்பு,மே 7

நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலை தொடர்ந்தும் ஒரு வார காலத்துக்கு நீடிக்கும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இடைப் பருவப் பெயர்ச்சி கால நிலை காரணமாகவே நாட்டில் மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருகிறது என்று நிலையத்தின் கடமை நேர அதிகாரி கூறினார்.

இதேவேளை, கடந்த இரண்டு நாள்கள் மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்திலேயே அதிகூடிய மழை பெய்துள்ளது. அதன் காரணமாக வத்தளை கிராம சேவகர் பிரிவில் மாத்திரம் 332 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் 4 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மழை மற்றும் வெள்ளம் காரணமாக 2 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் பிரதீப் கொடிப்பிலி கூறினார்.

சீரற்ற காலநிலை நிலவும் காலகட்டத்தில் இடி, மின்னல் தாக்கங்கள் அதிகமாக இருக்கலாம் என்பதால் பொது மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று வானிலை அவதான நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது. (ச)

சுண்டிக்குளம், நல்லதண்ணீர்தொடுவாயில்

# கடலட்டை பிடிப்பதற்கு தென்பகுதி மீனவருக்கு அனுமதி

வடமராட்சி, மே 7

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுண்டிக்குளத்தை அடுத்துள்ள நல்லதண்ணி தொடுவாயில் தென்பகுதி மீனவர்கள் கடலட்டை பிடிப்பதற்கு தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கடலட்டை பிடிக்கும் போது வெளிச்சம் பாய்ச்சியோ, டைனமற்றை வெடிக்க வைத்தோ கடலட்டை பிடிக்கக்கூடாது**

கடலட்டை பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள வடமராட்சி கிழக்கு கடற்பிரதேசத்தில் தென்பகுதி மீனவர்கள் கடல் அட்டை பிடிக்க அனுமதி கோரியதைத் தொடர்ந்து இது தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தென்பகுதியில் இருந்து கடலட்டை பிடிக்க வந்தோரின் பிரதிநிதிகள், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் அதன் 15 கிளைச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், 55 ஆவது படைப்பிரிவின் பொறுப்பதிகாரி, சுண்டிக்குளம் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, யாழ். பிராந்திய கடல் நீரியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே. கணேசமூர்த்தி தாளையடி கடற்பரிசோதகர் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டு ஆராய்ந்தனர். இரு தரப்பினர்களின் கருத்துக்களைத் தொடர்ந்து சில நிபந்தனைகளுக்கு அமைய நல்லதண்ணித்தொடுவாயில் கரையில் இருந்து 20 கிலோ மீற்றர் கடல் தூரத்தில் இரவு வேளைகளில் தற்காலிகமாக இவ்வாண்டு சீசன் காலம் வரை தென்பகுதி மீனவர்கள் கடலட்டை பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மணல்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான கடற்பிரதேசத்தின் கரையில் இருந்து நடுக்கடல் வரை தென்பகுதி மீனவர்கள் கடற்றொழில் செய்ய முடியாது. அதேநேரம் கடலட்டை பிடிக்கும் போது வெளிச்சம் பாய்ச்சியோ, டைனமற்றை வெடிக்க வைத்தோ கடலட்டை பிடிக்கக்கூடாது. அத்துடன் மீன் இனங்களின் பெருக்கத்துக்கு எவ்வித இடையூறுகளும் இன்றியே இத்தொழிலை மேற்கொள்ள வேண்டும் என கலந்துரையாடலின் போது வலியுறுத்தப்பட்டது. (ஒ-8)

# பொதுநலவாய மாநாட்டுக்கு 350 கோடி ரூபா நிதி செலவு

கொழும்பு, மே 7

நவம்பர் மாதம் நடத்தப்படவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை சிறப்பாக நடத்தி முடிக்க 3.5 பில்லியன் (350 கோடி) ரூபா செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மாநாட்டின் ஏற்பாடுகள், ஒருங்கிணைப்புக்கான செலவுகளுக்காக முதலில் 6 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர் செலவுகளைக் குறைக்க முடிவு செய்யப்பட்டது.

54 நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பங்கேற்கும் விருந்தினர்களுக்காக விடுதிகளில் 4,500 அறைகள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்களின் பயன்பாட்டுக்காக 200 சொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. மாநாடு முடிந்த பின்னர் இந்த சொகுசு வாகனங்கள் அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் பயன்பாட்டுக்காக வழங்கப்படும்.

மாநாட்டுக்கான அழைப்பிதழ்களை அனுப்பும் பணிகள் அடுத்த இரண்டு வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதுவரை எந்தவொரு நாட்டுத் தலைவரும் இந்த மாநாட்டில் பங்கேற்கப் போவதில்லை என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை என்று சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

(உ-01)

# டக்ளஸுக்கு எதிராக நோட்டீஸ் விநியோகித்தவர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 7

கடந்த சில நாள்களாக வடக்கில் பல பகுதிகளிலும் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கம் என்ற அமைப்பு ''டக்ளஸ் தேவானந்தாவை விரட்டியடிப்போம்'' என்ற துண்டுப் பிரசுரத்தை விநியோகித்திருந்தது. நேற்று இந்த அமைப்பினர் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் குறித்த துண்டுப்பிரசுர விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது மாவட்ட செயலகத்துக்கு முன்னால் முகத்தை



கறுப்புத் துணியால் கட்டியபடி வந்த சிலர் குறித்த அமைப்பினர் மீது தாக்குதல் நடத்தினர் எனவும் இதில் தமது அமைப்பைச் சேர்ந்த பு.புவிலன் என்பவர் காயமுற்றார் எனவும் அந்த அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.


(ந-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சின்னக்குட்டி நடேசன்

(ஓய்வுபெற்ற புகையிரதநிலைய அதிபர்)



யாழ்ப்பாணம், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், இல.34, திருநகர் வடக்கு, கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி நடேசன் 05.05.2013 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவகுரு - தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், மகாலக்சுமி (இளைப்பாறிய ஆசிரியை, கிளிநொச்சி மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புக்கணவரும், சசிரேகா (சவுதி அரேபியா), சர்மிலன்(கனடா), Dr. திலீபன் (மாஞ்சோலை ஆதாரவைத்தியசாலை, முள்ளியவளை), சர்மியா (தாதியல்பிரிவு யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராசன் (மிருசுவில்), யோகரத்தினம் (மிருசுவில்), பரமேஸ்வரி (மிருசுவில்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நிரஞ்சன் (Accountant-சவுதி அரேபியா) அவர்களின் அன்பு மாமனாரும் நிக்கில் அவர்களின் அன்பு பேரனும், காலஞ்சென்ற பாலசந்திரன் மற்றும் அரசரத்தினம் (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 34, திருநகர், கிளி நொச்சியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (07.05.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்று பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் திருநகர் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(திலீபன் - மகன்)

இல.34, திருநகர், கிளிநொச்சி.

(2.6)(35112)

### ஊழியர்களின் உண்ணாவிரதம் தொடர்கிறது

திருகோணமலை, புல்மோட்டை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் சிலர் பணி நீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்து இரண்டாவது நாளாக நேற்றும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்று வருகின்றது.

புல்மோட்டை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தின் முன்னாலுள்ள புல்மோட்டை பஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமானது. உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள இவர்கள் தங்களுக்கு நியமனம் வழங்க வேண்டும் என்று கோரியுள்ளனர். (சு-40)

# மரண அறிவித்தல்

## திருமதி தனலக்ஷ்மி சங்கரப்பிள்ளை

கோயிற்கடவை துன்னாலை மத்தியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தனலக்ஷ்மி சங்கரப்பிள்ளை நேற்று (06.05.2013) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வார்- மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற வல்லிபுரம் சங்கரப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், உதயகுமார் (கனடா), உருத்திரகுமார் (ஆசிரியர், யா/நெல்லியடி ம.ம வித்தியாலயம்), அசோக்குமார் (கனடா), பாமதி (பிரான்ஸ்), விஷ்ணுகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவனேசம் (கனடா), தமயெந்தி (கனடா), இராசேந்திரம் (பிரான்ஸ்), வசந்தகுமாரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரோஷன், நிவேதா, கோகுலன், ராகுலன், கீர்த்தனா, கிரிசாந், விஷ்வா, ஆகாஷ், அக்ஷன், அபிஷா ஆகியோரின் அன்புப் போர்த்தியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு- இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

கோயிற்கடவை,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்க அங்கத்தவர்

## இரத்தினசபாபதி சர்வேஸ்வரன்



அவர்கள் 06.05.2013 அன்று இறைபதமடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கு மிகுந்த மனவேதனையுடன் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கம், இலங்கை மின்சார சபை.

(37091)2:6)

# மரண அறிவித்தல்

## திருமதி தியாகராஜா நாகரெட்னாம்பாள் (கிளி)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரெட்னாம்பாள் தியாகராஜா 04.05.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கோ.தியாகராஜா (JP, ஓய்வுபெற்ற பிரதம தபாலதிபர்,முன்னாள் Manager GTZ Guest House, தலைவர், கொய்யாத்தோட்டம் ஞான செல்வ விநாயகர் ஆலயம், முன்னாள் செயலாளர், பொருளாளர் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.கிளை,பொருளாளர் AROD, தலைவர், சமூக அபிவிருத்தி மன்றம் கொய்யாத்தோட்டம், முன்னாள் தலைவர், யாழ். சிக்கன கடன் வழங்கும் சேமிப்பு சங்கம், தலைவர், கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம்)அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கோணையா-மரகதம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான மகாதேவி,இராமநாதன்(பொறியியலாளர்)மற்றும் புனிதவதி (பிரான்ஸ்), Dr.பூலோகநாதன்(UK), காலஞ்சென்ற கைலைநாதன் (சிமெந்துக்கூட்டுத் தாபனம்) மற்றும் பாலாம்பிகை (UK) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்ற Dr.மூத்ததம்பி மற்றும் புஸ்பராணி(UK), காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் Dr.பரமேஸ்வரி (UK), காலஞ்சென்ற மனோகரி(Principal)மற்றும் சிவக்குமார் (Attorney at law,UK) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், ஜெகநாதன்(UK), ஜெயராணி, குகதாசன் (South Korea), ஜெயக்குமாரன்(பிரான்ஸ்),ஜெயசோதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சரோஜினிதேவி மற்றும் செல்வநாயகி (UK), சின்னையா(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், சிமெந்துக்கூட்டுத்தாபனம்), கீத்தா (Srilanka Embassy, South Korea), சந்திரகுமாரி(பிரான்ஸ்), ஜெயக்குமார்(ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும், ஸ்ரீசயனா(UK), ராஜராஜன் (UK), ஸ்ரீகுகனியா (UK), ஜேம்ஸ்(UK),Dr.நிலக்ஷன்(UK), நிலானி, நிஷான்(East-West Marketing),நிஷாந்தன்(Accountant, Australia), நிஷாந்தினி(Technical Officer, Buildings Department),விஷ்னி(Consultant, DFCC Bank), கவித்திரா(பிரான்ஸ்),மயூரி(Technical Officer,Safrex International),கஸ்தூரி(மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சங்கவி, கிருஷாந், தரஞ்சன் ஆகியோரின் செல்லப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(08.05.2013) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று , பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை(துண்டி) இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

25, புதுவீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
021 222 6896

தகவல்:
கோ.தியாகராஜா (கணவர்)
மற்றும் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org